# ஸ்ரீராமாநுஜன் 86, 87

வருடச்சந்தா ரூ. 5



கிடைக்குமிடம் :—P. B. அண்ணங்கராசாரியர், க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சி

1956 பிப்ரவரி & மார்ச்சு மன்மதவரு தை, மாசிமீ

# ஸ்ரீராமாநுஜன் 86, 87

சென்னை ஸத்க்ரந்தப்ரகாசந ஸபையின் மூலமாக
மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 8 | 1956ஸு பிப்ரவரி, மார்ச்சு. மன்மதஸு தை மாசி | மலர் 2, 3.


## இராமாநுசநூற்றந்தாதி பாசுரங்கள்.

பற்றுமனிசரைப்பற்றி * அப்பற்றுவிடாதவரே
உற்றாரெனவுழன்றோடி நையேனினி * ஒள்ளியநூல்
கற்றார்பரவுமிராமானுசனைக் கருதுமுள்ளம்
பெற்றார்யவர்* அவரெம்மைநின்றாளும் பெரியவரே. 86

பெரியவர் பேசிலும் பேதையர்பேசிலும் * தன்குணங்கட்கு
உரியசொல்லென்று முடையவனென்றென்று * உணர்விமிக்கோர்
தேரியும்வண்கீர்த்தியிராமானுசன் மறைதேர்ந்துலகில்
புரியும்நன்ஞானம் * பொருந்ாதவரைப்பொருங்கலியே. 87

## ஸத்க்ரந்தப்ரகாசந ஸபா கார்யதர்சியின் விண்ணப்பம்.

ஸ்ரீராமாநுஜனுக்கு சந்தா செலுத்தினவர்களின் பெயர்கள் கீழ் ஸஞ்சிகைகளில் 119 லக்கமளவாக வெளியிடப்பட்டிருக்கின்றன. அந்த நபர்கள் பெரும்பாலும் முன் வருஷங்களுக்குச் சந்தா செலுத்தினவர்களேயொழிய நிகழும் 1956 வருஷத்திற்குச் செலுத்தினவர்கள் மிகச் சிலரேயாவர். 1955ஸுக்குச் செலுத்தவேண்டியவர்களுமுளர். அவர்களுக்கு நாம் தனியாகக் கடிதமெழுதப்போகிறதில்லை. தயவுசெய்து உடனே மணியார்டர்மூலம் அனுப்பிவிடவேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறேம்.

இம்மாதத்தில் சந்தாதொகையனுப்பினவர்கள்—

120 டாக்டர் B. செல்லப்பா மதராஸ்.
121 T. V. லக்ஷ்மீநாராயணர் V. M. திருமாணிக்குழி.
122 C. R. ராமஸ்வாமி அய்யங்கார் BABL, கோயம்புத்தூர்.
123 V. கோவிந்தய்யங்கார் க்ரிண்ட்லேஸ் கல்கத்தா.
124 திருநாராயணபாகவதர் விக்ரவாண்டி
125 A. S. அப்பன் அச்சந்தவிழ்த்தான்
126 S. S. நாராயணசாமி நாயுடு டோனூர்
127 ஆபி. வெங்கடாச்சாரியார் டெங்கணிகோட்டை
128 K. S. லக்ஷ்மீநாராயணனவர்கள் ஈரோடு
129 K. S. பக்ஷிராஜ அய்யங்கார் B.A., B.L., திருநெல்வேலி ஜங்ஷன்
130 P. B. Singaracharier, Advocate, Madras.

சந்தா செலுத்தவேண்டியவர்கள் 300 பேர்களுக்கு மேற்பட்டிருக்கிறார்கள். பத்ரிகையை V. P. மூலம் அனுப்பும்படி தெரிவித்தால் அப்படியே அனுப்புகிறோம். அதனால் 0—10—0 அணா அவரவர்களுக்கு நஷ்டமாகும். இரண்டணா செலவில் மணியார்டர் செய்தனுப்பிவிடுவதே மேலானது. மணியார்டர் அனுப்ப விலாஸம்

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

# நாலாயிரதிவ்யப்ரபந்தப் பதிப்பு விளம்பரம்

நாம் நாலாயிரதிவ்யப்பிரபந்த மூலம் விசேஷ அனுபந்தங்களுடன் அச்சிட்டு முடித்திருக்கிறோமென்பது சென்ற இதழில் விரிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அது இந்த ராமானுஜன் பத்ரிகை யளவில் அச்சிடப்பட்ட மிகப் பெரிய புத்தகமாகையால் விசேஷ பயிண்டு செய்யப்பட்டு வருகிறது. மார்ச்சு மாதம் முதல்தேதியிலிருந்தே இப்புத்தகம் விற்பனைக்கு வரும். இதை போஸ்டு மூலம் அனுப்பும்படி சிலர் கடிதமெழுதி யிருக்கிறார்கள். அப்படியனுப்பினால் தபால் செலவுமட்டும் இரண்டு ரூபாய்க்கு மேலாகும். புத்தகமும் கட்டுக் குலைந்துபோகும்; ஸௌரக்ஷிதமாக வந்துசேராது. ஆகவே முன்பணமனுப்பினாலுங் கூட போஸ்டு மூலம் இது அனுப்பப்படமாட்டாது. ரயில்வே பார்ஸல் மூலமாகவே அனுப்பப்படும். ஒரு புத்தகத்தை ரெயில்வே பார்ஸல் மூலம் அனுப்ப இயலாது. குறைந்தது இரண்டு புத்தகங்களுக்காவது ஆர்டர் கொடுத்தால்தான் R. P. மூலம் அனுப்பப்படும். பார்ஸல் கட்டுகிற செலவு, ரெயில்வே ரசீதை ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பும் செலவு இவற்றுக்காக அதிகப்படி ஒரு ரூபாய் ஆகும். ஆகவே 11 ரூ முன்பணமனுப்புகிறவர்களுக்கு இரண்டு பிரதி ஸௌரக்ஷிதமாகக் கிடைக்கும். மதராஸ், மதுரை, ஸ்ரீரங்கம், சேலம், ஈரோடு ஆழ்வார் திருநகரி முதலானவிடங்களில் நமது ஏஜண்டுகளிடம் இது கிடைக்கும். அந்த ஏஜண்டுகளின் பெயர்களை அடுத்த இதழில் வெளியிடுவோம்.

ஏககாலத்தில் இருபது பிரதிகள் வாங்கிக் கொள்பவர்களுக்கு [அதாவது நூறு ரூ. செலுத்துகிறவர்களுக்கு] இருபத்திரண்டு பிரதிகள் கொடுக்கப்படும். ஏககாலத்தில் நாற்பது பிரதிகள் வாங்கிக்கொள்பவர்களுக்கு [அதாவது இருநூறு ரூ. செலுத்துகிறவர்களுக்கு] நாற்பத்தைந்து பிரதிகள் கொடுக்கப்படும். இப்படிக்கு

தலைவர், க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

# தானே எழுதிய தன் சரிதை

பல பெரியோர்களின் நியமனத்தையும், பல நண்பர்களின் வேண்டுகோளையும் அநுஸரித்து அடியேனுடைய சரிதை ஒருவாறு எழுதப்பட்டுவருகிறது. இதனை நான்கு பகுதிகளாக அமைக்க உத்தேசம். முதற்பகுதியை முடித்து இவ்விதழில் வெளியிடுகிறேன். மற்ற பகுதிகளும் விரைவில் வெளிவந்துவிடும். சில மஹான்களின் திருவுருவப்படங்கள் கிடைக்காததனால் சிறிது தாமதமாகிறது. பல ஆப்தர்களுக்கு நாம் விஜ்ஞாபனபத்ரிகைகள் எழுதிக் கொண்டிருக்கிறோம். அவரவர்கள் உபேக்ஷியாமல் உருவப்படங்களை உதவவேணுமென்று ப்ரார்த்தனை. வ்யபதிஷ்டர்களும் வித்வான்களுமான மஹான்களின் திருவுருவப் படங்களை நம்முடைய வேண்டுகோளில்லாமலும் நமக்கு அனுப்பலாம். அவை க்ருதஜ்ஞதையுடன் ஸ்வீகரித்து வெளியிடப்படும். இப்படிக்கு

ப்ர. அண்ணங்கராசார்ய தாஸன்.

---

# ஓர் சோக ஸம்பவர்

திருவல்லிக்கேணியிலிருந்து வெளிவரும் ஜகன்மோகினி பத்ரிகையின் ஆசிரியரான ஸ்ரீமான் வை. மு. ஸ்ரீநிவாஸன் B.A., B.L., 4–2–56 இரவு 2–30 மணிக்கு இம்மண்ணுலகை நீத்த சோகச்செய்தியைப் பாவிக் கையினால் எழுதநேர்ந்திருக்கிறது. உலகப்பிரசித்தையான வை. மு. கோதைநாயகியம்மையின் அத்விதீய குமாரர் இவர். இளமையிலேயே மஹாமேதாவியாய் விளக்கமுற்றவர். தாய்தந்தையரையும் மனைவியையும் மக்களையும் உலகத்தையுமே சோகஸாகரத்தில் ஆழ்த்திவிட்டு வெகுவிரைவில் தமது வாழ்நாளை முடித்துக்கொண்டாரந்தோ!. எந்த நிலைமையிலும் பகவானைப் பரமதயாளுவென்று போற்றுங்குடியன்றோ நமது.

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்

ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்

# தானேயெழுதிய தன்சரிதை

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம்

**அண்ணங்கராசாரியர் எழுதியது**

திருக்குடந்தையில் வாழும்

**ஸ்ரீமத் ராவ்ஸாஹிப் S. ரங்கஸ்வாமி ஐயங்காரால்**

சென்னை ரத்தினம் பிரஸ் பிராஞ்சில் அச்சிடுவிக்கப்பட்டது

**13—1—1956**

**மன்மத ஹு போகித்திருக்கலியாணம்**

இது கிடைக்குமிடம்:

**க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.**

**இதன் விலை 1 ரூ.**

ஸ்ரீ

## அடியேனுடைய விண்ணப்பம்

(கும்பகோணம். ராவ்ஸாஹிப் S. ரங்கஸ்வாமி ஐயங்கார்.)

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் ஸ்வாமியின் திவ்ய சரித்திரத்தை 20 வருஷங்களுக்கு முன், உலகப்பிரசித்தரான K. வெங்கடசாமி நாயுடு, B.A., B.L., (அப்பா அண்டு கம்பெனி) அவர்கள் ஆங்கில பாஷையில் வெளியிட்டிருந்தார். பிறகு ஸ்ரீ ஸ்வாமியின் ஷஷ்டியப்த பூர்த்தி ஸமயத்தில் தமிழ் தெலுங்கு ஸம்ஸ்க்ருத பாஷைகளில் பலர் வெளியிட்டிருந்தார்கள். இருந்தாலும், ஸ்ரீஸ்வாமியின் சரித்திரத்தை ஸ்வாமி திருக்கையாலேயே எழுதுவித்து வெளியிட வேணுமென்று எனக்கு வெகுகாலமாக மிகவிருப்பமிருந்தது. அதனால் ஸ்ரீஸ்வாமியை அடிக்கடி பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன். 7, 8 வருஷ காலமாக அடியேன் செய்து கொண்டிருந்த பிரார்த்தனை ஸமீப காலத்தில்தான் நிறைவேறப் பெற்றது. இதை வெளியிடுகிற பாக்கியம் அடியேனுக்குக் கிடைத்தது பற்றி என்னுடைய ஆனந்தம் அளவிட முடியாதது.



இப்படிக்கு,

S. ரங்கஸ்வாமி,

112. கீழக் கடலங்குடி, திருக்குடந்தை.

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்



ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

# தானே யெழுதிய தன் சரிதை

(காஞ்சீபுரம் P. B. அண்ணங்கராசாரியர்)

தம்முடைய வரலாறுகளைத் தாமே யெழுதிக் கொள்வதென்பது உலகிற் சில பெரியார்களிடம் காண்பதுண்டு. அத்தகைய பெரியோர்களின் வகுப்பில் எந்த விதத்திலும் சேருவதற்கு உரிமையற்ற அடியேன் தன்னுடைய சரித்திரத்தைத் தானே யெழுதிக்கொள்ள ஆசைப்படுவது நகைப்புக்கு இடமானதே. இதை நன்கறிந்தவனே யடியேன். ஆயினும் சில காரணங்களினால் இதனை யெழுதத் தொடங்குகின்றேன். ஆப்தர்களான பல மஹான்கள் நிர்ப்பந்தித்து நியமித்தருளினது முதற்காரணம். பொருளல்லாத வென்னைப் பொருளாக்கிய சில மஹான்களிடத்து அடியேனுடைய நன்றி பாராட்டுதல் இப்புத்தகத்தின் மூலமாக நீண்ட காலம் விளங்கவேணுமென்னுமவா இரண்டாவது காரணம். அடியேனுடைய வாழ்க்கையில் நாற்றிசையிலும் பலபல பெரியார்களின் அன்பு ஏற்பட்டதனால் அன்னவர்களின் பெருமைகளை [உருவப்படங்களோடுங் கூட] வெளியிட்டுக் களிக்கவேணுமென்னுமவா மூன்றாவது காரணம். அடியேனது செய்கைகளில் விபரீத வுணர்ச்சி கொண்டிருக்கும் சிலருடைய மருளை மாற்றி உண்மையை உலகறியச் செய்து வைக்கவேணுமென்னு மாசை நான்காவது காரணம். இங்ஙனே மற்றும் பல காரணங்களை முன்னிட்டும் இதனை எழுதப் புகுந்தேன். விரிவாகவே யெழுத வேணுமென்னு மாவல் இருந்தும் முதலில் ஒருவாறு இதனைச் சுருக்கமாகவே யெழுதி வெளியிடுகின்றேன். இதனை நான்கு பகுதிகளாக அமைக்கின்றேன். *

## அடியேனுடைய வம்ச வரலாறு

ஆதிகாலத்தில் எம்பெருமானார் தாம் நிறுவிய வைணவக் கோட்பாடுகள் இந்நிலவுலகம் முழுதும் மேலும்மேலும் பெருகும் வண்ணம் திருவுள்ளமுகந்து நியமித்தருளின எழுபத்துநான்கு ஸிம்மாஸனாதிபதிகளுள் முடும்பை நம்பி யென்பார் ஞானம் அனுட்டானம் இவை நன்குகொண்டு இனிது வாழ்ந்திருந்தவர்; அவரது வழித்தோன்றலாகத் தேவப்பெருமாள் திருவருளுடன் தோன்றினார் பிள்ளை லோகாசார்யருடைய சிறிய தகப்பனாரின் திருப்பேரனாராகிய ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் ஸ்வாமி. காஞ்சீபுரத்துக்குள் ஒரு பகுதியான தூப்புலென்னும் தலமே அவரது திருவவதாரத்தினால் புனிதமாயது. சிறு வயதிலேயே அமோக பாண்டித்யம் பெற்று ப்ரதிவாதி பயங்கரரென்ற விருதையும் பெற்றவரான அண்ணன் ஸ்வாமி, கவிதார்க்கிக ஸிம்ஹமாய் விளங்கிய ஸ்ரீவேதாந்த தேசிகனுடைய திருக்குமாரராகிய நயினாராசாரியருடைய கடாக்ஷத்திற்கு இலக்காகி அவருடைய அருளினால் விசிஷ்டாத்வைதஸாரத்தை க்ரஹித்திருந்து, பிறகு ஸத்ஸம்ப்ரதாய ஸாரப் பொருள்களை நன்கு உணரவேண்டி உபயகாவிரியின் மத்தியில் பள்ளிகொண்டுள்ள திருவரங்கற்கு ஈடளித்த தனிப்பெருமை வாய்ந்த மணவாள மாமுனிகளின் திருவடிகளில் ஆச்ரயித்து ஸகலார்த்தங்களையுமுணர்ந்து உய்ந்தார்.

"ப்ரஸித்த: பரகோஷ்டீஷு ப்ரதிவாதிபயங்கர:,
ஸ்ரீவைஷ்ணவாநாம் கோஷ்டீஷு தத்தாஸ இதி விச்ருத:"

என்று தாமே அநுஸந்தானம் செய்துகொண்டபடி புறமதத்தவர்திரளில் ப்ரதிவாதி பயங்கரராயும், பாகவத கோஷ்டிகளில் ஸ்ரீவைஷ்ணவ தாஸராயும் விளங்கின (மூல புருஷராகிய) அப்பேராசிரியரது திருவம்சத்தில் அவதாரம் செய்து குலப்பெருமையை மிக விளக்கிய மஹான்கள் பலர். நூறு ஆண்டுகளுக்கு முன் வடஇந்தியாவில் பல நாடுகளில் திக்விஜயம் செய்து வைணவ மதத்தை மிகவும் பரவச்செய்த புஷ்கரம் (ஆத்ய) அனந்தாசார்ய ஸ்வாமிபோல்வார் பலர் இம்மரபில் உதித்த மாஞானிகள். அவ்வனந்தாசாரியர் ஸ்வாமியின் திருப்பேரனுருடைய திருக்குமாரரே ஜகத்குருவென்று புகழ்பெற்ற காதி அனந்தாசாரியர் ஸ்வாமி. அவரது அபார பாண்டித்யமும் அபரிமிதமான தேஜஸ்ஸும் வடநாட்டில் லக்ஷக்கணக்கான சிஷ்யர்களை அவர் திருவடிகளில் ஈடுபடச் செய்தன. கோயில் திருமலை பெருமாள் கோயில் திருநாங்கூர் திருவிந்தளூர் முதலான திவ்ய தேசங்களில் தீர்த்தம் மாலை மரியாதைச் சிறப்புகள் அந்நாள் தொடங்கி இந்நாள் வரையிலும் இத்திருவம்சத்தவர்களுக்கு உள்ளது. அன்றியும் மணவாள மாமுனிகள் நியமித்தருளின அஷ்டதிக்கஜாசாரியர்களுள் ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸநாதிபதியாக நியமனம் பெற்ற பெருமையும் இத்திருவம்சத் தலைவர்க்கு உள்ளது.



ஸ்ரீ உவே. ஜகத்குரு காதி அனந்தாசார்ய ஸ்வாமி
(வைகுண்டவாஸி)

அன்னவரத மரபில் தோன்றிய ஸ்ரீமத் அண்ணரங்காசாரியர் ஸ்வாமியென்பார் அடியேனுடைய திருத்தகப்பனார்; காஞ்சீபுரியில் தென்னண்டை மாட வீதியில் வாழ்ந்து வந்தார். அவர் சிறந்த கல்விக்கடலாகவும் வேதாந்த வித்யாநிதியாகவும்மிகவிளங்கியவர். அவரிடத்துக் கல்விகளைப் பயின்று தேறிய பண்டிதர்கள் பலர். அவர் அடியேனுடைய பதினன்காவது வயது நிரம்பின ஒரு வாரத்திற்குள் க்ரோதிவருஷ பங்குனித்திங்களில் க்ருஷ்ணத்வாதசியில் திருநாட்டுக் கெழுந்தருளினபடியால் அப்போது அவருடைய திருவுருவப்படம் சேமித்து வைத்துக்கொள்ள ஸௌகரிய மில்லையாயிற்று. திருத்தாயார் பரமபதமெய்தியது இற்றைக்குப் பன்னிரண்டாண்டுகட்கு முந்தியேயாகிலும் அவருடைய திருவுருவப்படமும் சேகரிக்கப்படாமலே போயிற்று. திருத்தாயார் அலர்மேல்மங்கையம்மா. தேவப்பெருமாளது கீழண்டை கோபுரவாசலில் விளங்கும் அழகிய மணவாள ராமாநுஜ ஜீயர்ஸ்வாமி மடத்தில் நாற்பது வருஷகாலம்



ஸ்ரீ பரமஹம்ஸ அழகிய மணவாள ஜீயர்ஸ்வாமி
(வைகுண்டவாஸி)

ஆஸ்தானமலங்கரித்திருந்த ஷஷ்டிஜீயர் ஸ்வாமியென்று ஸுப்ரஸித்தரான ஸ்ரீமத் பரமஹம்ஸ அழகிய மணவாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியே அடியேனுக்கு மாதாமஹர். ஸ்வாமியின் பூர்வாச்ரமஜ்யேஷ்ட புத்ரியே எனது திருத்தாயார். ஒரு மாதுலரும் சிறியதாயார்களிருவரு மிருந்தனர். அம்மூவர்க்கும் ஸந்தானங்களுண்டு. சிறிய தாயார்களிருவர்க்கும் ஒவ்வொரு திருக்குமாரர் தோன்றி நல்ல ஸ்திதியிலிருக்கின்றனர். அடியேனுடைய திருத்தகப்பனார் நாற்பத்துமூன்று திருநக்ஷத்ரமே இவ்விபூதியில் எழுந்தருளியிருந்தார். அக்காலத்தில் தேவப்பெருமாள்

ஸன்னிதி வீதியிலுள்ள வானமாமலை மடத்தில் நடந்துகொண்டிருந்த ஸம்ஸ்க்ருத பாடசாலையில் அவர் ஸாஹித்யத்திற்கும் திவ்யப்ரபந்தத்திற்கும் உபாத்யாயராக இருந்து வந்தார். அப்போது அப்பாடசாலையில் 150 வித்யார்த்திகள் ஸம்ஸ்க்ருத பாடங்கள் பயின்று வந்தார்கள். காஞ்சியில் ஸுப்ரஸித்த வித்வத் ஸார்வபௌமராக எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் திருமலை அனந்தாண்பிள்ளை (குன்றபாக்கம்) ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமியின் தலைமையில் அப்பாடசாலை நடந்து வந்தது. அந்த ஸ்வாமி, மடத்து வாசல் திண்ணையிலெழுந்தருளியிருந்து ந்யாய சாஸ்த்ரபாடங்கள் ஸாதித்து வந்தது அடியேனுக்கு நன்றாக நினைவிலிருக்கிறது. காலைவேளைகளில் தமது திருமாளிகையிலேயே ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் ஸாதித்தருள்வர். பகலில் 2-மணியிலிருந்து 4-மணி வரையில் மடத்திலெழுந்தருளி ந்யாயபாடங்கள் ஸாதித்து விட்டு, பிறகு திருமாளிகைக்கெழுந்தருளி பகவத்விஷய காலக்ஷேபம் ஸாதித்தருள்வர். அடியேனுடைய திருத்தகப்பனார்க்கு உபயவேதாந்த க்ரஹணமும் அந்தஸ்வாமி ஸன்னிதியிலேயாயிற்று. வேதாந்த விபாகத்திற்கு வித்யார்த்தியாகவும், ஸாஹித்யாதிகளுக்கு உபாத்யாயராகவுமெழுந்தருளியிருந்தார்.



—வித்வத்ஸார்வபௌம—
ஸ்ரீமத் திருமலை அனந்தாண்பிள்ளை குன்றபாக்கம்
ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி (வைகுண்டவாஸி)

மேலே ப்ரஸ்தாவித்த ஸ்ரீமத் குன்றபாக்கம் ஸ்வாமி ஸன்னிதியில் ஸாமாந்ய விசேஷ சாஸ்திரங்களை யதிகரித்து உத்தீர்ணரான வித்வான்கள் பலர் ஸப்ரஸித்தர்களாயிருந்தார்கள்; எலத்தூர் க்ருஷ்ணசார், வாயி நாராயணசார் முதலான பல (இதரமதஸ்த) வித்வான்கள் ஸ்ரீ குன்றபாக்கம் ஸ்வாமியின் வித்யார்த்திகளேயாவர். இக்காலத்தில் அந்த ஸ்வாமியின் ப்ரக்க்யாதியை விளக்கக் கூடியவராக விளங்கும் வித்வானாக ஸ்ரீமத் புரிசை க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியொருவரேயுளர். இந்த ஸ்வாமி திருப்பதி ஸம்ஸ்க்ருத காலேஜில் பலவாண்டுகள் சாஸ்த்ரோபாத்யாயராக எழுந்தருளியிருந்து இப்போது விச்ராந்தராயிருக்கின்றார்.



ஸ்ரீமதுபயவே. வித்வந்மணி திருமலை அனந்தாண்பிள்ளை
புரிசை கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி

திருத்தகப்பனார் சிறுபிராயத்திலிருந்தே "ஸ்காலித்யே சாஸிதாரம்" என்கிற ஆசார்ய லக்ஷணத்தைக் கைக்கொண்டு, வயதில் பெரியவர்களுக்குங்கூட ஆசாரத்தை நிர்தாக்ஷிண்யமாக சிக்ஷிக்குமவராயிருந்தபடியால், சிறியார் பெரியாரென்கிற வாசியில்லாமல் யாவருமே அவரிடத்தில் அஞ்சி நடுங்கிக்கொண்டிருந்த நிலையை நேரில் அநுபவித்திருக்கின்றேன்.

வானமாமலை மடத்துப் பாடசாலையில் திருத்தகப்பனாரோடுகூட உபாத்யாயர்களாக எழுந்தருளியிருந்தவர்கள், வியாகரண வேதாந்த வித்வானாகிய

ஸ்ரீமத் ஷஷ்டி கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி; ஆசாரி கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி; பலாப்புத்தூர் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி; பட்டடை ஸ்ரீநிவாஸவரதாசாரியர் ஸ்வாமி. (மாத்வர்) ராமசந்த்ராசார். இன்னும் பத்தெட்டு பண்டிதர்கள் உபாத்யாய பதவியை அலங்கரித்திருந்த நல்லடிக்காலம் அது. எனது எட்டாவது வயது முதல் பதினோராவது வயது வரையில் இப்பாடசாலையின் அநுபவம் எனக்கு விசேஷமாக இருந்தது. அப்போது ஆங்கில கலாசாலை சின்னகாஞ்சீபுரத்தில் அடியோடு இல்லாமலிருந்ததனால் இந்த ஸம்ஸ்க்ருத வித்யாலயம் அப்போது மிகச் சிறப்பாக விளங்கிற்று. காலை மாலைகளில் பாடசாலை விடும்போது கிழக்கு முகமாகத் திரும்பிப்போகிற வித்யார்த்திகளும் மேற்கு முகமாகத் திரும்பிப்போகிற வித்யார்த்திகளும் பெருந்திரளாகக் காணப்படுவர்கள். அந்தக் காட்சி இற்றைக்கும் அடியேனுடைய உள்ளத்திற் பதிந்திருக்கின்றது.

அடியேனுடைய 11, 12 வயதில் இப்பாடசாலை என்ன காரணத்தினாலோ நின்று விட்டது. அப்போது தேவப்பெருமாள் ஸந்நிதிக்குள் வஸந்தோத்ஸவ மண்டபத்தில் 'சடகோப நிலயம்' என்கிற ஸம்ஸ்க்ருத பாடசாலை நடந்து கொண்டிருந்தது. அதிலும் 40, 50 வித்யார்த்திகள் வாசித்துக் கொண்டிருந்தார்கள். காவ்ய நாடகாதிகளும் சதுச்சாஸ்த்ரமும் பாடம் நடந்து கொண்டிருந்தது. இது தவிர, திருப்புட்குழி பட்டண்ணு ஸ்வாமி, தன்றி பட்டப்பா ஸ்வாமி முதலான வித்வச்சிகாமணிகள் தம் தம் திருமாளிகைகளிலேயே சாஸ்த்ரப்ரவசனங்கள் செய்து கொண்டிருந்தார்கள். அந்த ஸமயம் காஞ்சீபுரி ப்ரபல ஸம்ஸ்க்ருத வித்யா பீடமாக விளங்கிற்று.

## அடியேனுடைய வித்யாப்யாஸம்

திருத்தகப்பனார் பரமவைதிகராகையாலும் வைதிகச்ரத்தையில் நிகரற்றவராகையாலும் அடியேனுக்கு சௌலம் உபநயனம் முதலியவற்றை ப்ராப்தகாலங்களிலேயே செய்வித்தார். திருத்தகப்பனாருக்கு கிடாம்பி கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமியென்றொரு மாதுலர் சென்னையிலிருந்தார். அவர் அதிககாலம் காஞ்சியிலேயே எங்கள் க்ருஹத்திலேயே இருப்பர். அவருக்கு க்ரந்தம் தமிழ் தெலுங்கு நாகரி ஆங்கிலம் முதலிய பல லிபிகளில் பரிசயமிருந்தது. அவர் நாலாறுமாத காலத்தில் ஸகலலிபிகளிலும் அடியேனுக்குப் பயிற்சியை யுண்டாக்கி வைத்தார். சப்தமஞ்ஜரி, ஸ்ரீராமாயண ஸங்க்ரஹம், ஸமாஸ குஸுமாவளி முதலிய பாலபாடங்களைத் திருத்தகப்பனாரே வெகு ஆஸ்தையுடன் நடத்தினார். ஸ்ரீராமாயண ஸங்க்ரஹம் வாசித்து முடிக்குங் காலத்தில் எந்த வார்த்தைகளையும் ஸம்ஸ்க்ருதத்திலேயே சொல்லவேண்டியதென்று அடியேனுக்குக் கட்டளையிட்டார் திருத்தகப்பனார்.

அக்காலத்தில் ஸம்ஸ்க்ருத ப்ரதமபாட மென்றொரு புத்தகம் பிரசாரத்திலிருந்தது. வித்வான் மேல்பாக்கம் வீராதாதாசார்ய ஸ்வாமி என்பவரால் தமிழிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது அது; அதில் முப்பத்திரண்டு கதைகள். அவற்றில் அடிபடாத சப்தமே கிடையாது. தவிர அக்காலத்தில் மைஸூர் தர்மாதிகாரி சக்ரவர்த்தி ஐயங்காரால் கதாஸப்ததி என்றொரு சிறுபுத்தகம் அச்சிடப்பட்டிருந்தது. அந்த எழுபது கதைகளிலும் ஸம்ஸ்க்ருத ப்ரயோகங்கள் மிகச் சிறந்தவை. மேலே சொன்ன இரண்டு நூல்களையும் திருத்தகப்பனார் தாமே பாடம் சொல்லி வைத்தார். அதனால் அடியேன் இளம்பிராயத்திலேயே ஸம்ஸ்க்ருத வியாஸங்கள் எழுத ஆரம்பித்தேன். அதுவுமல்லாமல் ஸ்ரீராமாயண ஸங்க்ரஹமென்னும் சிறு க்ரந்தத்தையொட்டி மணிப்ரவாள ராமாயண ஸங்க்ரஹமொன்று அப்போதே எழுதினேன்.

ஸீதாராமபதாப்ஜாநி வணங்கித் துதிசெய்கிறேன்
கிமர்த்தமென்றால் மத்க்ரந்தபூர்த்தயேதான் அஹர்நிசம்.
அயோத்யாம் நாம நகரீம் ராஜாவொருவராண்டனர்
அவர்பெயர்தானென்னென்னில் ஆஹுர் தசரதம் ஜநா:.

இவைபோன்ற இருநூறு சுலோகங்களினல் அப்போது ஸ்ரீ ராமாயண ஸங்க்ர ஹத்தை எழுதினேன். பலஇதிஹாஸபுராணகதைகளை வடமொழியிலெழுதினேன்.

அக்காலத்தில் மலையாளத்தில் பட்டாம்பியென்னுமூரிலிருந்து விஜ்ஞாந சிந்தாமணியென்கிற ஸம்ஸ்க்ருத பத்ரிகை வாரந்தோறும் வெளிவந்து கொண் டிருந்தது. அது என்னுடைய 25 வயது வரையில் நடந்து வந்தது. பன்னிரண் டாம் வயதிலேயே அதற்கு வியாஸங்கள் எழுதியனுப்ப ஆரம்பித்தேன். ஸமஸ்யை கள் கொடுப்பது, ஸமஸ்யாபூர்த்திகள் செய்வது, சித்ரப்ரச்நங்கள் கொடுப்பது, பிறர் கொடுக்கும் சித்ரப்ரச்நங்களுக்கு உத்தரங்கள் வெளியிடுவது—இப்படிப்பட்ட லேகனங்களில் ஆஸக்தியுண்டாயிற்று. அப்போது ஆசுகவியென்றும சித்ரகவி யென்றும் சில பிருதுகளை அந்த விஜ்ஞாநசிந்தாமணி பத்ரிகையின் ஸம்பாதக ரான நீலகண்ட சர்மாவென்கிற வித்வான் அப்பத்ரிகையில் வெளியிட்டிருந்தார். ஒருநாள் திருத்தகப்பனுர் ஓர் மறைபொருள் வினவைச் சொல்லி அதற்கு விடை யளிக்கும்படி நியமித்தார்; அந்த வினவை மூன்று ச்லோகங்களாக இயற்றி விடையை ஒரு ச்லோகத்தினல் வெளியிட்டேன். வினு என்னவென்ருல், ஒரு குளத்தில் சில தாமரைமலர்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் உட்காருவதற்காகச் சில கிளிகள் ஆவலோடு அங்கு வந்து சேர்ந்தன; ஒவ்வொரு மலரில் தனித்தனி ஒவ்வொரு கிளியாக உட்கார வேண்டியதென்று எண்ணி அப்படியே அக்கிளிகள் உட்காரப் பார்க்கையில் ஒரு கிளிக்கு மாத்திரம் தாமரைப்பூ கிடைக்காமற் போகவே அது வருந்திக் கிடந்தது; அதைக்கண்ட மற்ற கிளிகள் உடனே யெழுந்து ஒவ்வொரு மலரில் இரண்டிரண்டு கிளி வீதம் உட்கார்ந்தன. அப்போது ஒரு தாமரைப்பூ (கிளி உட்காராதபடிக்கு) மிச்சப்பட்டு விட்டது; எத்தனை கிளிகள் வந்தன? குளத்தில் எத்தனை தாமரை மலர்கள் இருந்தன? என்று வினு; இந்த வினுவுக்கு விடை—நான்கு கிளிகள் வந்தன; மூன்று மலர்கள் இருந்தன என்பது.

இவ்வினு விடைகளை அடியேன் ச்லோகங்களாக்கின விதம் வருமாறு:—

(வினு ச்லோகங்கள் மூன்று)

*சுகா: கேசித் கஸ்மிம்ச்சந ஸரஸி பாதோஜகுஸுமேஷு*
*அவஸ்தாநம் ப்ராப்தும் ஸகுதுகமுபாகத்ய ஸரஸீம்,*
*ப்ருதக் சைகைகஸ்மிந்நபி கமல ஏகைகசுக இதி*
*அமீ ஸங்கல்ப்யைவம் ப்ருதகுபவிசந்திஸ்ம ஸஹஸா.*
*ததச்சைகம் கீரம் கமலகுஸுமாலாபஜசுசா*
*விஷண்ணம் வீக்ஷ்யைதே ஸரபஸமதோத்தாய ஸகலா:,*
*ந்யஷீதந் ப்ரத்யப்ஜம் சுகயுகள ரீத்யா தத நு போ*
*அபூதேகம் பத்மம் சுகசரணவிந்யாஸவிதுரம்.*
*அயி போஸ் ஸஹ்ருதோ ப்ரூத கதி கீராஸ் ஸமாகதா:?*
*கமலாநி ச ஸந்திஸ்ம கியந்தி கமலாகரே?*

(இந்த வினுவுக்கு விடை யிறுத்த ச்லோகம்)

*சுகாச் சத்வார ஆயாதா:, கமலத்ரிதயம் ஸ்திதம்,*
*இத்யேவமுத்தரம் ஸாது த்ரஷ்டவ்யமிஹ பண்டிதை:.*

இங்ஙனே பலபல வெழுதினேன். அப்போது அச்சிட்டவை இன்னுமுள்ளன.

ப்ராம்மணபட்டு ரங்காசாரியர் என்றொரு பெரியவர். அவர் திருப்பதி ப்ரதி வாதிபயங்கரம் ஸ்வாமிகளின் சிஷ்யர். அதனுல் திருத்தகப்பனுரிடத்தில் பரமபக்தி கொண்டு அடிக்கடி காஞ்சீபுரம் வந்து நமது க்ருஹத்தில் வஸிப்பர்; வீணை வாசிப் பதிலும் ஸங்கீதம் பாடுவதிலும் அவர் வெகு நிபுணர். காஞ்சீபுரத்தில் வந்திருக்கிற நாட்களில் அவர் பின்மாலைவேளைகளில் ஒருநாளும் தவருமல் வீணைவாசித்துக்

கொண்டும் ஸங்கீதம் பாடிக்கொண்டும் தேவப்பெருமாளுடைய திருவீதிகளில் வலம்



—வித்வத்ஸார்வபௌம—ஸ்ரீமத் திருமலை அனந்தாண்பிள்ளை புரிசை ஸ்ரீ ரங்காசார்ய ஸ்வாமி. திருப்பதி (வைகுண்டவாஸி)

வருவர். அவருக்கு ஸாஹித்ய வ்யுத்பத்தி நன்றாகவுண்டு. அடியேன்ஏழாவது வயதிலிருந்தே ஸம்ஸ்க்ருதத்தில் கத்ய பத்யங்களெழுதுவதை அவர் வாசித்துப் பார்த்து உள்ளம் பூரிப்பர். அவருக்குத் தெலுங்கு லிபியில் தான் தாராளமான ப்ரவேசமாகையால் "இதையெல்லாம் தெலுங்கு லிபியில் எழுதிக்கொடு" என்று நிர்ப்பந்திப்பர். அப்படியே அவர்க்கு எழுதிக் கொடுப்பேன். அதை அவர் திருப்பதிக்குக் கொண்டுபோய் ஸ்ரீமத் புரிசை ஸ்வாமிக்கும் ஸ்வாசார்யர்க்கும் காண்பிப்பர். அவர்கள் அவற்றை வாசித்துப் பார்த்து "மற்றொரு ஸமயம் நீர் இவ்விடம் வரும்போது இது எழுதினவனையும் இங்கு அழைத்துக் கொண்டு வாரும்" என்று அவரிடம் சொல்லியிருந்தார்கள். அடுத்தபடியாக அவர் காஞ்சிக்கு வந்தபோது

இதைத் திருத்தகப்பனாரிடம் சொல்லி "பையனை என்னோடு கூட ஒரு முறை திருப்பதிக்கு அனுப்பவேணும்" என்று கேட்டுக்கொண்டார். திருத்தகப்பனார் அதற்கு ஸம்மதிக்கவில்லை. இப்படியிருக்கையில், திருப்பதியில் உற்றாருறவினர் விசேஷமாக இருப்பதால் ஒரு கல்யாண விசேஷத்தையுத்தேசித்து ஸஹ குடும்பமாக அவ்விடம் போய்வர நேர்ந்தது. மேலே சொன்ன ப்ராம்மண பட்டு ரங்காசார்ய ஸ்வாமியும் அங்கு வந்து சேர்ந்து, அப்போது நம்மாழ்வாருடைய ஸன்னிதியில் நடந்துகொண்டிருந்த ஸம்ஸ்க்ருதபாடசாலையில் பெரிய ஸதஸ்ஸொன்று கூட்டிவிட்டார். அவ்வூரிலுள்ள வித்வான்களையும் திரட்டி விட்டார். அங்கு ஸுப்ரஸித்த வித்வத் ஸார்வபௌம திலகராக எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் திருமலை அனந்தாண்பிள்ளை புரிசைஸ்வாமி [முன் 8-ம் பக்கத்தில் ஸேவை ஸாதிப்பவர்] ஸதஸ்ஸுக்கு அக்ராஸநாதிபதியாக எழுந்தருளியிருந்தார். அடியேன் எழுதியிருந்த கத்யபத்யச் சுருணைகளை அந்த ஸதஸ்ஸில் வாசிக்க நியமனம்



சரண்யாசார்யர்.—(ஸஹபாடிகள்.)—வாதிகேஸரி.

பெற்று வாசித்தேன். அவை அடியேனெழுதியவையென்று ஒருவர்க்கும் ப்ரத்யயமுண்டாகவில்லை. அப்போது அவர்கள் கொடுத்த சில தமிழ்க்கதைகளை அவர்களின் முன்னிலையிலேயே ஸம்ஸ்க்ருதத்தில் மொழி பெயர்த்து வாசித்துக் காட்டிய பின்பே அவர்களுக்கு நம்பிக்கையுண்டாயிற்று. அப்போது ஸ்ரீமத் புரிசை ஸ்ரீ ரங்காசார்ய ஸ்வாமி விசேஷ ஸன்மானமளித்து அமோகமான ஆசீர்வாதம் செய்தருளியது அடியேனுக்கு நித்ய ஸ்மிருதியிலுள்ளது. அதன்பிறகே அடியேன் ரகுவம்ச மேக ஸந்தேசாதிகள் வாசிக்கத் தொடங்கினேன்.

காஞ்சியில் ஸன்னிதி வீதியில் வானமாமலை மடத்தில் அப்போது மிகச் சிறந்த ஸம்ஸ்க்ருத பாடசாலையொன்று நடந்துகொண்டிருந்த விஷயம் முன்னமே விவரித்திருக்கிறேன். அப்பாடசாலையில் திருத்தகப்பனாரும் ஸாஹித்யோபாத்

யாயராக எழுந்தருளியிருந்தபடியால் அப்பாடசாலையில் சேர்ந்து எட்டாவது வயதில் ரகுவம்சம் முதலியன வாசிக்க ஆரம்பித்தேன். அப்போது பலபிள்ளைகள் ஸஹாத்யாயிகளாக இருந்தார்கள். அவர்களில் ஒருவர் கூட இப்போது இல்லை என்பது அத்யந்தசோசநீயம். வடவண்டைமாட வீதியில் ஜடப்ரோல். கோயில் கந்தாடை அண்ணன் ராமாநுஜாசார்ய ஸ்வாமியென்பாரொருவர் இருந்தார். இவருடைய திருத்தகப்பனார் சப்தகுணேத்தீபம்—ரங்காசாரியர் ஸ்வாமி என்று ப்ரஸித்தரான மிகப் பெரிய வித்வான். தாதாசார்ய வம்சஸ்தர்களில் திருப்புட்குழி அப்பா ஸ்வாமியென்று ஸுப்ரஸித்தராயிருந்த மஹான் அந்த ரங்காசார்யஸ்வாமி ஸன்னிதியிலே மஹா பாஷ்யாந்தம் வியாகரணம் அதிகரித்தாரென்று சொல்லுவர்கள். அவருடைய திருக்குமாரரான (மேலே சொன்ன) ஜடப்ரோல் ராமாநுஜாசாரியர் ஸ்வாமி ஸாஹித்ய வியாகரணங்களில் நிபுணராய் அடியேனுடைய மாதாமஹரான ஸ்ரீ. அழகிய மணவாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி ஸன்னிதியிலே பகவத் விஷயம் முதலான ஸம்ப்ரதாய க்ரந்தங்களெல்லா மதிகரித்தவர். [அவர் தாடி ராமாநுஜாசார்யரென்று ப்ரஸித்தர்] அவருக்கு மூன்று திருக்குமாரர்கள். மூவரும் அடியேனுக்கு ஸஹாத்யாயிகளாக இருந்தவர்கள். சரண்யன், வாதிகேஸரி என்கிற த்விதீயத்ருதீய குமாரர்கள் என்னோடு அதிககாலம் நெருங்கி யிருந்து இருபது வயது வரையில் கூடவே வாசித்தவர்கள். அவர்களின் உருவப்படத்தை (பக்கம் 9ல்) காண்மின். இவர்களிருவரும் விலக்ஷண மேதாவிகளாயிருந்தவர்கள். இவர்களுள் கநிஷ்டரான வாதிகேஸரி யென்பவர் மஹா மேதாவியாயிருந்தவர். உத்தம வித்வத் மணியாக விளங்கக் கூடியவராயிருக்கையில் சிறு பிராயத்திலேயே ஆசாரியன் திருவடி சார்ந்துவிட்டார். அவருடைய தமையனார்களும் அவருக்கு முன்னமே மறைந்துவிட்டார்கள்.

வானமாமலை மடத்துப் பாடசாலை நின்றுபோன பிறகு சில மாதங்கள் அகத்திலேயே திருத்தகப்பனரிடமே காவ்ய பாடங்கள் வாசித்துக்கொண்டிருந்தேன். எமது பூருவர்களுக்கு நவாபு காலத்தில் தானமாகக் கிடைத்த சுரோத்திரியக்ராமம் திருவடி ராயபுரமென்பது தூசி மாமண்டூர் ஏரி யெதிர்வாயிலுள்ளது. அதனருகில் சித்தாத்தூர் என்றொரு அக்ரஹாரம்; அதிலே சொந்தமான க்ருஹமுண்டு. [இப்போது அந்த சுரோத்திரிய க்ராமத்தை அரசாங்கத்தார் பறித்துக்கொண்டு ஏழெட்டு வருஷமாயிற்று. அதனால் சித்தாத்தூர் க்ருஹமும் விற்பனை செய்யப்பட்டு விட்டது. அந்த க்ராமமிருந்த காலத்தில் நடந்த செய்திகளை யெழுதுகிறேன்.] திருத்தகப்பனர் அடிக்கடி அந்த கிராமத்திற்கு எழுந்தருள்வர். மாதக்கணக்காகவும் அங்கே வஸிக்கும்படியா யிருக்கும். அப்போது யானும் அவ்விடத்திலேதான் வஸித்தது. அப்படி அங்கு வஸித்தகாலம் (மொத்தத்தில்) இரண்டு மூன்று வருஷங்கள் தேறும். அங்கே சில மாத்வர்களும் குருக்களும் வைதிக வ்ருத்தியில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய குமாரர்கள் மூவர் நால்வர் அங்கு எனக்கு ஸஹபாடிகளாக அமைந்தார்கள். அவர்களோடு சிறுகாவியங்களையெல்லாம் வாசித்தேன். பிறகு க்ராமவாஸத்தை அறவே விட்டு ஸ்வஸ்தானம் வந்து சேர்ந்து, தேவப்பெருமாள் ஸன்னிதிக்குள் நடந்துகொண்டிருந்த சடகோப நிலயமென்னும் பாடசாலையில் சேர்ந்து வாசிக்கத் தொடங்கினேன்.

ராமசந்த்ராசார் என்கிற மாத்வ பண்டிதர் அப்போது அங்கு ப்ரதாந உபாத்யாயராக இருந்து வந்தார். அவருடைய போதநாசக்தி மிகவும் ஆச்சரியமானது. பாடங்களை மறுபடியும் சிந்தனை செய்யவேண்டாதபடி பாடம் சொல்லிக்கொடுப்பவர் அவர். அவரிடத்தில் வாஸவதத்தா, காதம்பரீ முதலான கத்யக்ரந்தங்களை ஏழெட்டு மாதகாலம் வாசித்தேன். அப்போது ஸ்ரீமத். காதி அனந்தாசார்ய ஸ்வாமி அஸ்மத்குல கூடஸ்தரான ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா ஸந்நிதியில் வேதாந்த வைஜயந்தீ என்னும் பெயரால் ஒரு ஸம்ஸ்க்ருத பாடசாலை ஸ்தாபித்தார்.

அது மூன்று நான்கு வருஷகாலம் நடைபெற்றது. அதில், மேலே சொன்ன ராமசந்த்ராசாருடைய கநிஷ்டப்ராதாவான வித்யாசார் என்பவர் தலைமையுபாத்யாயராக நியமிக்கப்பட்டிருந்தார். காஞ்சியில் உத்தமாச்ரமியாயிருந்து ஏழெட்டு வருஷங்களுக்கு முன் பரமபதித்தவரான புதுப்பேர் இளையவில்லி. வேங்கடாசார்ய ஸ்வாமியும் ஓர் உபாத்யாயராக நியமிக்கப்பட்டார். அவரிடத்தில் ஸித்தாந்த கௌமுதீபாடமும், வித்யாசார் என்கிற மாத்வ வித்வானிடத்தில் சம்பூநாடக அலங்காரக்ரந்தங்களின் பாடங்களும் நடந்து வந்தன. இப்பாடசாலைக்கு ஸ்தாபகரான ஸ்ரீமத். உவே. காதி அனந்தாசார்ய ஸ்வாமியும் ப்ரதாநோபாத்யாயஸ்தானத்தையலங்கரித்து சாஸ்த்ரபாடங்களை ஆரம்பம் செய்தருளினர். தர்க்க ஸங்கரஹம் ஆரம்பித்து வாதக்ரந்தங்கள் வரையில் அந்த ஸ்வாமி ஸன்னிதியில் அதிகரிக்க ப்ராப்தமாயிற்று. இதைப்பற்றி மேலேயெழுதுவேன். என்னுடைய பதினைன்காவது வயது முடிந்தவுடனே திருத்தகப்பனர் திருநாடலங்கரித்தபடியால் அதுவரையிலுள்ள செய்திகளை முன்னம் எழுதுகிறேன்.

அஸ்மத்குல கூடஸ்தர் ஸன்னிதியில் வேதாந்த வைஜயந்தீ பாடசாலை ஸ்தாபித்தபோது திருத்தகப்பனரே அதன் நிர்வாஹ பாரங்களை ஏற்றுக்கொண்டு மிகச் சிறப்பாக நடத்தி வந்தார். அப்போது இப்பாடசாலை மிகவும் உன்னதமான ஸ்திதியிலிருந்து வந்தது. ஐம்பது வித்யார்த்திகளுக்குமேல் வாசித்து வந்தார்கள். 7, 8 மாதங்களுக்குள் திருத்தகப்பனர் நோய்வாய்ப்பட்டு வெளியில் நடையாட முடியாமல் திருமாளிகையிலேயே யெழுந்தருளியிருக்க நேர்ந்து விட்டது. மறுபடியும் வெளி ஸஞ்சாரமின்றியிலே [இரண்டு ஸம்வத்ஸரகாலம்] திருமாளிகையிலேயேயிருந்து திருநாட்டுக்கெழுந்தருள நேர்ந்தது. அந்த இரண்டு ஸம்வத்ஸரகாலத்தில் ஒரு ஸம்வத்ஸரம் பூர்த்தியாக திருமாளிகையிலே வித்யார்த்திகளை வரவழைத்து காவ்ய நாடகாலங்கார பாடங்களை நடத்திக்கொண்டிருந்தார். பாடசாலைகளில் நடப்பது போலவே வகுப்புவாரியாகத் திருமாளிகையில் பாடங்கள் நடந்து வந்தன. ஸ்ரீவைஷ்ணவர்கள் மட்டுமல்லாமல் ஸ்மார்த்த மாத்வர்களும் வந்து வாசித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது எனக்கு சிசுபாலவதகாவ்ய பாடம் நடக்கிறது. மேல் வகுப்பில் சிலர் நைஷதம் முதலியன வாசிக்கிறார்கள். அதற்கும் மேல் வகுப்பில் சிலர் அநர்க்கராகவம் [முராரி நாடகம்] வாசிக்கிறார்கள். க்ருஹத்திலேயே பாடம் நடப்பதால் இதரர்கள் பாடம் வாசிக்கும்போதும் நான் கூடவே உட்கார்ந்திருப்பேன். திருத்தகப்பனர் கல்லும் கரையும்படி பாடம் சொல்லுகிறவராகையால், எவ்வளவு பெரிய ச்லோகங்களாயிருந்தாலும் வாசிக்கும்போதே கண்டபாடமாய்விடும். நைஷதம் வாசிக்கிறவர்களோடும் முராரி வாசிக்கிறவர்களோடும் யான் கூடவேயிருந்து பாடம் கேட்டுக்கொண்டிருப்பது வழக்கமாகையால் அந்தப் பாடங்களில் வரும் ச்லோகங்களும் எனக்குப் பெரும்பாலும் கண்டபாடமாய்விடும்.

இப்படி யிருக்கையில், மைஸூரில் பண்டிதரத்னமென்று ப்ரஸித்தரான ஸ்ரீமத் கஸ்தூரி ரங்காசாரியர் ஸ்வாமி திருமலை யாத்திரையாக வெழுந்தருளினவர் காஞ்சீபுரிக்கும் விஜயம்செய்திருந்தார். அவரோடுகூட மைஸூர் அரசாங்கத்து அதிகாரிகளும் சிலர் வந்திருந்தார்கள். தேவப்பெருமாள் ஸன்னிதிக்குள் நடந்து வரும் சடகோப நிலய பாடசாலையின் நிர்வாஹகரான ஸ்ரீ சாமா திருமலை தாதாசார்யருடைய க்ருஹத்தில் அவர்கள் தங்கியிருந்து அந்த பாடசாலையில் ஒருநாள் பரீக்ஷாஸதஸ்ஸு நடத்தினர்கள். அப்பாடசாலையில் வாசிக்கிற வித்யார்த்திகளை மட்டுமல்லாமல் பிறவிடங்களில் வாசிக்கிற (ஸம்ஸ்க்ருத) வித்யார்த்திகளையும் வருவித்துப் பரீக்ஷை நடத்தினர்கள். அதற்கு அடியேனும் போயிருந்தேன். உத்துங்கவித்யார்த்திகளைத் தனியாகவும் கீழ்வகுப்பு வித்யார்த்திகளைத் தனியாகவும் உட்கார வைத்துப் பரீக்ஷை நடத்தி வருகிறார்கள். முராரி நாடகத்தில் பரீக்ஷை நடந்து கொண்டிருக்கிறது. அதில் முதல்அங்கத்தின் முடிவிலுள்ள “யதிந்தோரந்வேதி வ்யஸந

முதயம் வா நிதிரபாம்" என்கிற சுலோகத்தில் ஓர் உத்தமவித்யார்த்தி பரீக்ஷை செய்யப்படுகிறார்; அவர்க்கு ச்லோகமே உபஸ்திதியில்லை. அதனால் அவர் மிகவும் சிரமப்படுகிறார். அப்போது சிறுமாணக்கர்திரளில் உட்கார்ந்திருந்த யான் "அதை நான் சொல்லுகிறேன்" என்றேன். அப்பாடசாலையின் தலைமையுபாத்யாயரான சாமா. திருமலை தாதாசாரியர், அடியேன் ஏதோ வம்பு பேசுவதாக நினைத்து "கழுதே! வாயைமூடியிரு" என்று அதட்டினார். பரீக்ஷகரான கஸ்தூரி ஸ்வாமி "சொல்லப்பா! பார்ப்போம்" என்றார். உடனே யெழுந்து அந்த ச்லோகத்தைப் பூர்த்தியாகச் சொல்லி அர்த்தமும் தாத்பரியமும்விரியச்சொல்லி அதில் இரண்டாவது பாதத்தில் "ஜயதி ஜநிகர்த்து: ப்ரக்ருதிதா" என்ற விடத்திற்குச் சொல்லவேண்டிய "ஜநிகர்த்து: ப்ரக்ருதி:" என்னும் வியாகரண ஸூத்ரத்தின் விஷயங்களையும் சொல்லி முடித்தேன். அப்போது அடியேனுக்கு வயது பன்னிரண்டானாலும் பார்ப்பவர்களுக்கு 7, 8 வயதுதான் மதிப்பிருந்தது; பரமாணுவென்றே சிலர் அழைப்பதுமுண்டு. அந்த நிலைமையில் யான் முராரி நாடகச்லோகத்தைச் சொன்னதும், அதன் பொருளை உபந்யாஸ வகையில் உரைத்ததும் அவர்களுக்கு மிக மிக வியப்பாக இருந்தது. "காவ்ய பாடம் வாசிக்கிற உனக்கு இந்த ச்லோகம் எப்படித் தெரிந்தது?" என்று கஸ்தூரி ஸ்வாமி கேட்டார். "என் க்ருஹத்தில் எனது தகப்பனரிடத்தில் பலபேர்கள் வாசிக்கிறார்கள்; அவர்களில் முராரி நாடகம் வாசிப்பவர்களு முண்டு; அவர்கள் வாசிக்கும்போது நான் கூடவிருந்து கேட்டுக்கொண்டிருப்பது வழக்கம்; அதனால் தெரிந்தது" என்றேன். "அவரவர்கள் வாசிக்கிற எல்லா க்ரந்தங்களிலும் நீ பரீக்ஷை சொல்லுவாயா?" என்று கேட்டார்; "நிச்சயமாகச் சொல்ல முடியாது; அனேகமாய்ச் சொல்லுவேன்; கேட்டுப் பார்க்கலாமே" என்றேன். பிறகு மற்ற வித்யார்த்திகளை விட்டுவிட்டு என்னை மாத்திரம் விசேஷமாகப் பரீக்ஷித்தார்கள். அவர்கள் த்ருப்தி யடையும்படியாகவே சொல்ல இயன்றது.



ஸ்ரீமத் பண்டிதரத்நம்
கஸ்தூரி ரங்காசார்யஸ்வாமி, மைஸூர்.

பிறகு பரீக்ஷிதர்களுக்கு ஸன்மானம் செய்யும்போது, ஒரு ரூ. இரண்டு ரூ. மூன்று ரூ. உத்தரீயம், புத்தகம்......இப்படியாகக் கொடுத்தார்கள். அடியேனுக்கு இரண்டு பவுன் கொண்ட டாலர் ஒன்று கொடுத்தார்கள். அதைக்கொண்டு தாய் தந்தையர் எனக்குத் தங்கவளை செய்வித்துக் கரபூஷணம் போட்டார்கள். அதை யான் 26, 27 வயது வரையில் அணிந்துகொண்டிருந்தேன். அதனுல் "தங்கக் காப்பு அண்ணு" என்றே எனக்குப் பெயர் வழங்கி வந்ததப்போது. காவ்ய நாடக அலங்கார க்ரந்தங்களை மேல் வகுப்பினர்கள் வாசிக்கும்போது உடனிருந்து கேட்டது, பிறகு அந்த க்ரந்தங்களை யெல்லாம் தனியாகவும் வாசித்தது ஆகிய விவற்ருல் அடியேனுக்கு காவ்ய—சம்பூ—நாடக அலங்கார க்ரந்தங்களின் உபஸ்திதி அதிகமாகவுண்டாயிற்று. இடையில் பலவருஷங்கள் அவற்றை ஸ்மரிக்க ப்ரஸக்தி யில்லாமலிருந்துங்கூட இற்றைக்கும் அவற்றின் உபஸ்திதியைப் பெரும்பாலு முடையேன். இவ்விஷயத்தில் அடியேன் மூவரிடத்தில் தினந்தோறும் க்ஷணந் தோறும் உபகாரஸ்மிருதி செலுத்திக்கொண்டிருக்கிறேன்; 1. திருத்தகப்பனுர்; 2. (மாத்வ) ராமசந்த்ராசார்; 3. அவருடைய ஸஹோதரர் வித்யாசார் ஆகிய இம் மூவரும் என்னுடைய நித்ய க்ருதஜ்ஞதா பாத்ரபூதர்கள். திருத்தகப்பனுர் சொல்லிக்கொடுத்ததில் ஆச்சரியமில்லை; ராமசந்த்ராசாரும் வித்யாசாரும் புத்ரநிர்விசேஷமாகப் பாடங்கள் சொல்லிவைத்ததை நான் நினையாத க்ஷணமில்லை. அவர்களுடைய போதநாசக்தி நிகரற்றது. அதைப்பற்றி எவ்வளவு எழுதினுலும் அடியேனுக்கு த்ருப்தி யுண்டாகமாட்டாது. வித்யாசார் என்பவரிடத்தில் தான் அடியேன் அதிகமாக வாசித்தது. அவர் எங்களுடைய வீதிக்குப் பின்புறத்திலுள்ள வேகவதித் தெருவில் வாழ்ந்து வந்தவர். அவர்க்கு ஒரு புத்திரன் மட்டுமிருந்தான்; அவன் அகாலத்தில் மரணமடைந்ததனுல் ஒரு மாதம் புத்ர சோகத்தினுல் வருந்திப் பாடசாலைக்கு வராமல் க்ருஹத்திலேயே யிருந்தார். அந்த ஸமயத்திலும் என்னைத் தம்முடைய க்ருஹத்திற்கு வரவழைத்துப் பரமப்ரீதியோடு பாடஞ் சொல்லுவர். "அண்ணு! எனக்கு நீதான் புத்திரன்" என்று வேளைதோறுஞ் சொல்லுவர். விச்வகுணதர்சம், வரதாப்யுதய மென்கிற ஹஸ்திகிரி சம்பூ, உத்தரசம்பூ, காளிதாஸ நாடகத்ரயம், பவபூதி நாடகத்ரயம், குவலயா நந்தம் இப்படி அனேக க்ரந்தங்களை அவர் அவலீலையாகப் பாடஞ்சொல்லிக் கொடுத்தார்.

ராமசந்த்ராசாருக்கு சாஸ்த்ரபாண்டித்யம் அதிகம்; வித்யாசாருக்கு ஸாஹித்ய பாண்டித்யம் அதிகம். ராமசந்த்ராசாரிடத்திலும் ஸாஹித்ய பாடங்கள் வாசிக்க ப்ராப்தமானதுண்டு. அப்போது அவரால் அநேக சாஸ்த்ரமரியாதைகள் போதிக்கப்பெற்றேன். திருத்தகப்பனுருடைய வ்யுத்பத்தியும் ஞாபகசக்தியும் அப்ரதிமமானது, அபரிமிதமானது. பாடஞ்சொல்லுகிற ஸமயம் போக இதரஸமயங்களிலுங்கூட நாநா க்ரந்த ஸம்பந்திகளான பல விஷயங்களையுரைத்துக்கொண்டேயிருப்பர். அந்த கால விசேஷங்களை நினைக்கும்போதெல்லாம் "தே ஹி நோ திவஸா கதா:" என்கிற பவபூதி ச்லோகம் நினைவுக்குவந்து கண்ணீர் பெருகும். வேறெங்குங் கேட்கமுடியாத விநோதகதைகளையும் விசேஷமாக ஸாதிப்பர் தகப்பனுர். அவருடைய அநுபவம் எனக்குப் பதினுன்கு வயது வரைக்குமே யிருந்தாலும், ஒரு க்ஷணங்கூட அவர் என்னை யகலவிடாமல் இரவும் பகலும் அருகேயே வைத்துக்கொண்டிருந்து "பணிமானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்ட" என்று (திருவாய்மொழியில்) நம்மாழ்வார் ஸாதிக்கிறபடி சிக்ஷித்த விதங்கள் வாசாமகோசரம். "எண்ணெய்க் குடத்தையுருட்டி இளம்பிள்ளை கிள்ளியெழுப்பி" என்றும் "கன்றுகளோடச் செவியில் கட்டெறும்பு பிடித்திட்டு" என்றும் "திருவுடைப் பிள்ளை தான் தீயவாறு தேக்கமொன்றுமிலன் தேசுடையன், உருக வைத்த குடத்தொடு வெண்ணெய் உறிச்சி யுடைத்திட்டுப் போந்து நின்ருன்" என்று மிவ்வாருகக் கண்ணபிரானுடைய பால்ய சேஷ்டைகள் அநுஸந்திக்கப்

படுவதுபோல அடியேனுடைய பால்ய சேஷ்டைகளும் ஒரு பாரதத்திற்குப் போதும். உரலோடாப் புண்டிருந்த தண்டனைதான் கண்ணனுக்கு நாம் கேட்பது; அதற்கு மேலாகவும் அடியேன் பட்டதுண்டு; இடுப்பிலே தாம்பைக் கட்டிக் கிணற்றிலே தோய்ப்பர்திருத்தகப்பனார். ஏக புத்திரனாகையாலே *செல்வத்தினால் வளர் பிள்ளையென்கிற பெருமைக்கும் குறையில்லை. *प्रेम्णाऽथ दामपरिणामजुषा बबन्ध— ப்ரேம்ணாத தாமபரிணமஜுஷா பபந்த* என்று [அதிமாநுஷஸ்தவே] கூரத்தாழ்வானருளிச்செய்தது போல ப்ரேம பரீவாஹமான தண்டனைகளுக்கும் குறையில்லை. *அறியு மூலகெல்லாம் யானேயுமல்லேன்* என்று பொய்கையாழ்வாரருளிச் செய்ததுபோலத் திருத்தகப்பனார் செய்தருளின சிக்ஷைகள் அக்காலத்தில் ஊரும் நாடு மூலகமுமறிந்தவை. ஹிதபரர்களில் தலைசிறந்தவ ரென்பதை அப்போதே யறிந்தவனடியேன். அவர் அடியேனுக்குக் கற்பித்த ஸ்தோத்ர பாடங்கள் எண்ணிறந்தவை. முதலில் வேதாந்த தேசிக ஸ்தோத்ரங்களை யெல்லாம் கற்பித்தார்; பிறகு ஆளவந்தார் ஆழ்வான் பட்டர் முதலான ஸகலாசார்ய ஸ்தோத்ரங்களையும் கற்பித்தார். இவற்றைப் பின்மாலைவேளையிலும் இரவிலும் சொல்லிக்கொடுப்பது வெகு அற்புதமாயிருக்கும். அப்போது அச்சுப்புத்தகமில்லை; எழுதிக்கொடுப்பர்.

என்னுடைய அத்தையின் குமாரனொருவன் அக்காரம்கிருஷ்ணஸாமி யென்பவன் மூன்றாவது க்ருஹத்திலேயே யிருந்தான். அவனை ஆங்கிலம் படிக்கவைத்தார்கள். அவன் ஸ்கூலுக்குப் போகிற காலம் தவிர மற்ற காலங்களில் என்னோடு கூடவேயிருந்து ஸகல ஸ்தோத்ரங்களையும் சந்தை சொல்லிக்கொண்டான். அவன் சிலவாண்டுகளில் ஆசாரியன் திருவடி சேர்ந்துவிட்டான். திவ்யப்ரபந்தங்களில் பெரும்பாகம் திருத்தகப்பனாரிடத்திலேயே அதிகரித்தேன். அவர் திருநாடலங்கரிப்பதற்குச் சில மாதங்கள் முன்னமேதான் அடியேனுக்குத் திருவிலச்சினை [சக்ராங்கனம்] ப்ரஸாதித்தருளினார்; அதனால் திருவாய்மொழியாயிரம் மட்டும் அந்யத்ர அதிகரிக்க நேர்ந்தது. முமுக்ஷுப்படி ஸ்ரீவசந பூஷணம் முதலிய ரஹஸ்யங்களைத் தாமே சந்தை சொல்லுவித்துக் கண்ட பாடம் செய்விக்கவேணுமென்று திருத்தகப்பனார் மிகவும் பாரித்தார். அப்போது திருமேனியில் அசக்தி அதிகமாயிருந்தபடியால், அந்த ஸமயத்தில் அண்ணாஸன்னிதியில் திருவாராதன கைங்கரியம் பார்த்துக்கொண்டிருந்த ஸ்ரீ உ.வே. குவளை பார்த்தஸாரதி ஐயங்காரென்பவரை நியமித்து அவர் மூலமாக அதிகரிப்பித்தருளினார். அந்த ஸ்வாமி நாலாயிர திவ்யப்பிரபந்தங்களிலும் ரஹஸ்ய க்ரந்தங்களிலும் (மூலத்தில்) மஹாநிபுணர். ஆசார்ய ஹ்ருதயம் சந்தையாரம்பித்து நடந்துவருகையில் திருத்தகப்பனார்க்குத் திருமேனியில் அசக்தி அபிவிருத்தியடைய ஆரம்பித்தது. அப்போது ஸ்ரீபெரும்பூதூருக் கெழுந்தருளி ஸ்வாமியை மங்களாசாஸனம் செய்துவரவேணுமென்கிற ருசி உத்கடமாக விளைந்திருந்தது. அப்போது மோடர்கார் தலைகாட்டியிராத ஸமயம். குதிரை வண்டியில் போய்வர அதிர்ச்சியை ஸஹிக்கமாட்டாத நிலைமை; இந்நிலையில் அவ்வளவுதூரம் போய்வரவேணுமென்கிற உத்கண்டை வேண்டாமென்று பலர்சொல்லியும் கேளாமல் மாட்டுவண்டியை அமர்த்திக்கொண்டு நிதானமாகச் சென்று அவ்விடம் சேர்ந்தாயிற்று. அடியேனும் பிதாமஹியும் கூடவே சென்றிருந்தோம். அப்போது அங்கு குருபுஷ்யோத்ஸவம் நடந்து கொண்டிருந்ததாக ஞாபகம். அப்போது அவ்விடத்தில் ஸ்ரீமத். நியாய வேதாந்த மஹாவித்வத்வரேண்யரான குண்டலம் நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி விசேஷ வைபவத்தோடு எழுந்தருளியிருக்கிறார். அங்கு நடந்த ஓர் செய்தியைத் தெரிவிக்கிறேன் கேண்மின். திருவுள்ளூர் ஸமீபத்தில் பாலவேடு என்றொரு அக்ரஹாரமாம். அவ்வூரில் ரங்கராமாநுஜாசாரியார் என்றொரு வித்வான். அவர் வடகலை ஸம்பிரதாயஸ்தர்; ஸ்ரீபெரும்பூதூரில் விசேஷோத்ஸவ ஸந்தர்ப்பங்களில் அவர் அவ்விடம் வருவது வழக்கமாம். வருகிறபோதெல்லாம் அங்குள்ள வித்வான்களோடு ஸம்ப்ரதாயார்த்த சர்ச்சைகள்

செய்வராம். அந்த வழக்கப்படி அன்றைக்கு அவர் அவ்விடம் வந்திருந்து, ஸ்வாமி திருவீதிப்புறப்பாடு நடைபெறும்போது மேலேசொன்னகுண்டலம் ஸ்ரீமத் ஸ்வாமியோடு சர்ச்சை செய்துகொண்டிருக்கிறார். குண்டலம் ஸ்வாமியின் பாண்டித்யம் வாசாமகோசரம்; ஸர்வதோமுகமானது. அந்த ஸ்வாமி தெலுங்கு தேசத்திலே அவதரித்தவராயினும் நெடுநாள் ஸ்ரீபெரும்பூதூரிலே வஸித்து ஸதாசார்ய ஸேவைபண்ணி ஸத்ஸம்ப்ரதாய ரஹஸ்யார்த்தங்களை மிக நன்ருக ஆழ்ந்து அதிகரித்தவர்; ஸாமாந்யசாஸ்த்ரங்களிலோ நிகரற்ற ப்ரசண்ட வித்வான் அந்த ஸ்வாமியை சதுச்சாஸ்த்ரபண்டிதரென்று சொல்லுவர்கள். அது பற்றி வியப்பில்லை. அவர் நமது திராவிட வேதாந்த ரஹஸ்ய ஸம்பிரதாயங்களிலும் மஹாப்ராஜ்ஞராக எழுந்தருளியிருந்தது மிகவும் வியக்கத்தக்கதாயிருந்தது. அந்த ஸ்வாமியோடு, மேலே சொன்ன பாலவேடு பண்டிதர் வாதம் செய்ய வந்தால் "விவாதச்ச விவாஹச்ச ஸமயோரேவ சோபதே" என்பதை யறிந்த மஹான்கள் அந்த ஸ்வாமியினுடைய வித்யார்த்திகளிடத்திலே அந்த பாலவேடு பண்டிதரைக்கொண்டு விடுவர்களாம்.



மஹாவித்வத்வரேண்ய குண்டலம். நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி ஸ்ரீபெரும்பூதூர்.

அக்காலத்தில் குண்டலம் ஸ்வாமி ஸன்னிதியிலே ஸாமாந்ய விசேஷ சாஸ்த்ரங்களைப் பலர் அதிகரித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது அவ்விடத்து ஸம்ஸ்க்ருத பாடசாலையில் ஏறக்குறைய நூறு வித்யார்த்திகள் நாநாதேசங்களிலிருந்து வந்து வாசித்துக் கொண்டிருந்தார்கள். உள்ளூரிலும் பலர் "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்னும்படிக்கு நிதர்சநமாக வித்யார்த்தி தசையிலேயே உத்துங்க வித்வான்களென்னும்படி யிருந்தார்கள். அன்னவர்களுள் அப்போது

ஸ்ரீமத். ஆஸூரிராமாநுஜாசார்ய ஸ்வாமி ப்ரதமபரிகணநீயராகவிருந்தார். இவ்வுலகின் பாக்ய விசேஷத்தினுல் இந்தமஹாஸ்வாமி இற்றைக்கும் ஸ்ரீபெரும்பூதூரில் பாங்காக எழுந்தருளியிருந்து உபயவேதாந்த ப்ரவசனத்தைத் தமது திருமாளிகையிலேயே மிகநன்ருகச் செய்து வருகிருர்.



ஸ்ரீ தத். உவே வித்வத் ஸார்வபௌம. ஆஸூரி ராமாநுஜாசார்ய ஸ்வாமி ஸ்ரீபெரும்பூதூர்.

திருத்தகப்பனுர் ஸ்ரீ பெரும்பூதூரெழுந்தருளியிருந்தவன்று, பாலவேடு பண்டிதர் ஸ்ரீமத் குண்டலம் ஸ்வாமியோடு வாதிக்க ஆசைப்பட்டு ஏதோ ஆரம்பித்தார். அப்போது அடியேன் பதினுன்காவது வயதிலிருப்பவனுகையாலும், ஸம்ப்ரதாய மார்க்கத்தில் ப்ரவேசமேயில்லாதவனுகையாலும், விஷயமின்னதென்றே தெரிந்து கொள்ள முடியாதவனுயிருந்தேன். அவருக்கு ஸ்ரீமத் குண்டலம் ஸ்வாமி சிலவார்த்தைகள்மட்டும் ஸாதித்துவிட்டு அவரை ஆஸூரிஸ்வாமியிடம் காட்டிக் கொடுத்துவிட்டுத் தாம் இயல் கோஷ்டிக்கு எழுந்தருளிவிட்டார். வேத பாராயண கோஷ்டிக்குப் பின்னுலே இவ்விரண்டு ஸ்வாமிகளுக்கும் சர்ச்சை நடந்து வருகிறது. க்ரமேண வேடிக்கை பார்ப்பதற்குப் பலர் கூடிவிட்டார்கள். அந்தத் திரளில் அடியேனுமிருந்து கொண்டு வேடிக்கை பார்க்கிறேன். ஸம்ப்ரதாய விஷயங்களை முதன் முதலாக அடியேன் கேட்கப் பெற்ற ஸமயம் அதுதான். ஆஸூரி ஸ்வாமி அப்போது ஏறக்குறைய இருபத்தைந்து திருநக்ஷத்ரமாயிருப்பர். அப்போதே இவர் மஹாவாவதூகராதலால் பாலவேடு பண்டிதர்

வாயெடுக்கவொட்டாதபடி விஷயங்களைப் புங்காநுபுங்கமாகத்*தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல் வர்ஷித்தவதிசயம் என்னுள்ளத்துள் நின்றுலாகின்றது. அப்போதுதான் அடியேனுக்கு முதன்முதலாக ஸம்ப்ரதாயார்த்தங்களில் ருசி ஏற்பட்டது. அந்தஸமயத்தில் எம்பார் ஜீயர்மடத்தில் தோட்டம் ஜீயர்ஸ்வாமி யென்றொரு உத்தமாச்ரமி யெழுந்தருளியிருந்தார். அவர் விசேஷ பாண்டித்யமுடையவரல்ல ராயினும் ஒன்றான எம்பார் ஜீயர் ஸ்வாமியிடத்தில் பஹுச்ருதராய் ஸம்ப்ரதாய க்ரந்தங்களை வெகு ரமணீயமாக ப்ரவசனம் செய்து கொண்டிருந்தார். அதே வீதியில் ஸ்ரீமத். காழியூர். ஸ்ரீ ரங்காசார்ய ஸ்வாமியும் குண்டலம் ஸ்வாமியின் க்ருபா பாத்ரபூதராய் அவ்விடத்துப் பாடசாலையில் சாஸ்த்ரோபாத்யாய பதவியை யலங்கரித்துக்கொண்டு தமது திருமாளிகையில் வேதாந்த ப்ரவசநம் செய்துகொண்டிருந்தார். இப்படிப்பட்ட மஹான்களின் அருள் நோக்கத்திற்கும் ஆசீர்வாதத்திற்கும் அடியேன் அப்போதே இலக்காகப் பெற்றேன். திருத்தகப்பனுர் அப்போது இரண்டு நாள் ஸ்ரீபெரும்பூதூரில் எழுந்தருளியிருந்து ஸேவித்துவிட்டுத் திரும்பி ஸ்வஸ்தானம் சேர்ந்தாயிற்று.



ஸ்ரீமத் உவே. காழியூர் ஸ்ரீ ரங்காசார்ய ஸ்வாமியின் காலக்ஷேப கோஷ்டி (ஸ்ரீபெரும்பூதூர்)

இது தைமாதத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி. பிறகு அடுத்த பங்குனித்திங்களில் திருநாடலங்கரித்தாயிற்று. அவருடைய சிகித்ஸைக்காக தஞ்சாவூரிலிருந்து ஒரு முதலியார்

முன்னமே வந்திருந்து நமது க்ருஹத்திலேயே போஜனம் செய்து கொண்டு திருத்தகப்பனருக்கு தீவிரமான சிகித்ஸைகள் நடத்திவந்தார். அவர் ஆங்கிலத்தில் பெரிய புலவர். விவகாரம் என்பது அவருடைய பெயர். அவர் வாயெடுத்தால் வார்த்தைதோறும் விவகாரம், விவகாரம் என்பர். அதனலேயே அவர்க்கு அந்தப் பெயர் வழங்கினதுபோலும். அவரிடத்தில் ஆங்கிலம் படிக்கும்படி திருத்தகப்பனர் எனக்குக் கட்டளையிட்டார். ஆங்கிலத்தில் மிகவும் வெறுப்புடையவர் திருத்தகப்பனர். அந்த பாஷையில் ப்ரவேசலேசமும் கூடாதென்று கடுமையாக ஸாதித்துக் கொண்டிருந்தவவர் என்ன காரணத்தினலோ அந்த சிகித்ஸகரிடத்தில் ஆங்கிலம் வாசிக்க நியமித்ததுமல்லாமல் அவரிடத்திலும் அடிக்கடி சொல்லுவர்—"வைத்யரே! உம்முடைய சிகித்ஸையினல் எனக்கு யாதொரு பலனும் ஏற்படப் போகிறதில்லை; பையனுக்கு இங்கிலீஷ் சொல்லிக்கொடுத்த பெருமையையாவது நீர் அடைய வேணும்" என்று. அதனல் அந்த வைத்யர் வெகு ச்ரத்தையுடன் எனக்கு ஆங்கிலம் சொல்லிக்கொடுத்தார். நாலைந்து மாதந்தான் அது கற்றது. நான் ஆங்கிலமெழுதுவதைப் பார்க்கும் நண்பர்கள் "நீர் B.A., பாஸ் செய்திருப்பீரோ? M.A. பாஸ் செய்திருப்பீரோ?" என்று என்னைக் கேட்பதுண்டு. உண்மையில் அந்த பாஷையில் எனக்கு அதிஸ்வல்ப பரிசயமேயுள்ளது. வருகிற தந்திகளை வாசிக்கவும், பதில் தந்தியெழுதவும், சிறு தபால்களை வாசித்துத் தெரிந்துகொள்ளவும் மட்டுமே அடியேனுக்கு ஆங்கில வுணர்ச்சி யுள்ளது. இவ்வளவுகூட இல்லாமலிருந்தால் என்னுடைய இப்போதைய கார்ய நிர்வாஹங்களுக்கு மிகவும் சிரம மேற்பட்டிருக்கும். இது ஏற்படாமைக்காகவே திருத்தகப்பனர் தம் இயல்பை மாற்றிக்கொண்டு ஆங்கிலம் கற்க எனக்குக் கட்டளையிட்டாரென்று மகிழ்ந்து வருகிறேன். இந்த ஆங்கிலப் பயிற்சியை மேன்மேலும் அபிவிருத்தி செய்து கொண்டால் மிக நன்று என்று பல ஆப்தர்கள் நியமிப்பதுண்டு; எனக்கும் ஆஸ்தையுண்டு. எம்பெருமான் திருவுள்ளமில்லையென்றே கருதுகின்றேன்.

க்ரோதிஹு மாசி மாதத்திலிருந்து திருத்தகப்பனருடைய திருமேனியில் கிலேசம் அதிகரிக்கவாரம்பித்தது. ஆனாலும் அவருடைய நித்யகர்மாநுஷ்டானங்களுக்கு ஸ்வல்பலோபமும் நேர்ந்ததில்லை. அவர் த்வாதசோர்த்வ புண்ட்ரமணியாமல் ஒருநாளுமிருந்ததில்லை. அவருடைய திருமேனி ஸ்வர்ணச்சாயையை வென்றிருக்கும். அவர் திருப்பரிவட்டம் தரிக்குமழகும் பன்னிருநாமம் அணியுமழகும் நிகரற்றது என்னலாமத்தனை. அவர் திருவீதியில் நடந்தெழுந்தருளும்போது கண்டால் ஸ்வர்ணவிக்ரஹமொன்று கைகால் முளைத்துச் செல்லுகின்றதென்றே பலரும் பேசலாயிருக்கும். இத்தகைய விஷயங்களை நன்கறிந்தவர் இப்போது யாராவதொருவர் இருக்கிறாராவென்று ஆலோசித்தேன். ஒரு மஹானே அடியேனுடைய நினைவுக்கு வருகிறார். (பக்கம் 6-ல்) ப்ரஸ்தாவிக்கப்பட்ட ஸ்ரீமத். குன்றபாக்கம் ஸ்வாமியின் திருவடியாய் உத்தமவித்வன்மணியாய் விளங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீமத். உ.வே. புரிசை க்ருஷ்ணமாசாரியர் ஸ்வாமியொருவரே ஸ்மிருதிக்கு வருகிறார். இந்த ஸ்வாமியின் திருத்தமையனர் ஸ்ரீமத். ஷஷ்டி ஸ்ரீநிவாஸவரதாசாரியர் ஸ்வாமியென்பார், திருத்தகப்பனரிடத்திலே ஸாஹித்ய பாடங்கள் வாசித்துக் கொண்டிருந்ததும், அடியேனுக்கும் சில பாடங்கள் சொல்லிக் கொடுத்து வந்ததும் நினைவிலிருக்கிறது. அவருடைய [ஜநககுலத்துத்] திருத்தம்பியாரான மேலே குறித்த புரிசை ஸ்வாமியும் திருத்தகப்பனரிடத்தில் நெருக்கமான பழக்கமுடையவராயிருந்தார். "தோழியும் நானுமொழிய வையம் துயின்றது" என்று திருமங்கையாழ்வாரருளிச் செய்வதுபோல, தற்காலம் அந்த புரிசை ஸ்வாமியும் அடியேனும் தவிர வேறு யாரும் திருத்தகப்பனருடைய விசேஷங்களை ஸ்மரிக்கவும் சொல்லவும் வல்லவர்களில்லையென்றே நினைக்கிறேன்.

க்ரோதிஞு மாசிமாத முடிவில் திருமாளிகையிலுங்கூட ஸஞ்சரிக்க முடியாத படி அசக்தி அதிகரித்தது. அவர் அஜாதசத்ருவென்று ப்ரஸித்தராகையாலே அந்த நாட்களில் தென்கலையார் வடகலையார் ஸ்மார்த்தர் மாத்வர் என்கிற வாசியின்றிக்கே அனைவரும் இரவும் பகலும் நமது க்ருஹத்திலேயே படுகாடு கிடப்பர்கள். அந்த ஸமயத்திலும் திருத்தகப்பனர் தமது ஸமீபத்தில் வருமவர்களை ஆசார விசாரங்களில் நிர்தாக்ஷிண்யமாக சிக்ஷிப்பர். பெரியதிருமொழி வியாக்கியானத்தில் (8—1) *சிலையிலங்கு பொன்னழி ப்ரவேசத்தில் ஓர் ஐதிஹ்யம் கூரத்தாழ்வானைப் பற்றி அருளிச்செய்யப்பட்டிருக்கிறது; அதாவது—

"ராஜேந்த்ரசோழனிலே ஒரு ப்ராஹ்மணன்மகன் புத்தரோடே ஸம்ப்ரதாயமுண்டாய் பூணுநூலையும் குடுமியையும் அறுத்துப் பொகட்டான்; கூரத்தாழ்வான் அங்கேற நடந்தவளவிலே அவன் சிகாயஜ்ஞோபவீதங்களைத் தரித்துக்கொண்டு வந்து புகுந்தான். அவனைக் கண்ட பிதாவானவன் 'கூரத்தாழ்வானைச் சந்தித்தாயோ?' என்று கேட்டான். புறம்புள்ளார் 'நீ இது அறிந்தபடி எங்ஙனே?' என்று கேட்க; 'ஆழ்வான்ஸன்னிதியில் தமோபிபூதரும் ஸத்வஸ்தராவர்கள் காண்' என்றான்." என்று.

இச்சிறப்பு நம் திருத்தகப்பனர்க்குமொக்கும். அக்காலத்தில் திருத்தகப்பனரைவிட வயோவ்ருத்தர்கள் பலர் இருப்பர்களே; அவர்கள் ரங்கஸாமியென்று ஏகவசனமாகச் சொல்லுவர்களானாலும் எதிரே நிற்க நடுங்குவர்கள். அந்த சரமஸமயத்தில் ஏறக்குறைய ஒரு மாதகாலம் அல்லும் பகலும் அடியேனை அருகிலேயே வைத்துக்கொண்டு ஸாதித்த உபதேசமொழிகள் அனேக சாஸ்த்ரார்த்த கர்ப்பிதங்களாய் சரமஸந்தேச மென்னத் தகுந்தவை. ஒவ்வொன்றும் மறக்க முடியாமலிருக்கின்றன. ஐம்பது வருடங்களுக்குமேல் ஆனாலும் நேற்று போலவும் இன்று போலவுந் தானுள்ளது.

சில விஷயங்களை இங்கே எழுதாவிடில் என்னாத்மா தரிக்கமாட்டாது போலிருப்பதால் எழுதுகிறேன். இரவுவேளைகளில் அல்பசங்கைக்குப் போனல் வாய்கொப்பளிக்காமலும் ஆசமனம் செய்யாமலும் படுத்துக் கொள்ளக்கூடாது என்று இப்படிப்பட்ட பல ஆசாரங்களைக் கடுமையாக சிக்ஷித்து வந்தார். ஒரு நாளிரவு தீர்த்தபாத்திரமில்லாமையினலோ சோர்வு சோம்பலாலோ கண்டூஷமும் செய்யாமல் பாதப்ரக்ஷாளனமும் செய்யாமல் படுக்கைக்கு வந்து சேர்ந்தேன். அசக்தியிலும் இதை கவனித்துக் கொண்டிருந்து "பையா! வாய் கொப்பளித்தாயா?" என்று கேட்டார்; கொப்பளித்தேனென்று பொய் சொல்லிவிட்டேன். அப்போது இரவு 12 மணி. உடனே ஒருவரையெழுப்பி "வாசலிலே சென்று வாய்கொப்பளித்த அடையாளமிருக்கிறதாவென்று பார்த்துவா" என்று போக விட்டார். அவர் எழுந்துபோய்ப் பார்த்து 'என் கண்ணுக்கெட்டினவரையில் ஈரமான இடமே தென்படவில்லை' என்று சொல்லி விட்டார். தகப்பனர் ஸரிதானென்று சொல்லி விட்டார். இந்த வேளை தப்பித்துக் கொண்டோமென்று தேறியிருந்தேன். காலை யெழுந்தவுடனே செய்தருளின தண்டனைகளை என்னவென்றெழுதுவேன். மூன்றுநாள் புழைக்கடைத் தாழ்வாரத்தில் உட்காரவைத்து ஸாப்பாடு போடச்சொல்லி நாலாநாள் ஸ்ரீபாததீர்த்தம் ஸ்வீகரிப்பித்து உள்ளே புகச் செய்தார். அரையில் உத்தரீயமில்லாமல் கௌபீன மாத்திரத்தோடு இருக்க நேரும் ஸமயங்களில் யஜ்ஞோபவீதத்தைக் காதில் சுற்றாமல் கடிஸூத்ரத்திலே படும்படி விட்டுக் கொண்டு நிற்கக் கண்டாராகில் கொடிய தண்டனைகள் செய்வர். இப்படிப்பட்ட விஷயங்களை நூற்றுக்கணக்காக எழுதலாம். எழுதினல் இப்புத்தகமே ஒரு தர்மசாஸ்த்ரம் போலவும் ஆஹ்நிகம் போலவும் காணப்படும்.

ஸ்ரீரங்கத்தில் பத்தராவி ஸ்வாமியென்று ஒரு மஹாபுருஷர் எழுந்தருளியிருந்தார். அந்த ஸ்வாமி ஜ்ஞாநாநுஷ்டானங்களில் மிக ப்ரஸித்தர். திருத்தகப்பனருக்குப் பரமாப்தர். அநாரோக்யத்தை யறிந்து நேரில் பார்ப்பதற்காகக் காஞ்சிக்கு வந்து நமது க்ருஹத்திலே தங்கியிருந்தார். அவர் மறுநாள் காலை தேவப்பெருமாள் ஸன்னிதிக்குச் சென்று ஸேவிக்க விரும்பினர். அப்போது திருத்தகப்பனர் அடியேனை யழைத்து 'ஸன்னிதிக்குப்போய் என்ன ஸமயம், பார்த்துவா' என்று நியமித்து அனுப்பினர். அடியேன் போய் அவ்விடத்தில் தென்பட்ட மணியகாரரை நோக்கி என்ன ஸமயமென்று விசாரிக்க, அவர் 'ஆராதனம் ஆகப்போகிறது' என்றார். அகத்துக்கு வந்து ஆராதனமாகப் போகிறதாமென்றேன்; திருவாராதனமென்று சொல்லாமல் ஆராதனமென்று சொன்னதற்காக உடனே முதுகு பிளந்து விட்டது. இதைக்கண்ட அந்த பத்தராவி ஸ்வாமி 'லகுவான அபராதத்திற்கு இவ்வளவு குருவான சிக்ஷையா?' என்று வியந்தார். அந்த ஸமயம் அந்த பத்தராவி ஸ்வாமி ஐந்தாறுநாள் எழுந்தருளி யிருந்தார். அப்போது அடியேனுக்கு கத்யத்ரயம் ஸந்தையாகாமலிருந்தது. அந்த ஸ்வாமி ஸன்னிதியில் அதிகரிக்கும்படி தகப்பனர் நியமித்தருள அவரும் பரமக்ருபையோடு நித்யமும் இரண்டு ஸந்தை ஸாதித்தருளினர். மற்றும் பல நல்வார்த்தைகளும் ஸாதித்தார். இதுவொரு மஹாபாக்யம்.



கோயில் பத்தராவி ஸ்வாமி
(வைகுண்டவாஸி)

திருத்தகப்பனர் திருநாடலங்கரிக்கிற காலத்தில் ஸ்ரீமத். காதி. அனந்தாசார்ய ஸ்வாமியும் வடதேசத்தில் சிஷ்யஸஞ்சாரார்த்தமாக வெழுந்தருளியிருந்தார்; மாதாமஹரான ஜீயர் ஸ்வாமியும் திருநாராயணபுரம் ப்ராந்தமெழுந்தருளி யிருந்தார். அடியேனை யாரிடத்தில் ஒப்பிப்பதென்கிற சிந்தை திருத்தகப்பனருக்கு மிகப்பெரிதாக ஏற்பட்டது. அடியேனுடைய மாதுலர் ஷஷ்டி. திருவேங்கடாசார்யரென்பவர் ஸ்ரீமத். குன்றபாக்கம் ஸ்வாமி ஸன்னிதியிலே சாஸ்த்ரங்கள் வாசித்து உபயவேதாந்தங்களும் பூர்த்தியாகக் காலக்ஷேபஞ் செய்திருந்தவர் ஜீவிகார்த்தமாக விறகு தொட்டி வியாபாரத்தில் இறங்கி யிருந்தார். சில ஸமயங்களில் எனக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதாக விறகு தொட்டிக்கு வரவழைத்து அங்கே வேலைகள் செய்ய ஏவி விடுவர். அது திருத்தகப்பனர்க்குத் தெரிந்து 'நான் கண்ணை மூடிக் கொண்டபின் இவனை நல்வழிப்படுத்துவார் ஒருவருமில்லையே' என்று தமது

திருத்தாயாரோடு கவலைப்பட்டு அழுத அழுகைகள் இன்னமும் மறக்க முடியாம லிருக்கிறது.

பிதாமஹிக்குப் பெருந்தேவியம்மா என்று திருநாமம். ஏகபுத்ரை. திருத் தகப்பனர் பரமபதித்த பிறகு பதினைந்து ஸம்வத்ஸரம் ஜீவித்திருந்தாள். தகப்ப னர் அந்த திருத்தாயாரை உபசரிக்கும் விதம் பிறர்களால் அநுகரிக்கவும் முடியா தது. அந்த பிதாமஹிக்கு முமுக்ஷுப்படி தத்வத்ரயம் ஸ்ரீவசநபூஷணம் திருவாய் மொழி இவை வாசோவிதேயம். 'கோடியாத்து காக்கு' என்றொருத்தி; ஜடப் ரோல் பாபம்மா என்றொருத்தி. இவ்விருவரும் அக்காலத்தில் கூரத்தாழ்வான் தேவியாரை நினைப்பூட்ட வல்லவர்கள். அவர்களும் பிதாமஹியும் சேர்ந்து நம் க்ருஹத்தில் ரஹஸ்யங்களையும் திவ்யப்பிரபந்தங்களையும் அநுஸந்தானம் செய்வ தைக் கேட்டுக் கொண்டிருந்தே அடியேனுக்குப் பல பாகங்கள் சிந்தனையாயின.

திருத்தகப்பனர் பரமபதிப்பதற்கு முன்னே ஐந்து நாள் அடியோடு ஞாபகமே யில்லாமலிருந்தார். திருநாட்டுக்கெழுந்தருளுகிறவன்று காலை 6-மணி முதல் 12-மணி வரைக்கும் நல்ல ஞாபகமும் படபடவென்று பேசுகிற சக்தியும் பெற்று அடியேனுக்கு சரமஸந்தேசங்கள் அநுக்ரஹிக்க ஆரம்பித்தார். அடியேனுக்கு மட்டுமன்று; அங்குக் குழுமியிருந்த அனைவர்க்கும் "யதாதிகாரம் நெறியெல்லா மெடுத்துரைக்கிறார்" என்று ஆசார்யஹ்ருதயத்தில் ஸாதிக்கிறபடி அவரவர்களுக் குத் தக்கவாறு ஆச்சரியமான ஸந்தேசங்களை ஸாதித்தருளினர். அந்த ஸமயம் ஸ்ரீமத். காதி ஸ்வாமியின் தேவியார் அங்கே வந்து ஒரு மூலையிலிருந்தார். அதைத் தெரிந்து கொண்டு அந்த ஸ்ரீமஹாலக்ஷ்மியாரை முன்னே வரவழைத்து "உன் னுடைய மாமனரான காதி க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியாலே நான் அபிவிருத்திக்கு வந்தவன்; உன்னுடைய பர்த்தாவான அனந்தாசார்யரை அபிவிருத்திக்குக் கொண்டு வந்தவன் நான்; இப்போது அவர் மார்வாடத்திலிருக்கிறார். நான் போய்விட்டேனென்பது அவர்க்குத் தெரிந்தால் உடனே இவ்விடம் திரும்பி வந்து விடுவர்; அதுவரையில் பையனை உன்னுடைய ஸம்ரக்ஷணையில் வைத்துக் கொண் டிருந்து அவர் வந்தவுடனே இவனை அவர்கையில் காட்டித்தரவேண்டியது உன் பொறுப்பு" என்று இவ்வளவும் பலரெதிரில் பெருமிடற்றுடன் ஸாதித்து அடுத்த க்ஷணத்திலேயே ப்ரஜ்ஞாபங்கமடைந்தார். இரண்டு நாழிகைக்குள் இவ்விபூதியை விட்டகன்றார். அந்த ஸந்நிவேசம் பலர்க்கும் ஆச்சரியமாயிருந்தது.

வடநாட்டிலெழுந்தருளியிருந்த ஸ்ரீமத் காதிஸ்வாமி யாத்திரையை முடித்துக் கொண்டு காஞ்சிக்கு வந்துசேர நாலாறு மாதமாயிற்று. குடும்பக்லேசமும் அதிகம். அப்போது எங்களுக்கு ஜமீனக இருந்த திருவடிராயபுரம் என்கிற சுரோத்திரிய க்ராமத்தை கவனித்துக்கொள்ள என் தாயாரும் மாதுலரும் பெரும்பாலும் க்ராமத் திலேயே வாஸமாயிருந்தார்கள். என்னுடைய க்ருஹத்தில் ஸஹோதரிகள் பிதா மஹியின் ஸம்ரக்ஷணையில் இருந்து வருகிறார்கள். நான் மட்டும் ஸ்ரீமத். காதி ஸ்வாமி திருமாளிகைக்கு ஸ்வீகாரகுமாரன் போல் சென்று சேர்ந்து அங்கேயே அசநசயனதிகளை வைத்துக் கொண்டு, அப்போது அண்ணா ஸன்னிதியில் நடந்து கொண்டிருந்த வேதாந்த வைஜயந்தீ பாடசாலையிலும், தேவப்பெருமாள் ஸன் னிதிக்குள் நடந்து கொண்டிருந்த சடகோபநிலய பாடசாலையிலும் சாஸ்த்ரபாடங் கள் வாசித்துக் கொண்டிருந்தேன். மார்வாடம் ப்ராந்தத்திலிருந்து ஸ்ரீ காதி ஸ்வாமியின் திருவருள்வெள்ளமான ஸ்ரீமுகங்கள் ஸம்ஸ்க்ருத பாஷையிலேயே அடிக்கடி கிடைத்துக் கொண்டிருக்கும். திருநாராயணபுரத்திலிருந்து மாதாமஹ ஜீயர் ஸ்வாமியின் ஸ்ரீமுகங்களும் அப்படியே. காஞ்சீபுரியில் ஸன்னிதி வீதியில் ஸ்ரீமத். ஈச்சம்பாடி நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி யென்பவர் மஹாவ்யாபகராக

எழுந்தருளியிருந்தவர். அந்த ஸ்வாமியை அடியேன் ஸேவிக்கப்பெற்றதில்லை. அவர் ஸ்ரீமத். திருப்புட்குழி ஸ்வாமியின் ஸமகாலத்தவர். அந்த நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி திருவடிகளில் தான் மாதாமஹ ஜீயர் ஸ்வாமி ஸகலார்த்தங்களும் கேட்கப்பெற்றவர். அவருடைய திருக்குமாரரான ராமாநுஜாசார்ய ஸ்வாமி அடியேனுடைய இருபது வயது வரையில் எழுந்தருளியிருந்தவர். அந்த ஸ்வாமியிடத்திலும் அடிக்கடி சென்று எதையாவது அதிகரிக்கக் கடவாயென்று மாதாமஹ ஜீயர் ஸ்வாமி அடிக்கடி ஸ்ரீமுகம் ஸாதித்துக் கொண்டிருந்தார். "தௌஹித்ரனை அண்ணாவை அநுக்ரஹிக்க வேணும்" என்று அந்த ஸ்வாமிக்கும் ஸ்ரீமுகங்கள் ஸாதித்துக் கொண்டிருந்தார். அதனால் அடிக்கடி அந்த ஸ்வாமியிடம் சென்று அவருடைய க்ருபைக்கும் பாத்திரனாக ப்ராப்தமாயிற்று. அந்த ஸ்வாமி ஸன்னிதியில் ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் முதன்முதலாக ஸேவிக்க ப்ராப்தமாயிற்று. அந்த ஸ்வாமி பரமசாந்தர்; மஹாஸாத்விக ப்ரக்ருதி. திருமாளிகையை விட்டுக் கீழே யிறங்காமல் திருமாளிகையிலேயே ஏகாந்த சீலராக எழுந்தருளி யிருந்தவர். அந்த ஸ்வாமி "அண்ணா! உனக்கு அவகாசமுள்ள காலங்களில் இங்கே வந்து கொண்டிரு" என்று பரம கிருபையோடு நியமித்தருளினபடியால் அடிக்கடி அங்கு நெருங்க நேர்ந்தது. வம்பு தும்பான வார்த்தைகளைச் சிறிதும் ஸாதிக்கமாட்டார். மணித்திரள் என்னும்படியான ஸதாசார்ய திவ்யஸூக்தி ஸாரார்த்தங்களைப் பூச்சொரிந்தாப்போலே ம்ருதுமதுரமாக ஸாதிப்பர். ஸ்ரீ காதி ஸ்வாமி திருமாளிகைக்கு அருகிலேயே ஸ்ரீமத். வித்வான் இளங்காடு ரங்காசாரியர் ஸ்வாமி ந்யாய பாடங்கள் ஸாதித்துக் கொண்டு எழுந்தருளி யிருந்தார். இந்த ஸ்வாமி நம்முடைய பாக்ய விசேஷத்தினால் இற்றைக்கும் காஞ்சியில் ஸ்ரீரங்கராஜ வீதியில் ஸேவை ஸாதித்துக் கொண்டிருக்கிறார். இவர் காதி ஸ்வாமிக்கு மிகவும் ஆப்தர். இவரிடத்திலே நியாய பாடங்களை நீ வாசிக்க வேண்டியது என்று காதி ஸ்வாமி ஸ்ரீமுகங்கள் ஸாதித்துக் கொண்டிருந்தபடியால் அந்த ஸ்வாமியிடத்திலே பஞ்சலக்ஷணி வாசிக்க ஆரம்பித்தேன். ஏறக்குறைய மூன்று நான்கு ஸம்வத்ஸரங்கள் அந்த ஸ்வாமியிடத்திலே நியாய பாடங்கள் நடந்தது. இடையிடையில் காதி ஸ்வாமியும் அந்த பாடங்களை ஸாதிப்பதுண்டு. இதைப்பற்றி மேலே விவரிப்பேன்.



ஸ்ரீமத். உ.வே. ஈச்சம்பாடி நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி (வைகுண்டவாஸி)

அந்த ஸமயம் தேவப்பெருமாள் ஸன்னிதியில் கலாவைஷம்யப்ரயுக்தமான விவாதகலஹங்கள் முற்றிக் கொண்டிருந்தன. அடியேன் இளமையிலேயே திவ்ய

ப்ரபந்தங்களை யதிகரித்து தேவப்பெருமாளுடைய இயல் கோஷ்டியை விடாமல் காத்து வருபவன். அந்த காலத்தில் வேதபாராயண ஸ்ரீசடகோபச் சண்டை என்று பிரபலமான கலஹம் நடந்து கொண்டிருந்தது. இதைப்பற்றி ஸ்வல்பமாக எழுதுகிறேன். இயல் கோஷ்டியென்னப்படுகிற திவ்யப்ரபந்த கோஷ்டிக்கு ஸாதித்துக் கொண்டிருந்த ஸ்ரீசடகோபனை கலாவைஷம்யத்தினால் நிறுத்தி, அதை வேத பாராயண கோஷ்டிக்கு ஸாதிக்க ஆரம்பித்தார்களாம். அக்காலம் அடியேனுக்குத் தெரியாது. அது விஷயமாக நியாயாலயங்களில் ஏழெட்டு வருஷகாலம் வியவஹாரம் நடந்து வேத கோஷ்டிக்கு ஸ்ரீசடகோபன் ஸாதிக்கக்கூடாதென்று முடிவாக ஹைகோர்ட்டு தீர்ப்பு ஆயிற்று. அப்படி தீர்ப்பு ஆன பிறகுங்கூட, கோவில் தர்மகர்த்தாக்கள் அதை நிறுத்தாமல் நடத்திவர முயன்றார்கள். அதனால் தேவப்பெருமாளுடைய திருவீதிப்புறப்பாடு காலங்கள் தோறும் இது ஸம்பந்தமான கலஹம் வெகு தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. பரஸ்பரம் ப்ரபல ப்ரஹார பர்யந்தமான கலஹம் நடந்து கொண்டிருந்தது. இது அடியேனுடைய பதினைந்தாவது வயதில் மும்மிரமாக இருந்தது. அடியேன் இயல் கோஷ்டியைத் தவறாமல் காப்பவனே யொழிய சண்டை நடக்கிற விடத்தில் தலையைக் காட்டமாட்டேன். ஒரு க்ஷணமும் அங்கு நிற்கமாட்டேன். ஆனாலும் நானிருக்குமிடத்தைத் தேடி வந்து என் முதுகில்தான் விசேஷ ப்ரஹாரங்களை ஸமர்ப்பிப்பர்கள். இவ்விதமாக நான்பட்ட அடிகள் அபரிமிதமென்னலாம்.



ஸ்ரீமத். ஈச்சம்பாடி நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியின் திருக்குமாரர் ஸ்ரீ உ.வே. ஈச்சம்பாடி ராமாநுஜாசார்ய ஸ்வாமி (வைகுண்டவாஸி)

இப்புத்தகத்தில் இப்படிப்பட்ட விஷயங்களை நான் சிறிதும் எழுத நினைத்ததில்லை. ஆனாலும், கீழே இளங்காடு ரங்காசார்ய ஸ்வாமியின் ப்ரஸ்தாவம் வந்தபடியால் ப்ராஸங்கிகமாக ஒரே விஷயம்மட்டும் எழுதத்தோன்றிவிட்டது. இளங்காடு ஸ்வாமி வடகலை ஸம்ப்ரதாயஸ்தர். தேவப்பெருமாளுடைய மங்களாசாஸனத்தை ஒருநாள் தவறாமல் செய்து வருவர். புறப்பாடுகளையும் இழவாமல் வேதபாராயண கோஷ்டிக்குப் பின்னால் சில வித்வான்களோடு கூடிப் பரமசாந்தராக எழுந்தருள்வர். கலாவைஷம்யமான கலஹங்களில் மநஸா வாசா கர்மணா அணுவளவும் பிரவேசித்தவரல்லர். அந்த ஸ்வாமியினுடைய ப்ரக்ருதி அத்யாபி அப்படிப்பட்டதே. இப்போது உத்தமாச்ரமியாக விளங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீமத். கோழியாலம் ஸ்வாமி யென்பவர் அப்போது க்ருஹஸ்தராயிருக்கையில் கோழியாலம் ராகவாசாரியர் என்று வழங்கப்படுவர். இவர் கோவில் பாடசாலையில் வியாகரணம்

வாசித்துக் கொண்டிருந்தவர். இவர் மாதாபிதாக்களோடும் மனைவியோடும் ஸஹோதரரோடும் காஞ்சீ வாஸத்தை விரும்பி வந்து சேர்ந்தபோது முதன்முதலாக அடியேனுடைய வீதியில்தான் ஸமீபத்திலே குடி வாழ்ந்து வந்தார். அடியேனுடைய திருத்தகப்பனாரிடத்திலும் சிலநாள் பாடம் வாசித்ததாக ஞாபகம். உறுதியாகச் சொல்லகில்லேன்; அதுநிற்க. இவர் இளங்காடு ரங்காசார்ய ஸ்வாமியிடத்தில் தர்க்கஸங்க்ரஹம் வாசிக்க வந்து சேர்ந்தார். அப்போது அடியேன் ஆரணி க்ருஷ்ணசாரென்கிற மாத்வரோடுகூட பக்ஷதையோ ஸாமாந்யநிருக்தியோ வாசித்துக் கொண்டிருக்கிறேன். பிறவிக் குருடரானவொரு மாத்வரும் இளங்காடு ஸ்வாமியிடத்தில் தர்க்கம் வாசிக்க வந்தார். அவர் அந்தகராயினும் மஹாமேதாவியாயிருந்தார். உலகில் அங்கவைகல்யமுள்ளவிடத்திலே விசேஷமாக மேதையைக் கொண்டு கூட்டுவது எம்பெருமானுடைய இயல்பாதலால் அவ்வந்தகரிடத்திலே ஆச்சரியமான மேதையைக் குடிபுகச் செய்திருந்தனன் பகவான். அவரோடு கூடவே கோழியாலம் ராகவாசாரியர் ஸ்வாமி தர்க்க ஸங்க்ரஹமாரம்பித்து வாசிக்கிறார். அடியேன் அவரோடு ஸஹாத்யாயியாக இருந்திலேனாகிலும் பரஸ்பரம் ஸௌஹார்தம்மிக்கு இன்பமாகப் பேசிக் கொண்டிருந்தவர்களே. அப்போது ஒரு கார்த்திகை மாதத்தில் தேவப்பெருமாளுக்கு வநபோஜநோத்ஸவம் நடந்து இரவு 9-மணிக்கு திருவீதிப் புறப்பாடு முடிந்து பெருமாள் ஸன்னிதிக்குள்ளே யெழுந்தருளியாகிறது. மேலே நான் விவரித்திருக்கிற ஸ்ரீசடகோபச் சண்டை அன்று பிரபலமாக நடந்திருக்கிறது. அதற்கு நான் அங்கே தலைகாட்டாமல் ஸன்னிதியை விட்டு வெளியேறி ஸ்ரீ காதி ஸ்வாமி திருமாளிகை சேருவதற்கு மேற்கு முகமாகச் சென்று கொண்டிருக்கிறேன். மேலே சொன்ன கோழியாலாசாரியர், எங்கிருந்தோ எதிரே வந்துகொண்டிருக்கிறார். நிலா ஆச்சரியமாகவொளிர்கின்றது. இவர், தேவப்பெருமாள் ஸன்னிதியில் *தமேதமேகரோதி யாகின்றதென்று கேள்விப்பட்டு உக்ரவேஷத்துடன் விரைந்து வந்து கொண்டிருக்கிறார். பதினாறுகால் மண்டபத்தருகில் நான் மேற்கு முகமாகப் போகிறேன், இவர் கிழக்கு முகமாக வருகிறார்; என்னைக் கண்டவுடனே குடுமியைப் பிடித்துக் கொண்டு கீழே தள்ளி ப்ரஹாரங்கள் ஸமர்ப்பிக்கிறார்; இது நடந்து 47 வருஷங்களுக்கு மேலானாலும் ஸத்யமாய் நேற்றிரவு நடந்ததுபோல் நினைவிலிருக்கிறது. அவரிடத்தில் வலிமைகாட்ட எனக்கென்ன சக்தியிருக்கிறது. வாயைக் கையைத் திறவாமல் பட்டுக் கொண்டு கிடக்கிறேன். ஸ்ரீராமஸக்ய்யம் பெற்று முதல்நாள் வாலியோடு யுத்தம் செய்யப்போன ஸுக்ரீவன் பூசல் பெற்றானென்று சொல்லுகிறார்களே; அந்த பூசல் ஏகதேசம்; அன்றே என்னுயிர் போயிருக்க வேண்டும். ஜீவித சேஷமிருந்தபடியால் பிழைத்தேன். யாரோவொரு வடகலை ஸ்வாமி அங்கே க்ருஹத்தினுள் சயனித்திருந்தவர் இந்த ப்ரஹாரத்வநியைக் கேட்டுத் துயிலெழுந்து பதறி யோடிவந்து இதென்ன அநியாயமான ப்ரஹாரமென்று கத்தின பின்பு ப்ரஹரிப்பதை நிறுத்திக் கொண்டு போய்விட்டார். அந்த ஸ்வாமி இற்றைக்கும் பாங்காக எழுந்தருளியிருப்பதாலும், உத்தமாச்ரமியாகையாலே பொய் சொல்லமாட்டாராதலாலும் இச்செய்தியைப் பற்றி யார்வினவினாலும் உண்மையை யொளித்திடாது ஸாதித்தருள்வர். "ப்ரக்ருதி ஸ்வபாவாத் மிகவும் அநீதியாகவே நேர்ந்துவிட்டது; என் செய்வேன்!" என்று அநுதாபத்தோடு சிலரிடம் அத்யாபி அஸக்ருத் ஸாதித்துக் கொண்டிருக்கிறாரென்றும் கேள்வி.

இவ்விஷய ப்ரஸ்தாவம் ப்ரஸங்காத் இங்கு நேர்ந்து விட்டபடியால் அந்த ஸ்வாமிக்கும் அடியேனுக்குமுள்ள தொடர்பை வர்த்தமானகாலம் வரைக்கும் ஒருவாறு எழுதி விடுகிறேனிங்கு. பிறகு அந்த ஸ்வாமி சில நாட்களில் காஞ்சீ வாஸத்தை விட்டுத் திருப்பதி திருச்சுகனூர் சென்று சிலகாலம் அங்கே வஸித்து, அங்கிருந்து திருவஹீந்திரபுரம் சென்று அங்கே உத்தமாச்ரமியாகித் தென்தேசங்

களிலேயே ஸஞ்சரித்துக் கொண்டிருந்தார். 15 வருஷகாலம் அவர்க்கு மெனக்கும முகாவலோகந ப்ரஸக்தியேயில்லாமலிருந்தது. பிறகு காஞ்சீபுரத்திற்கெழுந்தருளி வடவண்டை மாடவீதியில் ஒரு க்ருஹத்தில் வாழ்ந்து வந்தார். அப்போதும் எமக்கு ஸாமாநாதிகரண்ய ப்ரஸக்தியில்லாமலேயிருந்தது. அந்த ஸ்வாமி தினப்படியாக அனுஷ்டானத்திற்கு வெள்ளக்குள மெழுந்தருள்வது வழக்கம். அடியேனும் அங்குத்தான் செல்வது. இருவரும் அடுத்தடுத்த துறையிலேதான் காலைக்கடன்களை முடிப்பது. அடியேன் 7-மணிக்குள் காரியங்களை முடித்துக் கொண்டு இராமானுசநூற்றந்தாதியநுஸந்தானத்துடன் க்ருஹத்துக்குச் செல்வேன். ஸ்ரீ ஸ்வாமி 8-மணிக்குக் குளத்திலிருந்து புறப்படுவர். இங்ஙனே தினப்படியாக நாலாறு மாதம் நடந்து கொண்டிருக்கிறது. இப்படியிருக்கையில் ஒருநாள் அடியேன் அக்குளத்தில் வஸ்த்ரதாரண ஊர்த்வபுண்ட்ரதாரண ஸந்த்யாவந்தநாதிகளை முடித்துக் கொண்டு புறப்படுகையில் ஸ்ரீ ஸ்வாமிக்கு அநுஷ்டானம் ஸாவசேஷமாயிருந்தும் அடியேனைத் தொடர்ந்து கொண்டு புறப்பட்டார். அவரோடு ஸங்கிக்க வேண்டாமென்கிற எண்ணத்துடன் சிறிது வேகமாகச் செல்லுகிறேன்; ஸ்வாமியோ ஸங்கித்து வார்த்தையாட வேணுமென்கிற திருவுள்ளத்துடன் மிகவும் விரைந்து எழுந்தருளுகிறார். வேகவதிஸமீபத்தில் வந்து



ஸ்ரீ மதுபயவே. வித்வான்
இளங்காடு. ரங்காசார்யர்ஸ்வாமி, ஸ்ரீ காஞ்சீ.

"அண்ணு! நிற்கவேணும், அண்ணு ஸ்வாமிந்! நிற்கவேணும்" என்று ஸாதித்துக் கொண்டே பக்கத்தில் எழுந்தருளியாயிற்று. அப்போது பட்டரை ஸ்ரீ நிவாஸவரதாசாரியர் என்கிற அத்யாபக ஸ்வாமி என்னோடு கூடவே க்ருஹத்துக்கு வருகிறார். கோழியாலம்ஸ்வாமி அவரை நோக்கி 'ஸ்வாமீ சீமாவரதாசாரியா!' என்றழைத்து 'இந்த வ்யக்தியினுடைய யோக்யதைதெரியுமா? *ந பூதோ நபவிஷ்யதி*...... ...... இத்யாதிகள் பலபல ஸாதித்து விட்டு, 'ஸ்வாமீ! நாங்களிருவரும் ஏதோ வார்த்தையாட வேண்டியிருக்கிறது, தேவரீர் எழுந்தருள வேணும்' என்று ஸாதித்து அவரைப் போகவிட்டு, அடியேனிடம் பரமக்ருபாகனமான பல ஸ்ரீஸூக்திகளை "கண்டேந ஸ்வரகத்கதேந நயநேநோத்கீர்ணபாஷ்பாம்புநா" என்னும் நிலை

யிலே ஸாதிக்க ப்ராப்தமாயிற்று. அப்போது அந்த ஸ்வாமியால் பரபக்ஷநிராக்ருதி யென்றொரு க்ரந்தம் ஸாதிக்கப்பட்டிருந்தது. அதை அடியேன் மூலமாக அச்சிடுவிக்க வேணுமென்று குதூஹலமுண்டாகி அதற்குரிய நியமனம் ஸாதித்தாகிறது. "அரசாணிபாலை வேங்கடாத்வரி தான் செய்த லக்ஷ்மீஸஹஸ்ரத்தில் சொல்லுகிறார்; தேசிகனைக் கொண்டு பாதுகாஸஹஸ்ரம் அவதரிப்பித்துக் கொண்டது ஆச்சரியமன்று; என்னைக் கொண்டு லக்ஷ்மீஸஹஸ்ரம் அவதரிப்பித்துக் கொள்வதுதான் ஆச்சரியம் என்கிறார்; அதுபோல தேவர் நித்யம் ஒரு க்ரந்தம் அச்சுப் போடுவது ஆச்சரியமன்று; என்னுடைய க்ரந்தத்தைப் பரிஷ்கரித்து அச்சிட்டுத் தந்தால் அதுதான் ஆச்சரியமாகும்" என்று பலபலவும் ஸாதித்து 'ததாஸ்து' என்று சொல்லித்தாருகவேணுமென்று நியமனமாயிற்று. 'அதற்காக வேண்டிய பணத்தை திருக்குடந்தையில் ஒருவர் அனுப்பிக் கொடுக்க ஸித்தமாயிருக்கிறார்; அவருக்கு தேவரீருடைய விலாஸத்தை நான் தெரிவித்துமாயிற்று; நாளைக்கே பணம் வந்து விடும்; இந்த கோரிக்கையை அவசியம் பூர்த்தி பண்ணித் தரவேணும்' என்றும் ஸாதித்தாயிற்று.

அந்த ஸந்தர்ப்பத்தில், பூர்வாச்ரமே அஸ்தானே அகாண்டே ப்ரஹரித்த விஷயமும் ஸ்வாமிக்கு நினைவுக்கு வந்தது. "ந ஸ்மரத்யபகாராணாம் சதமபி ஆத்மவத்தயா" என்பதை அநுகரித்து அடியேன் அதை ஒருகால் மறந்தாலும் ஸ்வாமி க்ருதஜ்ஞராகையாலே ஸ்வேந க்ருதமானதை மறக்கமாட்டாரன்றோ. அதனால் அதை நினைத்தருளி "அது ஜன்மாந்தரத்தில் நேர்ந்ததென்று கொள்ள வேணும்; அதை மனதில் வைத்துக் கொள்ளவே கூடாது; ஆச்ரமஸ்வீகாரம் பண்ணின பிறகு காமக்ரோதங்களை யெல்லாம் ஸவாஸநமாக விட்டிட்டேன்" என்றும் ஸாதித்தார். அந்த ஸமயத்தில் அடியேன் ஒன்று விஜ்ஞாபிக்கலாயிற்று; அப்போதைக்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு புரட்டாசித் திருவோணத்தன்று தூப்புல் தேசிகன் தேவப்பெருமாள் ஸந்நிதிக்கெழுந்தருளி மங்களாசாஸனம் செய்தான பிறகு தேசிகன் ஆழ்வார் திருவீதி வலமாக எழுந்தருள்வது வழக்கம். அப்போது உபயகலையாரும் ஸ்தோத்ர பாடம் சொல்லிக் கொண்டு தனித்தனி கோஷ்டியாய்ப் போவது வழக்கம். முன்னே தென்கலையாருடைய கோஷ்டியும் அதற்குப் பின்னே வடகலையாருடைய கோஷ்டியுமாகச் செல்வது. அப்போது இந்த ஸ்வாமி வடகலை கோஷ்டியில் அக்ரேஸராராக எழுந்தருளுகிறார். தேசிகன் மணவாளமாமுனிகள் ஸந்நிதியருகே எழுந்தருளா நிற்கையில் இந்த உத்தமாச்ரமி என்ன செய்திருக்கிறா ரென்றால்—ஸ்தோத்ரம் ஸேவிக்கிற ஸ்வகீயர்களை 'நிறுத்துங்கள், நிறுத்துங்கள்' என்று கையை யமர்த்தி நிறுத்தச் செய்து தாம் மணவாளமாமுனிகளுக்கு ப்ருஷ்டபாகத்தைக் காட்டிக் கொண்டு நின்று, "சொல்லுங்கோள்! உரக்கச் சொல்லுங்கோள்; *குரௌ வாதிஹம்ஸாம்புதாசார்யசிஷ்யே ஜநா பக்திஹீநாஃ யதீந்த்ராப்ரியாஸ் ஸ்யுஃ, யதீந்த்ராப்ரியாவிஷ்ணு காருண்யதூராஃ குதோ முக்திவார்த்தா ஹி தாத்ருக்விதாநாம். .......*ஹந்த ஹந்த ராமக்ருஷ்ண தூஷணபிதாயிநாம் கிம் நு சித்ரமத்ர சைத்யராவணாநுஸாரிணாம்*" என்று தாமும் கோஷிக்கிறார், பிறரையும் கோஷிக்கச் செய்கிறார். "இதெல்லாம் இப்போது ஏதுக்கு?" என்று சிலர் சொல்லவும் "உங்களுக்கென்ன தெரியும்? சொல்லுங்கோள்" என்று த்ரிதண்டத்தை வீசி ரோஷகஷாயிதாக்ஷராய் நியமிக்கிறார். இதையெல்லாம் அடியேன் எங்கள் கோஷ்டியிலிருந்துகொண்டு பார்க்கிறேன். அப்போது அங்கு கால்மணி காலம் இவருடைய அட்டஹாஸம் அளவு கடந்து சென்றது. இஃது அடியேனுடைய நினைவில் இருந்தபடியால் "ஆச்ரம ஸ்வீகாரம் பண்ணின பிறகு காமக்ரோதங்களை யெல்லாம் ஸவாஸநமாக விட்டிட்டேனென்று இன்று ஸாதிக்கிற தேவரீர் ஆச்ரமஸ்வீகாரம் செய்தருளி 10 வருஷமாகிறது; இரண்டு மாதங்களுக்கு முன்னே இப்படி யிப்படி நடத்தவில்லையா?"

என்று கேட்டேன். அதற்கு ஸ்வாமி ஸாதித்தபடி—“இதை தேவரீர் கவனித்திருக்கமாட்டாதென்று நினைத்திருந்தேன்; *விச்வதச்சக்ஷுருத விச்வதோமுகః* என்று நினைக்கிறேன். வாஸ்தவந்தான்; இந்த பாஞ்ச பௌதிக பிண்டமுள்ள வரையில் காமக்ரோதங்கள் அவர்ஜநீயங்கள்தான்; அதையெல்லாம் மறந்துவிட வேண்டியது. இனி அப்படியெல்லாம் ஒன்றும் நேராது” என்று ஸாதித்து, தம்முடைய அந்த பரபக்ஷநிராக்ருதி க்ரந்தத்தை உடனே கொடுத்தனுப்பி, விரைவில் முத்ரணம் செய்வித்து முடித்துத் தரவேணுமென்று நியமித்தாயிற்று. அடியேனும் அந்த நியமனத்தைக் கூடிய த்வரையில் பூர்த்தி செய்தாயிற்று.

இந்த க்ரந்தமுத்ரணம் அடியேன் மூலமாக நடந்து வருகிறதென்பதைத் தெரிந்து கொண்ட தச்சிஷ்யர்கள் பல வெளியூர்களிலிருந்து ஸ்வாமியிடம் ஓடி வந்து “நாங்கள் எத்தனை பேர் இல்லை, எங்களிடம் பணத்தைக் கொடுத்து நியமிக்காமல் இப்படி கூடச் செய்வதுண்டா? இதை உடனே நிறுத்தி யாகவேண்டும்” என்று வெகுவாக நிர்ப்பந்தித்தார்கள். திருக்குடந்தையிலிருந்து ராயம்பேட்டை க்ருஷ்ணமாசார்யரையும் இதற்காகவே காஞ்சிக்கு வரவழைத்து அவரைக் கொண்டும் நிர்ப்பந்திக்கச் செய்தார்கள். [இந்த ராயம்பேட்டை ஸ்வாமியைப்பற்றி வக்தவ்ய விஷயங்கள் பலவுண்டு; அவற்றை மேலே வேறு ப்ரகரணத்தில் சொல்லுவேன். இவரும் காஞ்சிக்கு வந்து “இப்பணியில் அண்ணங்கராசாரியரை நியமிக்கவே கூடாது” என்று இரண்டு நாள் உபவாஸமிருந்து நிர்ப்பந்தித்தாரென்று ப்ரஸித்தமாயிருந்தது. ஸ்ரீஸ்வாமி எதையும் பொருள்படுத்தாமல், “நீங்கள் வீணான அஸூயைக்காரர்கள்; குணக்ரஹணம் பண்ணத் தெரியாத நீங்கள் இது விஷயமாக என்னிடத்தில் ஒன்றும் சொல்லவேண்டாம்; எது சொன்னாலும் என் காதில் அடியோடு ஏறாது. வேறு பேச்சு உண்டானால் இங்கு வாருங்கள், இல்லையேல் நடவுங்கள்” என்று ஸாதித்துத் தள்ளி விட்டு, தாம் மநோரதித்தபடியே அந்த காரியத்தை அடியேன் மூலமாகவே பூர்த்தி செய்வித்துக் கொண்டார். மேலே விவரித்தபடி பலர் தம்மிடம் வந்து நிர்ப்பந்தித்தபடியையும், அதற்குத் தாம் இணங்காமல் அவர்களை வெறுத்தபடியையும் ஸ்ரீஸ்வாமி திருவாக்கிலிருந்துதான் அப்போது அடியேனறிந்தேன். அந்த ஸமயம் ஸ்வாமிக்கும் அடியேனுக்கும் நேநேர வளர்ந்து சென்ற ஸௌஹார்தம் வாசாமகோசரமாகவேயிருந்தது.



ஸ்ரீ உ.வே. ராயம்பேட்டை கிருஷ்ணமாசாரியர் திருக்குடந்தை (வைகுண்டவாஸி)

அப்போது அடியேன் பல துறைகளிலும் நூல்கள் எழுதிக்கொண்டிருந்த படியால் அந்த க்ரந்தங்களை ஸ்வாமிக்கும் காட்டுவேன். ஸ்வாமியும் திருவுள்ள முகந்து கடாக்ஷிப்பார். அவற்றில் ஸம்ப்ரதாயார்த்த சர்ச்சைகள் வருமிடங்களிலே கடாக்ஷித்தருளும்போது ஸ்வாமிக்கு மநோவிகாரம் விளையும். நேராகவே வாத ப்ரதிவாதங்களும் நடக்கும். நாளடைவில் இந்த வாதவிவாதம் மிகமிக வளர்ந்திட்டது. அவரும் சில சிறு புத்தகங்களை யெழுதி அச்சிட ஆரம்பித்தார். அவற்றுக்கு அடியேன் சரமாரியாகக் கண்டனங்களெழுதி வெளியிடநேரும். பிறகு தாம் எழுதுவதை நிறுத்திக் கொண்டு சிஷ்யர்களுக்கு நியமனம் தந்து அவர்கள் மூலமாக மறுப்புகளை வெளியிடுவர். அவற்றுக்கும் உடனே மறுப்புகள் பெற்றுக் கொள்வர். மறுபடியும் தாமே மறுப்பெழுத முயல்வர்..................இப்படியாக அந்த் ஸ்வாமிக்கும் அடியேனுக்கும் நடந்த க்ரந்தச்சண்டைகள் அபரிமிதம். இந்த ஸம்பவங்கள் அடியேனுடைய 30, 35 வயதுக்கு மேற்பட்ட காலத்திலாதலால், பதினைந்தாவது வயதிலிருந்து தெரிவிக்க வேண்டிய செய்திகளை க்ரமேண தெரிவித்து விட்டு, பிறகு இதைப்பற்றிச் சிறிது விரிவாகத் தெரிவிப்பேன். வித்யார்த்தி தசையில் நடந்த செய்தியைத் தெரிவித்ததிலிருந்து இவ்வளவும் ப்ராஸங்கிகம். இது நிற்க. 15ஆம் வயதிலிருந்து என் விஷயங்களை யெழுதுகிறேன்.

ஸ்ரீ காதி ஸ்வாமி மார்வாட யாத்திரையைப் பூர்த்தி செய்து கொண்டு காஞ்சீபுரிக்கு எழுந்தருளியாயிற்று. அப்போது தம்முடைய வேதாந்தவைஜயந்தீ பாடசாலையைத் தாமே ஸாக்ஷாத்தாக நிர்வஹித்தருளத் திருவுள்ளம்பற்றி காலைவேளைகளில் மட்டும் திருமாளிகையிலேயே பாடப்ரவசனங்களும் பகல் வேளையில் பாடசாலையினிடமாகிய அண்ணு ஸன்னிதியிலெழுந்தருளியிருந்து பாடப்ரவசனங்களும் செய்தருள ப்ராப்தமாயிற்று. அப்போது அலங்காரசாஸ்த்ரத்தில் சித்ரமீமாம்ஸாதி பாடங்களும் நியாயத்தில் உத்க்ரந்த பாடங்களும் வெகு சிறப்பாக நடத்தப்பட்டன. ஸ்ரீ காதி ஸ்வாமியின் ஸர்வதோமுகமான பாண்டித்யமும் போதநாசக்தியும் மிக வியக்கத்தக்கதாயிருக்கும். அப்படி இரண்டு வருஷங்கள் காஞ்சியிலேயே எழுந்தருளியிருந்து பாடப்ரவசனங்கள் செய்து கொண்டிருக்கையில் ஹைதராபாத் மஹாநகரத்தில் சிஷ்ய வர்க்கங்களின் வேண்டுகோளுக்கிணங்கி காதி ஸ்வாமி அவ்விடமெழுந்தருள நேர்ந்தது. அப்போது அடியேனும் கூடவே விடை கொள்ளும்படியாயிற்று. அப்போது 16 வயது நிரம்புகிறஸமயம்.

ஹைதராபாத் நகரத்தில் ஸீதாராம்பாக் என்பது மிகப்பெரிய தோட்டம். அதில் தேவப்பெருமாள் ஸன்னிதி ஆத்ய அனந்தாசார்ய ஸ்வாமியால் ப்ரதிஷ்டாபிதமானது விளங்கிக் கொண்டிருக்கிறது. அந்த ஸ்வாமி நூறு வருஷங்களுக்கு முன்பு முதன்முதலாக வடதேச யாத்திரை யெழுந்தருளினபோது பூர்ணமல் என்கிற ஸேட்டு தாம் ஸபரிவாரராயும் மற்றும் பல ஸேட்டுக்களுடனும் ஆச்ரயித்து அவ்விடத்தில் மஹத்தான ஸன்னிதியையும் ப்ரதிஷ்டாபனம் செய்வித்தார். அந்த ஸன்னிதி இற்றைக்கும் வெகு சிறப்பாக நடந்து வருகின்றது. சிஷ்ய ப்ரார்த்தனையினல் ஹைதராபாத் நகரத்திற்கு எழுந்தருளின காதி ஸ்வாமி அந்த ஸீதாராம்பாக் என்னும் மஹத்தான தோட்டத்தில்தான் எழுந்தருளியிருந்தார். அப்போது அடியேனும் அங்கு ஏறக்குறைய ஒரு ஸம்வத்ஸரகாலம் உடனிருக்க ப்ராப்தமாயிற்று. அப்போது அவ்விடத்தில் அடியேனுக்குப் பலவிதமான பேறுகள் கிடைத்தன. அந்த ஸமயம் மிகச்சிறந்த ஸமயமென்று நான் அடிக்கடி அதை நினைப்பதுண்டு. அப்போது காதி ஸ்வாமிக்கு நிர்ப்பந்தமான ஒரு காரியமும் கிடையாது. இரவு 9-மணிக்குமேல்தான் நகரத்திலிருந்து சிஷ்யர்கள் வந்து வார்த்தையாடுவர்கள். பகல் முழுவதும் இரண்டொரு மணிகாலம் தவிர மற்ற போதெல்லாம் ஸ்வாமியை க்ஷணமும் விட்டுப் பிரியாமலே வாழ நேர்ந்த காலம் அது. அவ்விடத்து நிகழ்ச்சிகளை மட்டும் எழுதுவதானல் அதமபக்ஷம் நூறு

பக்கங்கள் எழுத விஷயமுண்டு. அவற்றை விட்டிடுகிறேன். சிலவற்றை மட்டும் எழுதுகிறேன். சாஸ்த்ரபாடம் வாசிப்பதோடுகூட ஸ்வரூப க்ரந்தங்களை ஸேவிக்கத் தொடங்கும்படி நியமனமாயிற்று. திருமந்த்ரார்த்த காலக்ஷேபம் அப்போது அவ்விடத்தில்தான் ப்ராப்தமாயிற்று. தாத்பர்ய சந்திரிகையோடு கீதாபாஷ்ய காலக்ஷேபமும் அங்கேதான் ப்ராப்தமாயிற்று. அவ்விடத்தில் இதரர்களோடு பேசினால் ஹிந்தியிலும் தெலுங்கிலும் பேசவேண்டியிருந்தபடியாலே அவ்விரண்டு பாஷைகளிலும் பரிசயம் ஏற்பட்டது அவ்விடத்திலேதான். அந்த ஸமயம் காதி ஸ்வாமியோடுகூட அவ்விடம் விடைகொள்ள நேர்ந்ததானது அடியேனுடைய பலவகை க்ஷேமங்களுக்கு மூல காரணமாயிற்று. திருநாராயணபுரத்தில் மண்டயம் ஆழ்வார் ஸ்வாமியென்று ஸுப்ரஸித்தரான பெரியார் எழுந்தருளியிருந்தார். இவர் நியாய வேதாந்தங்களில் சிறந்த வித்வான். விசேஷித்து பகவத் விஷய ஸாகரத்தில் நன்றாக ஆழ்ந்தவர். நல்ல வாக்மி. இந்த ஸ்வாமி அப்போது ஹைதராபாத் நகரத்தில் ஸேட்டுகளுக்குக் காலக்ஷேபம் ஸாதித்துக் கொண்டு எழுந்தருளியிருந்தபடியால் அடிக்கடி ஸீதாராம்பாக் எழுந்தருளி ஸேவை ஸாதிப்பர். உபயவேதாந்தங்களிலும் ரஹஸ்ய க்ரந்தங்களிலும் நுட்பமான அனேக விஷயங்களை ஸாதித்தருள்வர். இதுவும் ஒரு நல்ல போதுபோக்காக அமைந்தது அங்கு. அந்த ஆழ்வார் ஸ்வாமியின் திருக்குமாரர் லக்ஷ்மீ தாதாசார்யர் ஸ்வாமியென்பவர் நியாயசாஸ்த்ரத்தில் ப்ரசண்ட பண்டிதர். தர்க்க தீர்த்தரென்கிற பிருதும் பெற்றவர். இந்த ஸ்வாமி இளமையிலேயே திருநாடலங்கரித்து விட்டார். இந்த ஸ்வாமியின் மூத்த திருக்குமாரர் ஆழ்வார் திருமலை ஐயங்காரென்பவர் நியாயவேதாந்த வித்வானாகத் திருநாராயணபுரத்தில் எழுந்தருளியிருக்கிறார். அவ்விடத்து ஸம்ஸ்க்ருத காலேஜில் நியாயசாஸ்த்ரப்ரவசனமும் செய்து கொண்டிருக்கிறார். இவருடைய பிதாமஹரான மேலே குறித்த மண்டயம் ஆழ்வார் ஸ்வாமி வயஸா அத்யந்தம் உத்துங்கராயிருக்கச் செய்தேயும் ஸௌசீல்ய நிதியாய் அடியேனோடு கலந்து பழகினவாற்றை நினைக்கும்போதும் அளவுகடந்த ஆனந்தமுண்டாகிறது. இந்த ஸ்வாமியிடத்தில் ஏதாவதொரு க்ரந்தம் அதிகரிக்க வேணுமென்று குதூஹலமுண்டாயிற்று. இதற்கு காதி ஸ்வாமியும் நியமனம் தந்தருளினார். அப்போது, மைஸூர் அனந்தாழ்வானுடைய வேதாந்தவாதாவளியில் ஸித்தாந்த ஸித்தாஞ்ஜநம் முதலிய சிலக்ரந்தங்கள் நாலாறுமாஸகாலம் வாசித்தேன்.



ஸ்ரீ உவே. வித்வான் மண்டயம் ஆழ்வார் ஸ்வாமி (வைகுண்டவாஸி)

ஸீதாராம்பாக் ஸன்னிதியில் அப்போது அர்ச்சக பரிசாரக அத்யாபக கைங்கரியங்களில் தக்ஷிண தேசத்தவர்கள் பன்னிரண்டு ஸ்வாமிகள் நியமிக்கப்

பட்டிருந்தார்கள். தினப்படியாக ஸன்னிதியில் திவ்யப்ரபந்த ஸேவையை நாலாயிர க்ரமமாக ஸேவித்து வரவேணுமென்றும், நான்கு பாதமும் நிதானமாக ஸேவிக்க வேணுமென்றும் நிபந்தனை ஏற்பட்டிருந்தது. கைங்கர்யபரர்கள் பெரும்பாலும் நாலாயிரமோதினவர்களாயிருந்தபடியால் தினப்படி காலை மாலைகளில் அருளிச் செயல் கோஷ்டி வெகு ஆச்சரியமாக நடந்து கொண்டிருந்தது. அடியேன் திவ்ய ப்ரபந்தத்தை அறியாக் காலத்துள்ளே அதிகரித்தவனாயினும் அது வாசோவிதேய மாகப்பெற்றது அந்த ஸீதாராம்பாக் ஸன்னிதியிலேதான். அப்போது அங்கு முஸர்பாக்கம் சாமாவையங்கார் என்பவர் அத்யாபகர்களில் தலைவராக எழுந்தருளி யிருந்தார். அப்போது இவர்க்கு வயது எண்பது. நேத்ரபாடவம் அடியோடு இல்லாதவர். திவ்யப்ரபந்தம் தவிர வேறு எதுவுமறியாதவர். கீர்த்தி மூர்த்தியான கோவர்த்தனம் ரங்காசாரியர் ஸ்வாமியோடு நெருங்கிப் பழகிக் கொண்டிருந்தவ ராம். ஸ்ரீ காதி ஸ்வாமியின் ப்ரபிதாமஹரான ஆத்ய அனந்தாசாரியர் ஸ்வாமி யையும் ஸேவித்திருப்பதாகச் சொல்லுவர். அவ்விரண்டு மஹான்களுடையவும் பரமபாவனமான சரித்திரங்களைச் சொல்லிக் கொண்டே யிருப்பர். அவையும் கர்ணாம்ருதமாகக் காதில் விழுந்து கொண்டிருந்தன. அடியேன் பஹுச்ருதன் என்று சொல்லிக் கொண்டு செருக்குக் கொள்வதற்குப் பல மஹான்கள் காரண பூதர்கள். அவர்களுள், மேலேகுறித்த மண்டயம் ஆழ்வார் ஸ்வாமியும் சாமா வையங்காரென்கிறகிழவரும் அங்கு முதன்மைபெற்றிருந்தவர்கள். மண்டயம்ஸ்வாமி வித்வத் கோஷ்டியில் பரிகணிதராகையாலே அவரிடத்தில் ச்ரவணம் பண்ணின விஷயங்கள் சாஸ்த்ராநுபந்திகளாயிருக்கும். அத்யாபகரான கிழவரிடத்தில் கேட்ட விஷயங்கள் பல மஹநீயர்களின் சரித்திரங்களைப் பற்றியதாயிருக்கும். திருத்தகப்பனாரிடத்தில் கேட்டவை மிக்க இளம்பிராயத்திலே கேட்டவையாகை யாலே என்னுள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்தவை அவையேயாகும். பண்டி தர்கள் ரஸிக்கும் கதைகளும், ஸாமான்யர் உகக்கும் கதைகளும், உபயர்க்கும் உகப்பான கதைகளும் நாடோறும் நாலைந்தாவது ஸாதித்துக் கொண்டேயிருப்பர் திருத்தகப்பனார். அடியேனுக்கு மட்டுமன்றிக்கே உலகுக்கெல்லாம் தந்தையாக எழுந்தருளியிருந்த அவரை இளமையிலேயே பறி கொடுத்த பரிதாபம் பாவியே னுக்கு எந்த ஸந்தர்ப்பத்திலும் மறக்க முடியாமலிருக்கிறது.

காதிஸ்வாமி சோர்வு சோம்பலில்லாமல் பாடங்களை விசேஷமாகச் சொல்லிக் கொடுத்தாரேயல்லது விடுதியான நல்வார்த்தைகளைச் சொன்னதில்லை. அடியேன் திருத்தகப்பனார் முதலானாரிடத்தில் கேட்ட நல்வார்த்தைகளையும் விடுதிக்கதைகளை யும் அந்த ஸ்வாமி ஸன்னிதியில் ப்ராஸங்கிகமாக விண்ணப்பம் செய்ய நேரும். அவற்றைக் கேட்டருளி ஒரு ஸமயம் ஸாதித்தருளின வார்த்தை—“உபந்யாஸங் கள் செய்ய ஆரம்பித்து இடையிடையே இப்படிப்பட்ட விஷயங்களைக் கலந்து பொழிந்தாயாகில் கேட்பவர்கள் மிகவும் ரஸிப்பர்கள்” என்று. இங்ஙனம் அந்த ஸ்வாமி ஹார்தமான க்ருபையோடு அநுக்ரஹ பூர்வகமாக நியமித்தருளினபடியால் அவ்விடத்திலேயே சித்திரையில் செய்ய திருவாதிரையன்று கோஷ்டியில் எம்பெரு மானார் வைபவம் எடுத்துரைத்தேன். அதை ஹிந்தியிலும் சொல்ல வேணுமென்று அந்த தேசத்தார்கள் கேட்டுக் கொண்டபடியால் அன்றிரவு கோஷ்டியில் ஹிந்தி யிலும் உபந்யஸித்தேன். அது முதலாகவே அடியேனுக்கு அடிக்கடி உபந் யாஸங்கள் செய்ய ப்ராப்தமாயிற்று.

அந்த ஸமயத்தில் காதி ஸ்வாமி சிஷ்யப்ரார்த்தனையினால் கல்கத்தா ப்ராந்தம் எழுந்தருள நேர்ந்தது. அடியேனும் கூடவே விடைகொள்ளக் குதூஹலித்திருந் தும், என்னை நெடுநாள் பிரிந்திருக்கமாட்டாத திருத்தாயார் அடிக்கடி யெழுதிக் கொண்டிருந்த கடிதங்களினால் காஞ்சிக்குத் திரும்பி வந்துவிட நேர்ந்தது. அப் போது மாதாமஹஜீயர் ஸ்வாமியும் திருநாராயணபுர ப்ராந்தத்திலிருந்து காஞ்சிக்

குத் திரும்பி யெழுந்தருளியாயிற்று. அப்போது ஸ்ரீஜீயர் ஸ்வாமி மடத்தில் காலை வேளைகளில் ஸ்ரீவசநபூஷணதி ரஹஸ்ய காலக்ஷேபமும் மாலை வேளைகளில் பகவத்விஷய காலக்ஷேபமும் சிறக்க நடந்துகொண்டிருக்கிறது. காஞ்சீவாஸிகளான சில ஸ்வாமிகள் ஸேவித்துக் கொண்டிருக்கிறார்கள். அடியேனும் அந்த கோஷ்டியில் அந்வயித்து ஸேவிக்க ஆரம்பித்தேன். அப்போது பதினேழாவது வயது நடந்துவருகிறது. ப்ரஹ்மசாரியாகவே யிருக்கிறேன். ஜீயர்ஸ்வாமி தமிழ்ப் பண்டிதரென்று ஸுப்ரஸித்தர்; பூர்வாச்ரமத்தில் தேவப்பெருமாள் ஸன்னிதிக்குள் நடந்து கொண்டிருந்த சடகோபநிலய பாடசாலையில் பல வாண்டுகள் தமிழ் உபாத்யாயராக எழுந்தருளியிருந்தவர். இலக்கண இலக்கியங்களில் ஜீயர் ஸ்வாமியின் பாண்டித்யம் அபரிமிதமானது அக்காலத்தில் (பூர்வாச்ரமத்தில்) வடகலையார் தென்கலையார் பல பேர்கள் ஸ்வாமியிடத்திலே தமிழ் வாசித்துத் தேறினவர்களுண்டு. ஸுப்ரஸித்தரான (வைகுண்டவாஸி) வை. மு. சடகோபராமாநுஜாசாரியர் ஸ்வாமிக்குத் தமிழுபாத்யாயரான "புன்னை சீமாச்சார்" என்று ப்ரஸித்தரான ஸ்வாமியும் ஜீயர் ஸ்வாமியிடத்திலேதான் பரிபூர்ணமாகத் தமிழ் வாசித்தவர் என்று சொல்லக் கேள்வி. பூர்வாச்ரமத்தில் "ஷஷ்டி வரதாசாரியர் ஸ்வாமி"யென்று ப்ரஸித்தர். ஸ்வாமி ஸாமசாகையாதலால் ஸாம வேதத்தைப் பரிபூர்ணமாக வோதினவர்; சாந்தோக்ய உபநிஷத்தை ஸ்வரத்தோடு கர்ணச்ராவ்யமாக ஓதுவர். ஸங்கீத சாஸ்த்ரத்திலும் சிறந்த பாண்டித்யமுள்ளவர். உத்தமாச்ரமியான பிறகும் இராக்காலங்களில் மடத்துவாசலில் வீணை வாசிப்பர். நூற்றுக்கணக்கான ஜனங்கள் கீழகோபுர வீதியில் நின்று கொண்டே கேட்டிருப்பர்கள். ஸன்னிதிகளில் வீணை வாசித்துக் கொண்டே உபந்யாஸங்கள் ராகத்துடன் ஸாதித்தருள்வர். கர்ணாம்ருதமான சாரீரம். ஆச்சரியமான—பரமகம்பீரமான திருமேனித் தோற்றம். பரத்வமென்பதைச் சிறிதும் காட்டாத சீலநிதி.

உத்தமாச்ரமஸ்வீகாரம் செய்தருளின பிறகு சிலர் ஸ்வாமி ஸன்னிதியிலே வந்து தமிழ்ப்பாடம் ஸாதிக்க வேணுமென்று வந்தார்களாம்; "இனி நான் ஸம்ப்ரதாயக்ரந்தங்கள் தவிர தமிழ்ப்பாடங்கள் சொல்லமாட்டேன்"னென்று மறுத்து விட்டாராம். அடியேன் ஜனிப்பதற்கு முந்தியே இம் மாதாமஹஸ்வாமி ஆச்ரமஸ்வீகாரம் செய்தருளியாயிற்று. ஸ்வாமியினுடைய ஜ்யேஷ்டபுத்ரியின் புதல்வனாக அடியேன் ஜனித்திருந்தபடியால் ஸ்வாமிக்கு அடியேனிடத்தில் இளமை தொடங்கியே அபரிமிதமான வாத்ஸல்யம். 'ஜீயர்தாதா' என்று சொல்லிக் கொண்டு மடத்திலேயே விழுந்து கிடப்பேன். அக்காலத்தில் கம்பராமாயணம் பிள்ளைப்பெருமாளையங்கார் பிரபந்தம் முதலானவை அதிகமாக அச்சேறவில்லை. அவையெல்லாம் ஸ்வாமிக்கு நாலாயிரதிவ்யப்பிரபந்தம்போல் கண்டபாடமாகவேயிருந்தன. அடியேனுக்கும் அப்படியேயாக வேணுமென்று ஸ்வாமிக்கு உத்கடமான உத்கண்டையிருந்தது. இளமையிலேயே அவற்றை அடியேனுக்குச் சந்தை சொல்லிக் கொடுத்தருள்வர். நன்னூலையும் அப்படியே சந்தை சொல்லிக் கற்பித்தருளினர். பகவத் விஷய ப்ரவசனம் நடக்கிறபோதும் பகல்வேளையில் மடத்திற்கு அடியேனை வரவழைத்துத் தமிழ்ப்பாடங்கள் சொல்லித் தருவர். வைசாகோத்ஸவம், மணவாளமாமுனிகளுத்ஸவம் முதலான விசேஷோத்ஸவ ஸமயங்களில் விராமமேயிராது; அப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களிலுங்கூட விச்ராந்தி கொடாமல் ஆளிட்டு அடியேனை மடத்திற்கு வரவழைத்தருள்வர். சில ஸமயங்களில் தாமே நேராக எழுந்தருளி "அண்ணங்காசாரீ! என்ன பண்ணுகிறாய்? வா" என்று திருவீதியிலிருந்தே கூப்பிட்டருள்வர். அதற்காக ஸ்வாமியை 'ஸம்ந்யாஸியா ஸம்ஸாரியா' என்றும் சிலர் ஏசுவர்கள். எதையும் செவியேற்கமாட்டார் ஸ்வாமி. இடைவிடாது மூன்று வருஷகாலம் இளம்பிராயத்திலே அடியேனைத் தமது திருவடி வாரத்திலே வளர்த்தருளினர். பதினேழாவதுவயதிலிருந்து மறுபடியும் இரண்டு மூன்று வருஷ காலம் அப்படிப்பட்ட பாக்யம் ப்ராப்தமாயிற்று.

ஜீயர் ஸ்வாமி நான்கு திசைகளிலும் யாத்திரை யெழுந்தருளியிருந்தவராதலால் அக்காலத்தில் ஸ்வாமியை யறியாதபேர் எவ்வூரிலுமிருந்ததில்லை. ஸ்வாமியை ஸேவிக்க தினப்படியாக வெளியூர்களிலிருந்து யாராவது வந்து கொண்டே யிருப்பர்கள். அவர்கள் ஜீயர்ஸ்வாமியினுடைய ஸ்ரீஸூக்தியைக் கேட்கவிரும்பினல் 'அண்ணா! நீ ஏதாவது சொல்லு' என்று அடியேனுக்கு நியமித்தருள்வர். அடியேனும் கூசாமல் ஒரு பாசுரத்தையோ ச்லோகத்தையோ எடுத்துக் கொண்டு உபந்யஸிப்பேன். அப்போது ஜீயர்பேரன் என்றே அடியேனுக்கு எங்கும் ப்ரஸித்தி யுண்டாயிற்று. ஜீயர்ஸ்வாமி திருநாடலங்கரித்த பிறகுங்கூட சில வருஷம் வரையில் அந்தப்பெயரே அநுவர்த்தித்து வந்தது.

ஜீயர்ஸ்வாமி எம்பெருமானருத்ஸவந்தோறும் அனேகமாய் ஸ்ரீபெரும்பூதூருக்கு எழுந்தருள்வது வழக்கம். அங்கு ஸ்ரீமத் உ.வே. திருநீர்மலை கண்ணமாசாரியர் ஸ்வாமி ஜீயர்ஸ்வாமி திருவடிகளிலே மஹத்தான ப்ராவண்ய முடையவராதலால் அடிக்கடி ஸ்வாமியை ஸேவிக்கக் காஞ்சிக்கு எழுந்தருள்வர். ஒரு ஸமயம் எழுந்தருளினபோது தேவப்பெருமாள் ஸன்னிதியில் நூற்றுக்கால் மண்டபத்தில் ஒரு உபந்யாஸம் ஸாதிக்கும்படி பலரும் பிரார்த்திக்க, அந்த ஸ்வாமியும் அப்படியே யிசைந்து ஸாதித்தார். அன்று திவ்ய ப்ரபந்தவைபவம் என்னும் விஷயமாக ஸாதித்தார். எல்லாரும் (இருகலையாரும்) ஆனந்தமாகக் கேட்டுக்கொண்டிருக்கையில், சாமா திருமலைதாதாசாரியருடைய குமாரர் ஸாமிதாதாசாரியரென்பவர் எழுந்து "தமிழ் மிலேச்ச பாஷையாகையாலே அந்த பாஷையில் தோன்றின பிரபந்தங்களை வேத ஸமமாகவும் வேதத்தைவிட உத்க்ருஷ்டமாகவும் சொல்லுவது தகாது" என்று ஆக்ஷேபம செய்தார். அதற்கு அந்த ஸ்வாமி ப்ரமாண பூர்வகமாக ஸமாதானம் ஸாதித்து யாவரையும் மகிழ்வித்தார். அப்போது அடியேனுக்கு அது விஷயமாக ஒரு க்ரந்தமெழுத வேணுமென்கிற குதூஹலமுண்டாயிற்று. "திவ்யப்ரபந்த வைபவ விவேகः" என்றொரு ஸம்ஸ்க்ருதக்ரந்தம் அப்போது எழுதி க்ரந்த லிபியில் அச்சிட்டு வெளியிட்டேன். அடியேன் க்ரந்தரசனையில் இறங்கினபோது இது தான் முதன்முதலாக எழுதி வெளியிட்ட நூல். அது அப்போது தென்னாடு முழுவதும் பரவியதனல் அது காரணமாகப் பலருடைய திருவுள்ளத்தில் அடியேன் குடிபுக நேர்ந்தது. இத்திருநீர்மலை ஸ்வாமியோடு பலவாண்டு நெருங்கிப் பழகினேன்.

அக்காலத்தில் திருக்கண்ணபுரம் பட்டப்பாஸ்வாமி ப்ரஸித்தவித்வானக எழுந்தருளியிருந்தவர் சென்னைமாநகரில் ப்ரவசனங்கள் செய்யத் திருவுள்ளம்பற்றி ஜீயர் ஸ்வாமியின் நியமனம் பெற்றுப் போகலாமென்று காஞ்சிக்கு எழுந்தருளி ஸ்வாமி மடத்திலேயே நாலைந்துநாள் தங்கியிருந்தார். அந்த ஸ்வாமி மஹாவாக்மியாகையாலே அவருடைய உபந்யாஸங்களைத் தேவப்பெருமாள் ஸன்னிதியில் நடப்பிக்கவேணுமென்கிற ருசி ஜீயர்ஸ்வாமிக்கு உண்டாயிற்று. அந்த ஸ்வாமியும் உபந்யஸிப்பதற்கு ஸ்வயமேவ உத்கண்டிதராயிருந்தார். நூற்றுக்கால் மண்டபத்தில் ஆழ்வார்களின் பெருமையைப்பற்றி முதல் நாளும், ஆசாரியர்களின் பெருமையைப்பற்றி மறுநாளும் உபந்யஸித்தார். ஆசாரியர்களின் பெருமையைப் பேசும்போது ஆசார்யத்வோபயுக்தமான ஸகல குணங்களும் நிரம்பி யிருந்தது மணவாளமாமுனிகளொருவரிடத்திலேதான் என்பதை உபபத்திகளுடன் வெகு ரமணீயமாக உபந்யஸித்தார். அப்போது தேவப்பெருமாள் தேவஸ்தானத்திற்கு ரிஸீவராயிருந்த தோணுங்குளம் ராமாநுஜாசாரியரென்பவர் முடிவுரை சொல்லவெழுந்து "இந்த ஸ்வாமி வெகு ஆச்சரியமாக உபந்யஸித்தார்; நாளைக்கு தேசிகன் பெருமையையும் உபந்யஸிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்" என்றார். அந்த ஸ்வாமியும் அப்படியேயென்று இசைந்திருந்தார். ஆனல் என்ன காரணத்தாலோ மறுநாள் உபந்யாஸம் நடைபெறவில்லை. அப்போது அந்த

ஸ்வாமியோடு அடியேனுக்கு மிகவும் நெருங்கின பரிசயம் ஏற்பட்டு அது திநேதிநே அபிவிருத்தியடைந்து அடிக்கடி அவரை யுத்தேசித்து அடியேன் சென்னைக்கு விடைகொள்வதும், அடியேனை யுத்தேசித்து அவர் காஞ்சிக்கு எழுந்தருள்வதுமாய் ஸங்கிகர்ஷம் ப்ரபலப்பட்டுவிட்டது. அந்த ஸ்வாமி சென்னையில் தங்கசாலைத் தெருவில் ஜாகை அமைத்துக்கொண்டு இரண்டு மூன்று சாரிடிகளில் உபந்யாஸங்கள் ஸாதிக்கத் தொடங்கினார். அப்போது அடியேன் மாதந்தோறும் இரண்டு மூன்று நாட்களாவது அங்குச் சென்றிருப்பேன். அந்த ஸ்வாமியின் நியமனத்தினால் உபந்யாஸங்களும் செய்வேன். அவ்விடத்திலேயே ஸ்திரவாஸம் செய்யும்படி அவ்விடத்து பக்தர்கள் பலர் கேட்டுக்கொள்வர்கள். அப்போது அடியேன் வித்யார்த்தி தசையிலேயேயிருப்பவனதலாலும் நகரவாஸத்தில் ருசியற்றவனதலாலும் அதற்குச் சிறிதும் இணங்கிற்றிலேன். அப்போது அவ்விடத்தில் அதே வீதியில் பண்டிட் லக்ஷ்மணசார் கீதை யுபந்யாஸம் செய்து கொண்டிருந்தார்; பட்டப்பாஸ்வாமி அவ்விடத்தில் உபந்யாஸம் ஸாதிக்க ஆரம்பித்த பிறகு லக்ஷ்மணசாருடைய கோஷ்டி குறையத் தொடங்கிற்று; அதனால் அவர் ஸ்வஸ்தானம்சென்று சேர்ந்தார். பட்டப்பாஸ்வாமி ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளினால் ஜனங்களை ஆவர்ஜனம் செய்கிறரென்று தெரிந்து கொண்ட லக்ஷ்மணசார் தாமும் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில் பரிசயத்தை ஸம்பாதித்துக் கொண்டு மறுபடியும் சென்னைக்கு வருவதாகச் சொல்லிப்போய் அப்படியே இரண்டு மூன்று வருஷகாலம் ஸ்வஸ்தானத்திலிருந்து கொண்டு சில ஸ்ரீவைஷ்ணவ பண்டிதர்களைத் துணைகொண்டு திவ்யப்ரபந்தத்தில் சிலசில பாகங்களை அதிகரித்து வியாக்யானங்களையும் ஸேவித்து மறுபடியும் சென்னைமாநகர் வந்து முதன்முதலாக அமலனதிபிரான்



ஸ்ரீ உ.வே. திருக்கண்ணபுரம் பட்டப்பா ஸ்வாமி
யென்கிற திருவேங்கடாசாரியர் ஸ்வாமி
(வைகுண்டவாஸி)

உபந்யஸித்தார். திருப்பாவையும் உபந்யஸித்தார். பெரியவாச்சான்பிள்ளை கன விலே தமக்கு ஸாக்ஷாத்காரமளித்து அர்த்தவிசேஷங்களை உபதேசித்தருளின தாக ஸதஸ்ஸில் அடிக்கடி சொல்லுவராம். பழையபடியே பக்தர்கள் அவரிடத்தி லும் ஈடுபட்டு உபந்யாஸங்கள் கேட்டு வந்தார்கள்.

பட்டப்பா ஸ்வாமியைப்போல உபந்யஸிக்கவல்லவர்கள் இல்லையென்றே சொல்லலாம். அவருடைய பிதாமஹர் வாய்மோட்டு வரதாசாரியர் ஸ்வாமியென்று ஸுப்ரஸித்தராம். அந்த ஸ்வாமியின் உபயவேதாந்த வைதுஷ்யாதிசயத்தைப் பற்றி அஸ்மதீய மாதாமஹ ஜீயர் ஸ்வாமி காலக்ஷேப ஸமயங்களில் அடிக்கடி ஸாதித்துக் கொண்டிருந்ததுண்டு. அவரிடத்திலேயே பட்டப்பா ஸ்வாமி ஸகலார்த் தங்களும் கேட்டவராம். ஸம்ப்ரதாயார்த்தங்களில் அவரிட்டது பிச்சை என்றே சொல்லும்படியாயிருந்தது. அந்த ஸ்வாமி அதிஸ்வல்பகாலத்திலேயே சென்னையி லேயே திருநாடலங்கரிக்க நேர்ந்து விட்டது. ஆனாலும் நாலைந்து வருஷங்கள் சென்னையில் அந்த ஸ்வாமி காலக்ஷேபம் ஸாதித்துக் கொண்டிருந்ததன் பலனாகவே சென்னையில் வைணவம் தழைத்தோங்கும்படியாயிற்று. அவருடைய தேஜஸ்ஸு அத்விதீயமானதே. அப்போது அவரிடத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் கிடாம்பி தெய்வசிகாமணி ஐயங்கா ரென்பவர் திருமடைப்பள்ளி கைங் கரியம் பார்த்து வந்தார். அவர் இளமையில் காவ்ய நாடகாதிகள் சிறிது வாசித்திருந்தார். பட்டப்பா ஸ்வாமியிடம் உபந்யாஸங்கள் கேட்டே விசேஷமான ஞானம் பெற்று ஸ்ரீவில்லிபுத்தூரில் பல வாண்டுகள் பல பேர்களுக்கு ஸம் ப்ரதாய க்ரந்த ப்ரவசனம் செய்து வந்தார். அந்த தெய்வசிகாமணி ஸ்வாமியின் ஸ்நேஹமும் அடியே னுக்கு ஏற்பட்டு, ஒருவிசை அடி யேனோடுகூட அவர் வைரமுடியுத் ஸவத்திற்குத் திருநாராயணபுரம் வந்தார். அப்போது இருவோமுக் கும் பரஸ்பர ப்ரேமபந்தம் ப்ரபல மாயிற்று.



ஸ்ரீ உவே. கிடாம்பி தெய்வசிகாமணி ஸ்வாமி ஸ்ரீவில்லிபுத்தூர் (வைகுண்டவாஸி)

அடியேன் பதினாறுவது வயதில் முதல் தடவையாக நம்பெருமாள் ஸன்னிதியில் திருவத்யயநோத்ஸ வம் ஸேவிக்க விடை கொண்டேன். அப்போது ப்ரதிஸம்வத்ஸரமும் இவ்வுத்ஸவத்தை ஸேவித்தே தீர வேணுமென்கிற அத்யவஸாயமுண் டாயிற்று. அப்படியே அனேக வருஷங்கள் அடுத்தடுத்து அவ்விடம் விடை கொண்டு ஸேவித்து வந்தேன். அத னால் அடியேனுக்கு ஸ்ரீரங்கநாதன் ஸன்னிதியநுபவம் அதிகமாகவுண்டு. ப்ரஹ் மோத்ஸவங்களுக்கும் பல தடவை சென்று ஸேவிக்க ப்ராப்தமாயிற்று. இற்

றைநாள் வரையில் அடியேன் ஸ்ரீ ரங்கம் சென்று ஸேவித்த பர்யாயங்கள் 75-க்கு மேல் என்னலாம். அங்கே திருவத்யயநோத்ஸவத்தில் நடைபெறும் அரையர்ஸேவையில் அடியேனுக்கு அபரிமிதமான அபிநிவேசம் உண்டானபடியால் அவ்வுத்ஸவத்திற்கு மட்டும் அனேகமாய்த் தவறாமல் விடை கொள்வதை வைத்துக் கொண்டிருந்தேன். ஒருவிசை மாதா மஹ ஜீயர்ஸ்வாமியும் அவ்விடத்தில் எழுந்தருளியிருக்க நேர்ந்தது. அப்போது ஸ்ரீ குவளக்குடி சிங்கமையங்கார் ஸ்வாமியென்பவர் தேவஸ்தான தர்மகர்த்தாவாயும் தென்னாசார்ய தர்சநநிர்வாஹகராயும் அவ்விடத்தில் எழுந்தருளியிருக்கிறார். இவர் மஹத்தான ஸம்பத்தையுடையவர். இவர் தம்முடைய கீர்த்தி ஆசந்த்ரார்க்கம் விளங்கும்படியாக ஸ்ரீ ரங்கத்தில் தம்முடைய திருமாளிகை ஸமீபத்தில் தென்னாசார்ய ஸம்ப்ரதாய பாடசாலையொன்று விசேஷமான மூலதனத்துடன் ஸ்தாபித்தவர். அந்த பாடசாலை இற்றைக்கும் விசேஷ அபிவிருத்தியுடன் நடைபெற்று வருகிறது. இப்பாடசாலையை ஸ்தாபிக்க முயலுங்காலத்திலே அந்த சிங்கமையங்கார் ஸ்வாமியின் உயர்ந்த கடாக்ஷவீக்ஷணத்திற்கு அடியேன் இலக்கானேன். இராப்பத்தில் நம்பெருமாள் புறப்பாடு கண்டருளி ஆயிரக்கால் மண்டபத்திற்கு எழுந்தருளும்போது ஸ்ரீ ரங்கராஜஸ்தவம் ஸேவிக்கிற கோஷ்டி மிகப் பெரிதாக நடைபெறுவது வழக்கம். அந்த கோஷ்டியில் அடியேன் இருந்து கொண்டு உச்சஸ்வரமாக ஸேவிக்கையில் எதிர்வரிசையில் தடியை யூன்றிக்கொண்டு தளர்ச்சியோடு நின்று கொண்டிருந்த சிங்கமையங்கார் ஸ்வாமி 'இந்த பிள்ளையாண்டான் யார்? எவ்வூர்' என்று பக்கத்தில் நிற்குமொரு பெரியவரைக் கேட்கிறார்; 'காஞ்சீபுரத்திலிருந்து அழகியமணவாள ஜீயர்ஸ்வாமி எழுந்தருளியிருக்கிறாரே, அவருடைய பேரன்' என்று அவர் சொல்லுகிறார். 'அப்



ஸ்ரீமத் உ-வே. குவளக்குடி சிங்கமையங்கார் ஸ்வாமி
ஸ்ரீ ரங்கம் (வைகுண்டவாஸி)

படியா? இதுவரையில் எனக்குத் தெரியாமல் போயிற்றே' என்கிறார் சிங்கமையங்கார் ஸ்வாமி. இந்த ஸம்வாதத்தை அடியேன் கவனித்துக் கொண்டேயிருக்கிறேன். பிறகு அவர் அடியேனருகே வந்து நின்று கொண்டு "இவ்வூரில் ஸேவிக்கிற ஸ்தவம் உமக்கு எப்படி பாடமாயிற்று? தேவப்பெருமாள் ஸன்னிதி



(வைகுண்டவாஸியான) ஸ்ரீ மதுபயவே மெய்யுவையங்கார் ஸ்வாமியின்
ஸ்ரீபாஷ்யப்ரவசந கோஷ்டி ஸ்ரீ ரங்கம்

யில்கூட இது ஸேவிக்கிற வழக்கமுண்டா என்ன?" என்று கேட்டார். அதற்கு அடியேன் "தேவப்பெருமாள் ஸன்னிதியில் இந்த உத்ஸவம் நடப்பது வெகு ஏகாந்தம்; அங்கு இந்த ஸ்தவம் ஸேவிக்கப்ரஸக்தியும்கிடையாது" என்றேன். 'அப்படியானல் இதை நீர் எதற்காக வரப்பண்ணினீர்?' என்று அவர் கேட்க, "திருத்தகப்பனர் இளமையிலேயே அடியேனுக்கு எல்லாம் கற்பித்தார்" என்றேன். பிறகு புறப்பாடு முடியும் வரையில் கூடவேயிருந்து அடியேனைத் தமது திருமாளிகைக்கு அழைத்துச் சென்றார். ஸ்ரீ உவே. வித்வான் மெய்யுவையங்கார் ஸ்வாமி யென்பவர் அப்போது கோயிலில் ப்ரதிஷ்டிதராக எழுந்தருளியிருக்கிறார். அனேகர் அந்த ஸ்வாமியிடத்தில் உபயவேதாந்த ரஹஸ்யங்கள் அதிகரிக்கிறார்கள். சாஸ்த்ரபாடங்களும் ஸாதித்து வருகிறார்; புராணப்ரவசனமும் செய்து போருகிறார். [அந்த ஸ்வாமியின் திருக்குமாரரே ஸ்ரீ பண்டிதராஜ ஸுந்தரராஜாசார்யர். இவரே ஸ்ரீவிலாஸம் அச்சுக்கூடத்திற்குத் தலைவராய் அம்ருதலஹரீ பத்ரிகைக்கு அடியேனேடுகூட ஸஹகாரி ஸம்பாதகராக இருந்து வருகிறார்.] அந்த மெய்யுவையங்கார் ஸ்வாமியிடம் அடியேனைக் கொண்டுவிட்ட

அப்பெரியார் "இவரைப் பரீக்ஷிக்க வேணும்" என்று ஸாதித்தார். அந்த ஸ்வாமியோடு அடியேனுக்கு முன்னமே விசேஷபரிசயமிருந்ததனுலும், இரண்டு மூன்று வருஷகாலம் முன்னமே பிடித்து பத்ரிகாஸம்வாதங்களும் விசேஷமாக இருந்தபடியாலும் "இந்த ஸ்வாமியைப் பரீக்ஷிக்க இவ்வூரில் ஒருவருமில்லை" என்று தம்முடைய ப்ரீதிவிசேஷமும் க்ருபாவிசேஷமும் தோன்ற அளவு கடந்து ஸாதித்து விட்டார் மெய்யுவையங்கார்ஸ்வாமி. அதனுல் சிங்கமையங்கார் ஸ்வாமிக்கு அடியேன்மீது அளவற்ற விச்வாஸமுண்டாயிற்று. எனக்கு ஸர்வஸ்வதானம் பண்ணவேணுமென்கிற அபிலாஷையும் அவர்க்கு உண்டாயிற்று. அதனுல் "பிள்ளாய்! ஸங்கோசப்படாமல் கேட்க வேணும்; வேண்டியதைத் தருகிறேன்" என்ருர். பதினுயிரம் ரூபாய் வேணுமென்று கேட்டாலும் கொடுப்பர் போலிருந்தது; அது அந்த ஸ்வாமிக்கு லக்ஷ்யமுமன்று; அவர் பல லக்ஷங்களுக்கு அதிகாரியாகையாலே அவலீலையாகக் கொடுக்கவும் வல்லவர்; ப்ரீதியோ கரை புரண்டிருக்கிறது. ஆனுலும் அந்த ஸ்வாமியிடத்தில் அடியேன் அப்போது இரண்டு விஷயம் விரும்பினேன். ஸ்ரீ ரங்கத்திற்கு அப்பால் ஒரு திவ்யதேசமும் ஸேவித்ததில்லையாகையாலே ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆழ்வார் திருநகரி வனமாமலை திருக்குறுங்குடி அனந்தசயனம்வரை ஸேவித்துவரக் குதூஹலங்கொண்டு அதற்குரிய ஸௌகரியம் பண்ணித்தர வேணுமென்று ஒரு விஷயம் விஜ்ஞாபித்தேன்; அக்காலத்தில் அடியேனிடத்தில் விசேஷமாகப் புஸ்தகங்கள் கிடையாது; திருத்தகப்பனுர் காலத்தில் 30, 40 புஸ்தகங்களே சேமிக்கப்பட்டிருந்தன. "கோசவாந் ஆசார்ய:" என்பதை நினைத்து ஸ்ரீகோசங்களை விசேஷமாகத் திரட்டவேணுமென்று ருசியுண்டாகி அதை இரண்டாவது விஷயமாக விஜ்ஞாபித்தேன். வாமனன் மஹாபலியிடத்திலே சென்று *என்னுடைய பாதத்தால் யானளப்ப மூவடி மண் மன்னு! தருகென்று வாய் திறந்தபோது இதை அல்பப்ரார்த்தனையாக நினைத்த மஹாபலிக்கு வெட்கமுண்டாயிற்றென்று தேசிகன் ஸாதிக்கிருர் "வ்ரீடாவித்த வதாந்யதர்நவ" என்பதனுல்; அதுபோலவே அந்த மஹாஸ்வாமிக்கும் அடியேனுடைய அல்பப்ரார்த்தனையினுல் லஜ்ஜையுண்டானதாகவே தெரிந்து கொண்டேன். ஆயினும் அவரிடத்தில் அடியேன் விரும்பியது அவ்வளவே. உடனே அந்த ஸ்வாமி இதற்கென்ன ப்ரமாதம்? என்று ஸாதித்து, தம் திருமாளிகைக்கு அழைத்துக் கொண்டுபோய் ஸித்தமாக வைத்துக் கொண்டிருந்த பட்டு பீதாம்பரங்கள் சிலவற்றைப் பரமப்ரீதியோடு ஸாதித்து, நூறு ரூபாய் கொடுத்து 'திவ்யதேச யாத்திரையைச் செய்து கொண்டு மறுபடியும் இவ்விடமே வாரும்' என்று சொல்லி விடை கொடுத்தார்.

அப்போது காஞ்சீபுரத்திலிருந்து ஸ்ரீ ரங்கத்திற்கு மூன்று ரூபாய்க்குள்ளாகவே ரைல்சார்ஜ் இருந்தது. அந்த ஸ்வல்ப தொகையும் அடியேன் கடன் வாங்கிக் கொண்டு வந்தவன். குடும்பநிர்வாஹமும் ச்ரமதசையில் இருந்த காலம் அது. அதனுல், அப்போது சிங்கமையங்கார் ஸ்வாமி அசிந்திதமாகச் செய்தருளின உபகாரம் மஹோபகாரம், மஹாமஹோபகாரம் என்று மதிக்கக்கூடியதாக இருந்தது. அடியேனுக்கு அப்போதுண்டான ஆனந்தம் அளவிட முடியாதது. திருத்தகப்பனுர் தம்முடைய வாழ்நாளை மிகுந்த ச்ரமத்துடன் கழித்தவர். சுரோத்திரியக்ராமமிருந்ததாக நாமமாத்ரமேயொழிய அதிலிருந்து வருஷத்தில் அப்போது 200 ரூ. காண்பது அரிதாயிருக்கும். பாடசாலையில் உபாத்யாயராக இருந்தபோது, பல வருஷங்களில் ஐந்து ரூபாயும், சில வருஷங்களில் ஏழு ரூபாயும் வேதனமாம். ஆகவே வெகு ச்ரமத்துடன் குடும்பநிர்வாஹம் செய்து வந்தார். யாராவது சோதிடர்கள் வந்தால் அவர்களிடம் அடியேனுடைய ஜாதகத்தைக் காண்பித்து யோகங்களைப்பற்றிக் கேட்பர்; அப்படி 50, 60 சோதிடர்களிடம் திருத்தகப்பனுர் கேட்டது அடியேனுக்கு நினைவிருக்கிறது. ஒவ்வொரு சோதிடரும் "இப்படிப்பட்ட ஜாத

கம் நாங்கள் பார்த்ததேயில்லை; அநந்யஸாமாந்யமான யோகங்களுள்ள ஜாதகம் இது" என்றே சொல்லுவர்கள். அதைக் கேட்டுத் திருவுள்ளம் பூரிப்பர் தகப்பனர். "மருகாந்தாரத்தில் சென்றாலும் வடைபாயஸத்தோடு ம்ருஷ்டான்ன போஜனம் கிடைக்கும்" என்பர் ஒவ்வொரு சோதிடரும்.

"வாசகர்களே! அடியேனுக்கு நினைவுக்கு வரும் விஷயங்கள் அபரிமிதம்; அவற்றையெல்லாம் எழுதிககொண்டு போனல் இதுவொரு மஹாபாரதமேயாகும். யாரும் வாசிக்கவும் மாட்டார்கள். ஏதோ முக்கியமென்று தோன்றுகிறவற்றை எழுதுகிறேன். சிலவற்றாலோ பலவற்றாலோ ஆத்மஸ்துதி [தற்புகழ்ச்சி] பலிப்பதாகக் கண்டாலும் அதற்காக அடியேன் ஸங்கோசப்படவில்லை. பெரியார்களின் பரமக்ருபைக்கு விசேஷமாக இலக்காகப் பெற்றேனென்பதை வெளியிட்டு இதனல் ஒரு ஆத்மானந்தமடைவதற்கே இஃது எழுதப்படுவதால் அன்புடையார்க்கு இது போக்யமாகட்டும்; உதாஸீநர்கட்கு உபேக்ஷணீயமாகட்டும்.

கீர்த்திமூர்த்தியான சிங்கமையங்கார் ஸ்வாமியின் பரமக்ருபையைப் பெற்றவடியேன் அன்றே ஸ்ரீ வில்லிபுத்தூர் முதலான திவ்யதேசங்களை ஸேவிக்கப் புறப்பட்டு விட்டேன். அடியேனுடைய வாழ்நாளில் இந்த திவ்யதேசங்களை யெல்லாம் 20, 30 தடவை ஸேவித்திருக்கிறேனகிலும், விவாஹமாவதற்கு முன்னே ப்ரஹ்மசாரியாயிருந்து கொண்டு முதல் தடவையாக ஸேவிக்கப்பெற்ற காலத்துச் செய்திகளை விஜ்ஞாபிக்கிறேன். முதலில் ஸ்ரீ வில்லிபுத்தூர் விடை கொண்டேன். ஏற்கெனவே அடியேனுக்குப் பரமாப்தரென்று கிடாம்பி தெய்வசிகாமணி ஸ்வாமியொருவர் (பக்கம் 34-ல்) தெரிவிக்கப்பட்டிருக்கிறார். அவருடைய ஸ்நேஹம் அப்போது ஏற்பட்டிருக்கவில்லை. நடத்தைகளை ஆநுபூர்வியாக இதில் எழுதிவருகின்றேனில்லை. பெரும்பாலும் முன்னதுபின்னதாகவே எழுதப்பட்டு வருகின்றன. திருக்கண்ணபுரம் பட்டப்பா ஸ்வாமியின் ப்ரீதிவிச்வாஸங்கள் ஏற்பட்ட வரலாறுகளை அடியேன் இதில் முன்னமே யெழுதியிருந்தாலும் அவை பிற்பாடு ஏற்படுமவையேயாம். ப்ராஸங்கிகமாக எழுத ப்ராப்தமாமவற்றை விடமுடியாமையாலே வரலாறுகளில் பௌர்வாபர்யக்ரமம் பரிபாலிக்க முடிகிறதில்லை. அடியேனுடைய இருபத்திரண்டாவது வயதுக்குப்பிறகு ஏற்பட்ட வரலாறுகள் அனேகமாக வரிசைக்கிரமமாய் எழுதப்படலாம். அதற்கு முந்திய வரலாறுகள் இவை.

ஸ்ரீ வில்லிபுத்தூரில் முதன்முதலாகப் பல மஹான்களின் பரமக்ருபையைப் பெற்றேன். அங்கே நடந்து கொண்டிருந்த அத்யயநோத்ஸவ கோஷ்டியை ஸேவிக்கும்போது அடியேனுக்கு வெகு விஸ்மயமுண்டாயிற்று. ஆசார்யஹ்ருதயத்தில் *பொலிக பொலிகவுக்கு ப்ரமேயம் ஸாதிக்கிறபோது "லோகத்வீபாந்தரங்களில் நின்றும் போந்த தேவர்குழாங்களைக் கண்டு காப்பிட்டு" என்று ஸாதிக்கிறார்; ஸ்ரீ வைகுண்டத்திலுள்ளாரும் ச்வேதத்வீபத்திலுள்ளாரும் ஆழ்வாரெதிரே வந்து திரண்டதாக ஸாதிக்கிறார். அந்தத் திரளையே அடியேன் அப்போது ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஸேவிக்கப்பெற்றேன். அதிசயோக்தியன்று; பரமவிலக்ஷணர்களான ஐந்நூறு ஸ்வாமிகள் ஸேவை ஸாதித்தார்கள். காஞ்சீப்ராந்தத்தில்தான் ஸ்ரீ வைஷ்ணவத்திரள் அதிகமென்று இறுமாப்புக் கொண்டிருந்த அடியேன் அவ்விடத்தில் ஸேவித்தவாறே அது தொலையப்பெற்றேன். பாவியேனுடைய கண் பொல்லாதது; கண்ணெச்சில் பட்டு விட்டது. அடுத்த பர்யாயங்களில் அந்த திவ்யதேசத்திற்கு விடை கொண்டபோது அந்த ஸம்ருத்தியில் எட்டிலொன்றுகூட ஸேவிக்க ப்ராப்தமாகவில்லை. இந்த பரிதாபம் கிடக்கட்டும். அப்போது அடியேன் அநுபவித்த ஆனந்தம் வாசாமகோசரம். ஸன்னிதியினுள்ளே புகும்போது

அரையர்ஸேவை நடந்து கொண்டிருந்தது. நம்முடைய பாக்ய விசேஷத்தினால் இற்றைக்கும் பாங்காக எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ அரையர் வடபத்ரமையங்கார் ஸ்வாமி அப்போது யுவாவாய் அதிகம்பீரமான தோற்றத்துடனே ஆச்சரியமான திருமிடற்றோசையுடனே வியாக்கியானம் ஸேவித்துக் கொண்டிருந்தார். முதன் முதலாக அந்த மஹானுடைய கடாக்ஷவீக்ஷணத்திற்கும் நிரவக்ரஹமான அநுக்ரஹத்திற்கும் இலக்கானேன். அடியேனுக்கு அப்போதிருந்த "ஜீயர் பேரன்" என்கிற வ்யபதேசம் அடியேன் அங்கு விடை கொள்வதற்கு முன்னமே பரவியிருந்தது போலும். அதனால் அங்கு எழுந்தருளியிருந்த மஹான்கள் பலரும் மிகச் சிறியேனான வென்னை அதிமாத்ரம் ஆதரித்தார்கள். வாழைக்குளத் தெருவில் தமிழ் வித்வான் ஸ்ரீ உவே. அப்புவையங்கார் ஸ்வாமி, மஹாப்ராஜ்ஞரான திருவாழி ஸ்வாமி, மேலைவாத்யார் ஸ்வாமி.........முதலான பல மஹான்கள் இப்போது நமது தௌர்ப்பாக்யத்தினாலே வைகுண்டவாஸிகளாயிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட பல மஹான்கள் அடியேனை முன்னமறியாதவர்கள் சிரபரிசிதர்கள்போல அணுகி வந்து 'அடியேனுடைய க்ருஹத்திற்கு வர வேணும், அடியேனுடைய குடிசைக்கு எழுந்தருள வேணும்' என்று அஹமஹமிகயா அழைத்தருளின ஸம்ப்ரமங்கள் இன்றுபோல் நினைவுக்கு வரும்போது "நினைந்தென்னுள்ளே நின்று நெக்குக் கண்களசும் பொழுக" என்னும் நிலைமையே உண்டாகிறது.



ஸ்ரீ மதுபயவே வித்வான் அரையர் வடபத்ரமையங்கார் (ஸ்ரீ வில்லிபுத்தூர்)

வாழ்நாளெல்லாம் அவ்விடத்திலேயே இருந்து விடலாமென்றும் தோன்றிற்று. ஒரு வாரத்திற்குள் இந்த திவ்யதேச யாத்திரையை முடித்துக்கொண்டு ஊருக்குத் திரும்ப வேண்டிய ஆவச்யகதை யிருந்தது. அப்போது இரண்டொருநாள்தான் ஸ்ரீவில்லிபுத்தூரில் இருக்க நேர்ந்தது. அங்கு ஸ்ரீ உவே. விஞ்சிமூர் கிருஷ்ணமா

சாரியர் ஸ்வாமி யென்கிற மஹான் சிறந்த அத்யாபகராய் கோஷ்டியை நிர்வஹித்து வருகிறார். அவருடைய மூத்த திருக்குமாரர் விஞ்சிமூர் ஆழ்வார் ஸ்வாமி அப்போது வித்யார்த்திதசையிலிருக்கிறார். மஹாமேதாவி. ஸர்வர்க்கும் ஸ்ப்ருஹணீயர். அவருடைய நிரதிசய ப்ரீதிக்கும் பாத்ரமானேன். அந்த ஸ்வாமி இப்போது ஸ்ரீமத் பரமஹம்ஸ திருக்குறுங்குடி ஜீயர்ஸ்வாமி திருவடிவாரத்தில் ஆஸ்தான வித்வானாக எழுந்தருளியிருக்கிறார். நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் தற்போது அனேக வித்வான்கள் எழுந்தருளியிருந்தாலும் இந்த ஆழ்வார் ஸ்வாமியை விசிஷ்டாதிகாரியாக அடியேன் கொண்டிருக்கிறேன். உபய வேதாந்தத்திலும் தெளிந்த ஞானமுடையவர். ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளும் ஆசார்ய ஸ்ரீஸூக்திகளுமெல்லாம் கண்டஸ்தமாக இருக்கப் பெற்றவர். வித்வான்களுக்கு இந்த ஸம்பத்து வாய்ப்பது அரிதன்றோ. மூலோபஸ்திதியில்லாமல் காலக்ஷேபம் ஸாதிப்பவர்கள் பலருளர். அங்ஙனன்றிக்கே அருளிச்செயல்கள், ரஹஸ்யங்கள், ஸ்தவங்கள் என்னும் வாசியின்றிக்கே ஸகல திவ்ய ஸூக்திகளையும் அர்த்தஜ்ஞானத்தோடும் கண்ட பாடமாக வைத்துக் கொண்டிருப்பவர் இந்த ஸ்வாமி. அத்தோடு நல்ல விமர்ச கௌசலமுமுள்ளவர். ஆழ்வார் காலத்தில் *அரக்கரசுரர் போல் வாரைத் தடவிப் பிடிக்க வேண்டியிருந்ததாக ஆசார்யஹ்ருதயத்தில் ஸாதிக்கப்பட்டது. இக்காலத்தில் இந்த ஸ்வாமியைப்போன்ற விசிஷ்டாதிகாரிகளைத் தேடிப்பிடிக்க வேண்டியிருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக ஆத்மகுணஸம்பத்தியுமமைந்தவர். பல்லாண்டு பாடின மஹான் அவதரித்த தலத்திலே அவதரித்த இவர்க்கு நாம் பல்லாண்டு பாடுவது மிகை. ஆயினும் *ஸ மஹாத்மா ஸுதுர்லப:* என்னும் கோவையில் நினைவுக்கு வரக்கூடியவர்களில் அடியேனுடைய நினைவில் நித்யஸந்நிஹிதரான



ஸ்ரீமதுபயவே வித்வான் விஞ்சிமூர் ஆழ்வார் ஸ்வாமி (ஸ்ரீவில்லிபுத்தூர்)

இந்த ஸ்வாமிக்குப் பல்லாண்டு பாடுகிறேன். மிகமுக்கியமாக இங்கு ஒன்று விஜ்ஞாபிக்கிறேன். இப்படிப்பட்ட துர்லபாதிகாரிகளில் மற்றும் ஒருவராக ஆழ்வார் திருநகரியில் ஸ்ரீமதுபயவே இளையவில்லி சடகோபாசாரியர் ஸ்வாமி எழுந்தருளியிருக்கிறார். அந்த ஸ்வாமி இரண்டு வருஷ காலமாக அடியேனுக்கு ஸம்பந்தியாயிருக்கின்றார். அதற்காகக் கொண்டாடுகிறபடி போலுமென்று சிலர் நினைப்பர்களாயினும் அந்த ஸ்வாமியின் ஒப்புயர்வற்ற யோக்யதாதிசயங்களை உள்ளபடி யுணர்ந்தவர்கள் இக்கொண்டாட்டம் ஸ்தாநே ஸ்தாநேயென்று உள்குழைவர்கள். ஆழ்வாரருளிச் செயல்கள் அர்த்தஜ்ஞானமில்லாதவர்களுக்குக் கைவந்திருப்பதை நாம் பலவிடங்களிலும் காணலாம். அதில் என்ன வியப்பு. வேதத்தை மட்டும் உருப்போட்டுத் தலைகீழாகச் சொல்லவல்லவர்கள் பலருளரன்றோ. அவர்கள் பக்கலில் விஸ்மயநீயம் என்னவுளது? அப்படி திவ்யப்ரபந்த மூலத்தைக் கண்ட பாடம் செய்தவர்கள் பலருளரென்றாலும் வியப்பில்லை. ஜ்ஞானபூர்த்தியுடன் ப்ரவசநம் செய்யவல்ல அதிகாரிகளிடத்திலே ஆழ்வாராசார்ய ஸ்ரீஸூக்திகள் யாவும் கண்டஸ்தமாக இருக்கப்பெற்றால் அது ஸுவர்ணகமலத்திற்கு ஸௌரபோத்மேஷம் என்றுதான் சொல்லவடுக்கும். திருக்கண்ணபுரம் பட்டப்பா ஸ்வாமியிடத்திலே அடியேனுக்கு ஈடுபாடு உண்டானதற்குக் காரணம் இதுவே. சாஸ்த்ரஜ்ஞர்களில் தலைவராயிருந்து அருளிச்செயல்களையும் ரஹஸ்யக்ரந்தங்களையும் முகஸ்தமாகக் கொண்டிருந்த பெருமையை முதன்முதலாக அந்த ஸ்வாமியிடத்திலே அடியேன் கண்டு ஈடுபட்டவன். இத்தகைய உத்தமாதிகாரிகளிலே தற்காலம் அடியேனுடைய நித்யாநுஸந்தானத்தி லுள்ளவர்கள் மிகச்சிலரே. அவர்களுள் மேலேகுறித்த ஸ்வாமிகளிருவரும் முன்னணியில் நிற்பவர்கள். இவர்களுக்கு அடியேன் ஏதாவது குறைகூற நினைத்தால் 'வேதாத்யயநம் செய்திலர்' என்று ஒரு குறை கூறலாம். "ஏகோ ஹி தோஷோ குணஸந்நிபாதே நிமஜ்ஜதி இந்தோ: கிரணேஷ்விவாங்க:" என்றதை நினைத்துக் கொண்டு ஸமாஹிதனுவேன். வர்த்தமாந காலத்தில் வானமாமலை மடாதிபதியாக எழுந்தருளி ஸேவை ஸாதிக்கின்ற ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதிஜீயர்ஸ்வாமி பூர்வாச்ரமத்திலெழுந்தருளியிருந்தபோது அவரோடு நெருங்கிய பழக்கமுண்டு. (அடியேனுடைய) பதினாரும் வயதிலேயே ஸ்ரீ ஸ்வாமியின் க்ருபாதிசயம் அடியேன்பால் பெருகப்பெற்றது. அடியேனுடைய இளம்பிராயச் செய்திகளை விஜ்ஞாபித்திருக்கிற கீழ்ப்பிரகரணத்தில் விடுபட்டவை பலபலவுண்டு.



ஸ்ரீமதுபயவே இளையவில்லி சடகோபாசாரியர் ஸ்வாமி. ஆழ்வார் திருநகரி.

ஸ்ரீமத் பரம ஹம்ஸேத்யாதி சின்னகலியன் ஸ்வாமியின் ஒப்புயர்வற்ற திருவருளுக்கு அடியேன் இலக்காகப்பெற்ற விசேஷங்கள் இனிமேல்தான் ப்ராகரணிகமாக வெளிவரப்போகின்றன. அந்த ஸந்தர்ப்பத்தில் விளக்க வேண்டியவை வர்த்தமானவானமாமலை ஸ்வாமியின் பெருமைகள் என்று விட்டிருந்தேன். *ஸ்ம்ருதஸ்ய உபேக்ஷாநர்ஹத்வம் ஸங்கதி:* என்ற கணக்கிலே இங்குச் சிறிது விஜ்ஞாபிக்கிறேன்.



ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்ய வர்த்தமான வானமாமலை மடாதிபதி ஸ்வாமி சின்ன ராமாநுஜ ஜீயர்ஸ்வாமி

ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து அடியேன் வானமாமலைக்கு விடை கொண்டேன். அப்போது ஆஸ்தானமலங்கரித்தருளா நின்ற ஸ்ரீமத் சின்னகலியன் ஸ்வாமி யாத்திரையில் எழுந்தருளி யிருக்கிற காலம். வர்த்தமான ஸ்வாமி அப்போது வித்வான் வானமாமலை ஐயங்காரென்றே ப்ரஸித்தி பெற்றிருந்தவர். இன்னும் சில வித்வான்களும் அங்கு எழுந்தருளியிருந்தார்கள். இந்த ஸ்வாமியின் க்ருபா ப்ரவாஹமே அடியேன்பால் அப்போது ஒரு மடை செய்தது. அப்போது ஸ்வாமியினுடைய யோக்யதைகளில் மிகவும் ஈடுபட்டேன். ஸ்வாமி உயர்ந்த தர்க்கவித்வானென்பது ப்ரஸித்தம். சிலகாலம் காஞ்சீபுரத்திலுமெழுந்தருளி ஸ்ரீமத் குன்றபாக்கம் ஸ்வாமி ஸன்னிதியிலும் க்ரோடபத்ராதிகள் வாசித்தவர். அந்த காலத்தில் அடியேன் சைதந்யமில்லாதவனுதலால் ஸ்வாமியைப்பற்றி அப்போது தெரிந்து கொள்ள ப்ரஸக்தியில்லையாயிற்று. ப்ரஸ்தாவயாத்திரையில்

வானமாமலைக்கு விடை கொண்டபோது இந்த ஸ்வாமியோடு மிகவும் நெருங்கிப் பழக நேர்ந்தது. அடியேனுக்கு இளமை தொடங்கியே (நல்லதோ, தீயதோ) ஒரு வழக்கமுண்டு; (அதாவது) அக்ஷராஸ்யர்களோடு பேச நேர்ந்தால் அவர்களின் யோக்யதை எவ்வளவு என்று பராமர்சிக்கப் புகுந்து நிலைகண்டறிவது. அதிகமாகப் படித்தவர்கள்—பாடப்ரவசனங்களும் செய்கிறவர்கள் என்பதை மட்டுங் கொண்டு ப்ரமிக்கமாட்டேன்; படித்த புத்தகங்களில் இவர்களின் வ்யுத்பத்தி எப்படிப்பட்டது? விவேசநசக்தி எப்படிப்பட்டது? என்பதைக் கண்டறிய விரும்பி அதற்கு அநுகுணமாகவே வார்த்தையாடுவேன். வைத்யர்கள் நாடியைப் பிடித்துப் பார்த்து ஒரே நிமிஷத்தில் உடல்நிலையை யுணருவர்கள். அடியேன் பத்தெட்டு நிமிஷம் வார்த்தையாடி வ்யுத்பத்தி ப்ரகாரங்களை நிலைகாண்பேன். இந்த அப்யாஸம் திருத்தகப்பனரிடமிருந்து அடியேனுக்கு ஸங்க்ரமித்ததொன்று. இடையில் ப்ராஸங்கிகமாக வொன்று விஜ்ஞாபிக்கிறேன். ஸ்ரீமான் உவே. அ. வீ. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியைப் பலர் அறிவர். இந்த ஸ்வாமி ஸமீபகாலத்தில்தான் திருநாட்டுக்கெழுந்தருளினர். ஏறக்குறைய 35 வருஷ காலமாகத் திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருந்தவர். கீர்த்திமூர்த்தியான அத்தங்கி கவிபூஷண ஸ்வாமிக்கு வலக்கை போன்றிருந்தவர். இவர் ஸாஹித்யமும் சாஸ்த்ரமும் வாசித்ததெல்லாம் ஸ்ரீபெரும்பூதூர்வித்யாலயத்தில். வியாகரணசாஸ்த்ரம் பூர்த்தியாக வாசித்தவர். ஸ்ரீபெரும்பூதூரில் வாசித்துக் கொண்டிருந்த காலத்தில் ஒரு ஸமயம் திருத்தகப்பனரை ஸேவிக்கக் காஞ்சிக்கு வந்திருந்தார். [இவர் திருப்பதி ப்ரதிவாதிபயங்கர ஸ்வாமிகளின் திருவடியாகையால் திருத்தகப்பனரிடத்தில் விசேஷித்து ப்ராவண்யமுடையவர்.] இவர் காஞ்சிக்கு வந்த ஸமயம் வித்யாப்யாஸம் அனேகமாய் முடிவு பெற்றிருந்ததாக ஞாபகம். திருத்தகப்பனர் மிகவும் அசக்தியோடு சயனித்துக் கொண்டிருக்கிற காலம் அது. வந்தவிவர் தம்முடைய கல்விகளை உள்ளபடி தெரிவித்துக் கொண்டார். ஆசுகவித்வமும் சித்ரகவித்வமும் தமக்கு உண்டு என்றும் சொல்லிக் கொண்டார். ஏதோவொரு ப்ரயோக விஷயத்தில் ஐந்தாறு நிமிஷமே



ஸ்ரீமதுபயவே வித்வான் அகரம் வீரவல்லீ நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி (வைகுண்டவாஸி)

சர்ச்சை செய்து வார்த்தையாடின திருத்தகப்பனுர் உடனே "இவரைப் போன்ற வ்யுத்பந்நர் இல்லை; *ஸாரம் து ஸாரஸ்வதம் ஜாநீதே நிதராம் அஸௌ குருகுலக் விஷ்டோ ந்ருஸிம்ஹ: கவி:*" என்று மிகவும் கொண்டாடினர். அந்த க்ஷணம் முதலாகவே அடியேனுக்கு அந்த நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியிடத்தில் மிகுந்த ப்ராவண்யமுண்டாயிற்று. அவர் திருவல்லிக்கேணியிலேயே யெழுந்தருளி யிருந்த படியால் அடிக்கடி சந்திக்க நேரும். விஷய சர்ச்சைகள் செய்தால் த்ருப்திகரமான ஸமாதானம் கிடைப்பது சில வ்யக்திகளிடத்தில்தானே. அப்படிப்பட்ட வ்யக்தி விசேஷங்களில் இந்த ஸ்வாமி முன்னணியில் நின்றிருந்தார். ப்ராஸங்கிகமான விது நிற்க. வர்த்தமான வானமாமலை மடாதிபதி ஸ்வாமியைப் பூர்வாச்ரமத்தில் அடியேன் வானமாமலையில் ஸந்தித்தபோது ஸ்வல்ப ஸம்பாஷணத்திலேயே ஸ்வாமியின் யோக்யதாதிசயத்தைக் கண்டு மிக வியந்தேன். ஸாமாந்ய சாஸ்த்ரங்களிற்போலவே ஸம்ப்ரதாய சாஸ்த்ரங்களிலும் மிகவுழைத்தவர் என்றும், அத்யாவச்யக ஸம்ப்ரதாய க்ரந்தங்களின் உபஸ்திதியை நன்ருகவுடையவரென்றும் க்ரஹித்து அப்போதே யீடுபட்டேன்.

வாசகர்களே! அத்யந்தம் ப்ரதிஷ்டிதர்களான மஹான்களைப்பற்றி நீசனேன் நிறையொன்றுமிலேன் அபிநந்தனம் செய்வது அநுசிதமும் அபஹாஸ்யமுமாகும். ஸுப்ரஸித்தர்களான மஹான்களுக்கு அடியேனுடைய புல்லுரையினல் புதியதோர் பெருமை விளையப் போகிறதில்லை. இப்படிப்பட்டவொரு ப்ரஸக்தியையிட்டு மஹான்களின் குணநுபவத்தைப்பண்ணி அடியேன் களிக்கிறேன். க்ருதக்ருத்யனுகிறேனென்று கொள்க. வானமாமலையிலிருந்து திருக்குறுங்குடி அனந்தசயனம் விடைகொள்ள அபிநிவேசமிருந்தும் திருவத்யயநோத்ஸவ சாத்துமுறை அணித்தானபடியாலே ஆழ்வார் திருநகரிக்கு விடை கொண்டேன். அப்போது அவ்விடத்தில் உத்தமாச்ரமிகள் நிறைந்து ஸேவை ஸாதித்தார்கள். அப்படி ஸேவிக்கும் பாக்கியம் அந்தவொரு ஸமயத்தில்தான் அங்கே கிடைத்தது. அந்த ஜீயர்ஸ்வாமிகளுள் ஸ்ரீமத் பரமஹம்ஸ அப்பன் ஜீயர்ஸ்வாமியென்று ப்ரஸித்தராயிருந்தவர் சிலர்க்குத் திருப்பாவையாறுயிரப்படி காலக்ஷேபம் ஸாதித்துக் கொண்டிருந்தார். ஆழ்வாரை ஸேவிப்பதற்கு முன்னே அந்த காலக்ஷேப கோஷ்டியின் ஸேவை அடியேனுக்கு ப்ராப்தமாயிற்று. அந்த ஸ்வாமியின் ப்ரவசந பக்கி வெகு ரமணீயமாயிருந்தது. பூர்வாசார்ய பங்க்திகளின்மேல் பொருளுரைத்து நிர்வஹிக்கிற பத்ததி மிகவும் ஸ்ப்ருஹணீயமாயிருந்தது. அந்த ஸ்வாமியை மறுபடியும் ஸேவிக்கப் பாவியேன் கொடுத்து வைக்கவில்லை. அப்போது அவ்விடத்தில் பல மஹான்களுடைய க்ருபையைப் பெற்றேனுயினும் அன்னவர்களில் ஒருவர் கூட இப்போது எழுந்தருளியிருக்கவில்லை. அங்கிருந்து திருக்குறுங்குடிக்கு விடை கொண்டேன். அப்போது ஆஸ்தானமலங்கரித்தருளியிருந்த பெரிய ஸ்வாமி திருமேனி பாங்கில்லாமலெழுந்தருளியிருந்தபடியால் அவருடைய திருவருளை அதிகமாகப்பெற ப்ராப்தமாகவில்லை. அந்த ஸ்வாமிக்கு ப்ரதிநிதியாக வர்த்தமான ஸ்வாமி ஸ்ரீகார்யதுரந்தரராக எழுந்தருளியிருந்தார். இந்த ஸ்வாமியினுடைய விசேஷகடாக்ஷத்திற்கு அடியேன் இப்போது பாத்ரபூதனுயிருப்பது வியப்பன்று; அப்போதே இலக்கானேன். ஸந்நிதி கைங்கரியங்களையும் திருப்பணிகளையும் அபிவிருத்தி செய்வதில் ஸ்ரீஸ்வாமிக்கு அப்போதே தொடங்கி மஹத்தான ச்ரத்தை. வித்யாபக்ஷபாதமும் வித்வான்களிடத்தில் ஆதராதிசயமும் இந்த மடத்திற்கு இயற்கையானது. வர்த்தமான ஸ்வாமியின் ஜ்ஞாநாநுஷ்டானங்களை வருணிப்பதற்கு அடியேனு அதிகாரி? எண்பத்தேழு திருநக்ஷத்திரங்களுக்கு மேற்பட்ட வயோதிகராயிருக்கச் செய்தேயும் அனுஷ்டானங்களிலும் பெருமாளுடைய நித்யமங்களாசாஸனத்திலும் ஈஷத்தும் ச்ரத்தைகுன்ருமல் ஸௌலப்யமே வடிவெடுத்தவராய்* ஸ்மிதபூர்வாபிபாஷியாய் ஸேவை ஸாதிக்கின்ற



ஸ்ரீமத் பரமஹம்ஸ திருக்குறுங்குடி பேரருளாள ராமாநுஜ ஜீயர்ஸ்வாமி
(வர்த்தமான பீடாதிபதி)

இந்த ஸ்வாமிக்குப் பல்லாண்டு பாட ஸ்ரீவைஷ்ணவ வுலகமெல்லாம் கடமைப்பட்டிருக்கிறது. முதன்முதலாக க்ருஹஸ்தாச்ரமத்திலே அடியேன்பால் அன்று விசேஷகடாக்ஷம் செய்தருளின இந்த மஹாஸ்வாமி இன்றளவும் அந்த கடாக்ஷ விஷயத்தில் சுக்லபக்ஷ சந்திரனையே யொத்திருப்பது அடியேனை யுருக்குகின்றது.

திருக்குறுங்குடியிலிருந்து நேராக நம்பெருமாள் ஸன்னிதிக்கு வந்து சேர்ந்து, அடியேனுக்கு நேர்ந்த இவ்வளவு பாக்யவிசேஷங்களுக்கும் காரணபூதரான ஸ்ரீமத் சிங்கமையங்கார் ஸ்வாமி திருவடிகளிலே யாத்ரா விசேஷங்களையெல்லாம் விஜ்ஞாபனஞ் செய்தேன். ஏற்கெனவே அந்த ஸ்வாமியிடத்தில் ஸ்ரீகோசாபேக்ஷையையும் தெரிவித்திருந்தேனுகையால் அடியேன் வருவதற்குள் அனேக ஸ்ரீகோசங்களை எப்படியோ ஸித்தப்படுத்தி வைத்திருந்தார். பெரிய பகவத்விஷய ஸ்ரீகோசமுட்பட நாலாயிர வியாக்கியானங்களும் மற்றும் பலபல க்ரந்தங்களும் அங்கே பலரிடத்தில் விலை கொடுத்து வாங்கி சேகரித்து வைத்திருந்து "இவையெல்லாம் உமக்காக வைத்திருக்கிறேன், எடுத்துக் கொண்டு போகலாம்" என்று ஸாதித்து, உடனே 'இவை உம்மால் கொண்டு போக முடியாது; பார்ஸல் செய்வித்தனுப்புகிறேன்; இனி என்ன உத்தேசம்?' என்று வினவினர். 'நேராக ஊர் போய்ச்சேர வேண்டியிருக்கிறது, நியமித்தருள வேணும்' என்று விஜ்ஞாபித்து விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டேன். அப்போது விருத்தாசலம் வழி கிடையாது, தஞ்சாவூர் – கும்பகோணம் வழியேயுள்ளது. திருக்குடந்தையில் மட்டுமிறங்கி ஆராவமுதனை ஸேவித்துப்போக வெண்ணி அங்கே யிறங்கினேன். *ஏரார்கோலந் திகழக்கிடந்த ஆராவமுதனை ஆராத காதலுடன் ஸேவித்தேன். அப்போது அவ்விடத்தில் விலக்ஷணர்களான பல வித்வான்கள் எழுந்தருளியிருந்தார்கள். அவர்களுள் வயோதிகரான ஸ்ரீமது பயவே சின்னமு ரங்கநாதபாட்டராசாரியர் ஸ்வாமி யென்பவர் சிறந்த ஜ்ஞாதா; பகவத் விஷயாதிகாரியாகவும் காணப்பட்டார். அவ்விடத்தில் இப்போது எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ உவே. சின்னமு ஸ்ரீநிவாஸபாட்டராசாரியரின் திருத்தகப்பனர் அவர் என்று ஞாபகம். அந்த ஸ்வாமி நிர்ஹேதுகமாக அடியேனிடத்தில் அப்போது காட்டியருளின ப்ரீதி வாசாமகோசரமாயிருந்தது. மஹான்களினுடைய விசாரணைக்கு இலக்காகக்கூடிய வயதில் அப்போது அடியேன் இருந்திலேன்.


முன்னம் ப்ரஸ்தாவித்த 'ஜீயர்பேரன்' என்கிற வ்யபதேசம் அடியேனை அறியாக் காலத்திலேயே அனேக மஹான்களின் ஆச்சரியமான கடாக்ஷத்திற்கு இலக்காகப் பண்ணிற்று. ஸ்ரீவில்லிபுத்தூரிலும் வானமாமலையிலும் ஆழ்வார் திருநகரியிலுமிருந்த ஸ்வாமிகளின் ஆதராதிசயங்களைப் பெற்றது அடியேனுக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லை; திருக்குடந்தையில் அப்போது எழுந்தருளியிருந்த மஹான்கள் மிகவும் பரத்வம் பாராட்டக் கூடியவர்கள்; அடியேனை அப்போது ஒரு பொருளாகவும் மதிக்கக்கூடியவர்களல்லர். அப்படியிருந்தும் நெடுநாள் பழகினவர்களையும் பெரியார்களையும் விசாரிக்குமாபோலே ஒவ்வொருவரும் தாமாக வந்து விசாரிப்பதும், பெருமாள் ஸேவையைச் சிறப்பாகச் செய்விப்பதும், அவ்விடத்து விசேஷங்களை யெடுத்துரைப்பதும் என்னுள்ளத்துள்ளே வியக்கத்தக்கதாயிருந்தது. பாட்டராசார் தெருவிலே தாதாசாரியர் ஸ்வாமி யென்று ஒரு பெரியவர் எழுந்தருளியிருந்தார். (ஸ்ரீ. தி. ச. ச. நா.) என்னு மெழுத்துக்கள் அந்த ஸ்வாமிக்கு இன்ஷலாக அமைந்தவை. (வ்யக்திஸ்மாரணார்த்தமாக இது தெரிவித்தபடி.) அந்த ஸ்வாமியின் ஞானம் ஒருபுறமிருக்க சமதமாதி குண ஸம்பத்து வெகு அற்புதமாக இருந்தது. அப்போது அந்த ஸ்வாமி ஐந்தாறு பண்டிதர்களை உடன் வைத்துக்கொண்டு ஸ்ரீ தேசிகனுடைய ஸ்தோத்ரங்களுக்கு வியாக்கியானங்களை யெழுதுவித்து அச்சிட்டு மாதாந்த ஸஞ்சிகையாக வெளியிட்டுக்கொண்டிருந்தார். அது

ஸம்பந்தமான கார்ய நிர்வாஹ க்ரமங்களை யெல்லாம் பரமப்ரீதியோடு காண்பித்தார். கீழே ப்ரஸ்தாவித்த ஸ்ரீமத். சின்னமு ரங்கநாதபாட்டராசார்ய ஸ்வாமியும் அவ்விடத்தே வந்து சேர்ந்து, தாமும் தேசிக ஸ்தோத்ரங்களில் சிலவற்றுக்கு மணிப்ரவாள வியாக்கியான மிட்டருளியிருப்பதாக ஸாதித்துச் சில விடங்களை வாசித்துக்காட்டினர், முகுந்தமாலைக்கு விரிவான மணிப்ரவாள வியாக்கியான மொன்று எழுதியிருப்பதாகவும் காட்டினர். [இது பிறகு அச்சாகி வெளிவந்திருப்பதாக ஞாபகம்.] அப்போது இந்த ஸ்வாமி அடியேனை விட நாற்பது திருநக்ஷத்ரங்களுக்கு மேற்பட்டு வயோவ்ருத்தராயிருந்தவர். அப்படி யிருந்தும் மிகச் சிறியேனை அடியேனோடு புரையறக் கலந்திருந்த சீலம் நிகரற்றிருந்தது. இந்த ஸ்வாமி பகவத் விஷயத்தில் நல்ல விரகர். ஈட்டுப் பங்க்திகள் பலவற்றை எடுத்து ஸாதிக்கக் கேட்டேன். அவரது திருக்குமாரருடைய நட்பும் நெடுநாள் தொடர்ந்துவந்தது.

தமிழ் வித்வான் மஹாமஹோபாத்யாய ம. வீ. ராமாநுஜாசார்ய ஸ்வாமியும் அப்போது அங்குச் சில ஸம்ஸ்க்ருத வித்வான்களைக் கொண்டு மஹாபாரதத்தை மொழிபெயர்ப்பிக்கும் பணியிலே ஊன்றியிருக்கிறார். அவருடைய நட்பும் மிகமிகக் கிடைத்ததப்போது. மாத்வர்களான ஸ்ரீமத். க்ருஷ்ணாசார் வ்யாஸாசார் என்னுமிருவர் [இவர்கள் ஸஹோதரர்களென்று நினைவு.] பாம்பே நகரத்தில் மஹாபாரதத்தை அச்சிடக்கொடுத்து இங்கே இருபது வித்வான்களைத் திரட்டி சோதனங்கள் செய்வித்துக்கொண்டிருந்தது மப்போது. அந்த ஸமிதியையும் கண்ணாரக்கண்டு களித்தேன். ஸ்வகீய துர்க்குணமொன்றை மறைத்திடாமல் விஜ்ஞாபிக்கிறேனிங்கு. அடியேனுக்கு இளமை தொடங்கியே புரோபாகித்வம் அதிகம்; ஜன்மஸித்தமென்றும் சொல்லலாம். மஹா வ்யாபகர்கள் எழுதினதாயிருந்தாலும் அதில் குற்றங்குறை கண்டு கூறிக்கொண்டிருப்பேன். அவ்வியல்பை அங்கிருந்த வித்வான்களிடத்திலும் சிறிது சிறிது காட்ட அவகாசம் கிடைத்தது. அதனால் அவர்களுக்குத் திருவுள்ளக் கலக்க முண்டாகாமல் ப்ரீதி ப்ரகர்ஷமே விளைந்தது. அங்குப் பெருமாளை ஸேவித்துவிட்டு அடுத்த வேளையிலேயே திரும்ப வேணுமென்றிருந்த வடியேனை அந்த மஹா ஸ்வாமிகள் அப்போது மூன்று நான்கு நாள் அங்கே ஆனந்தமாக இருக்கச் செய்தருளினர்கள். திருவாய்மொழியில்*சூழ்விசும்பணி முகிலிலே "குடந்தை யெங்கோவலன் குடியடியார்க்கே" என்கிற பாசுரப்படி திருநாட்டிலும் பேச நின்ற திருக்குடந்தை ஸ்வாமிகளின் பெருமை அப்போதடியேனுக்கு அநுபவ விஷயமாயிற்று. ஸ்ரீமத். சதுச் சாஸ்த்ர கல்பதரு. அம்மாஸத்ரம் சேஷாசாரியர் ஸ்வாமி யென்கிற மஹான் மஹா தேஜஸ்வியாய் அப்போது அங்கே ஹயக்ரீவமந்திரமென்று ஒரு ஸ்தான விசேஷ மேற்படுத்தி அதில் ஸாமான்ய சாஸ்த்ரங்களையும் அத்யாத்ம சாஸ்த்ரங்களையும் பலர்க்கு ப்ரவசனம் செய்து கொண்டிருந்தார்; அவரிடத்தில் வானமாமலை வித்வான்ஸ்வாமி யொருவரும் சாஸ்த்ரம் வாசித்துக்கொண்டிருந்தார். அவர் அடியேனை அந்த அம்மாஸத்ரம் ஸ்வாமி ஸன்னிதியில் கொண்டுவிட்டு அவருடைய பரம க்ருபைக்கும் பாத்ரமாக்கி வைத்தார். கீழே (27-ஆம் பக்கத்தில்) திருவுருவப்படமாக ஸேவை ஸாதிக்கின்ற ஸ்ரீ ராயம்பேட்டை க்ருஷ்ணமாசாரியர் ஸ்வாமி, கொட்டையூர் சேஷசாயி ஸ்வாமி முதலானவர்கள் அங்கு அப்போது சிறந்த வித்வான்களாக எழுந்தருளியிருக்கிறார்கள். இவர்கள் வெறுமனேயிராமல் லோகோபகார தீக்ஷிதர்களாய் நாநாக்ரந்தமுத்ரண ப்ரகாசந ப்ரவசநாதிகளிலே நிஷ்ணாதர்களாயிருந்தபடியால் அவர்களுடைய க்ருபைக்கும் ப்ரீதிக்கும் அடியேன் அநாயாஸமாகவே இலக்காகப் பெற்றேன். அந்த ஸமய விசேஷத்தை நினைக்கும்போது அடியேனுடைய அங்கமெல்லாம் ஆராவமுதமாகி விடுகிறது.

ராயம்பேட்டை க்ருஷ்ணமாசார்ய ரென்பவர் R. V. க்ருஷ்ணமாசார்ய ரென்று ப்ரஸித்தர். அபிநவபட்டபாணேத்யாதி பிருதாவளிகள் பெற்றவர். அந்த ஸ்வாமி அப்போது வைத்த ப்ரீதிப்ரகர்ஷத்திற்குச் சில உபாதிகளாலே

இடையில் ஸ்வல்பகாலம் சிறிது பங்கமேற்பட்டிருந்த போதிலும் பிறகு அவர்தாமே மிகவும் அநுதபித்துப் பழைய ப்ரீதியைப் புநராவாஹநம் செய்துகொண்டு அதை நாடு நகரமும் நன்கறியக் காட்டிக்கொண்டு வாழ்ந்தார். [இதைப்பற்றி மேலே விவரிக்க நேரும்.] நம்மாழ்வார் திருவிருத்தத்தில் ஒரு பாசுரம் ஸாதிக்கிறார். "சேமம் செங்கோனருளே, செறுவாரும் நட்பாகுவரென்று ஏமம்பெற வையஞ் சொல்லும் மெய்யே" என்று. ஸ்நேஹிகள் த்வேஷிகளாவதும், த்வேஷிகள் ஸ்நேஹிகளாவதும் இவ்வுலகின் இயல்வன்றோ; இவ்வியல்வை அடியேனுடைய வாழ்நாளில் சில ஸ்வாமிகள் பக்கலிலே அநுபவிக்க ப்ராப்தமாயிற்று. இதற்குத் திருக்குடந்தை ப்ரதாந லக்ஷ்யமாகும். எக்காரணம் பற்றியும் எந்த நாளிலும் நிலைமாறாமல் ப்ரேமமேவடிவாக இருப்பவர்கள் (திருக்குடந்தையில்) சில ஸ்வாமிகள் இற்றைக்குமுளர். ஆங்குக் கரணைக்கொல்லையக்ரஹாரத்தில் ஸேவை ஸாதித்து



ஸ்ரீமதுபயவே. திருக்குடந்தை. இளையவில்லி ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் பகவத்விஷய ப்ரவசநகோஷ்டி.

வரும் ஸ்ரீமதுபயவே. இளையவில்லி ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி அடியேனுக்கு முதல் தடவையான திருக்குடந்தை யாத்திரையிலே பரிசிதரன்றிக்கே பிறகு இரண்டு மூன்றாண்டுகள் கழித்துப் பரிசிதரானாலும் அவருடைய க்ருபையும் ப்ரேமமும் விச்வாஸமும் திநேதிநேக்ஷணேக்ஷணே வளர்ந்து வருவததனை யொழிய க்ஷுத்ரங்களான உபாதிகளாலே சலிக்குமதன்று. "திருக்குடந்தை கண்ணன்ஸ்வாமி" யென்று ப்ரஸித்தரா யிருக்கின்ற ஸ்ரீநிவாஸராகவாசார்யரும் இந்த ச்ரேணியிலே பரிகணிதராயிருக்கச் செய்தேயும் அவர் சென்னை நகரவாஸியாக அமைந்ததனாலே தம்முடைய ப்ரீதி விச்வாஸங்களை 'இலை மறைவு, காய் மறைவு' என்னுங் கணக்

கிலேவைத்துக் கொள்பவரா யிருக்கின்றார். இருந்தாலும் ப்ரேமவான்களிலே அவரே ப்ரதமபரிகணிதராய் நிற்பர்.

இங்குத் திருக்குடந்தை ப்ரஸ்தாவம் வலிதாக வந்துவிட்டபடியாலே மிகுந்த ஆனந்தத்துடன் ஒரு விஷயம் விஜ்ஞாபிக்கிறேன். இருபத்தைந்து வருஷங்களுக்கு மேலாக அடியேன்பால் சிறந்த க்ருபையும் நிறைந்த ப்ரீதியும் கொண்டிருக்கின்ற ஸ்ரீ மதுபயவே. S. ரங்கஸ்வாமி ஐயங்கார் டெங்கணிகோட்டை, நெல்லூர் முதலான விடங்களிலே லௌகிக உத்யோகபதவிகளில் அமர்ந்திருந்தாலும் வைதிகாக்ரேஸரராய் ஸதாசார சீலராய் ஸம்பிரதாய நூற்கடலிலே ஆழ அவகாஹித்தவராய் உத்தம ஸ்ரீவைஷ்ணவராய் விளங்குபவர். இவர் உத்யோகத்திலிருந்து விச்ராந்தரானது முதல் திருக்குடந்தையையே நித்ய வாஸஸ்தலமாகக் கொண்டிருக்கிறார். [இந்த ஸ்வாமியின் நெடுநாளைய அபேக்ஷையைப் பூர்த்தி செய்வதற்காகவே இந்த ஸ்வகீயசரித்திரநூல் எழுதப்பட்டு வருகிறதென்பதும் அன்பர்கள் அறியத்தக்கது.] இதுநிற்க.



(ராவ்ஸாஹிப்) ஸ்ரீமதுபயவே. S. ரங்கஸ்வாமி ஐயங்கார்
(திருக்குடந்தை)

அப்போதைய திருக்குடந்தை விசேஷங்களை மட்டும் எழுதுவதென்றால் உண்மையில் அதுவே ஒரு பெரிய புராணமாகும். வெகு ஆனந்தமாகத் தெரிவித்துக்கொண்ட இத்தனை விசேஷங்களுக்கு

மேல் ஸஹ்ருதய ஹ்ருதயோத்வேக ஜநகமானதொரு அற்பவிஷயத்தையும் இங்குத் தெரிவிக்க வேண்டியவனாகிறேன். இதை அடியேன் ப்ரஸ்தாவியாமல் விட்டும் விடலாம். தெரிவித்து வைப்பது நலமென்று தோன்றியே சிறிது தெரிவிக்கிறேன். அப்போது அவ்விடத்தில் குரிச்சி கோபாலாசார்யர் என்றொரு வயோதிகர் இருந்தார். இப்பெரியவர் அடியேனைப்பற்றிக் கேள்விப்பட்டு, தம்முடைய க்ருஹத்திற்கு என்னையழைத்து வரும்படி ஒருவரை என்னிடத்திற்கு அனுப்பினர். இதை யறிந்த சில ஆப்தர்கள் அவரிடம் போகவேண்டாமென்றும் சொன்னார்கள். ஏனென்று கேட்டதற்கு "அவர் தென்கலை ஸம்பிரதாயஸ்தர்களிடத்திலே மிகுந்த மாச்சரிய முடையவர், எதையாவது குறும்பாகப் பேசுவர்; வீணான மனஸ்தாபந்தான் விளையும்; போகாமலே யிருப்பது நலம்" என்றார்கள். "ப்ரஹரிப்பரோ?" என்று கேட்டேன்; "சே, சே, அவ்வளவு அதிசங்கை வேண்டாம்; அவர் கிழவர்" என்றார்கள். பெரியவர் சொல்லியனுப்பியிருக்கும்போது போய்வருவதே நலமென்று தோன்றிப் புறப்பட்டுப் போனேன்; ப்ரணமம் செய்து நின்றேன். உடனே 'நீர் எவ்வூர்? எங்கு வந்தீர்? என்று கூட வினவாமல் "உமக்குத் திருப்பாவை தனியன் தெரியுமன்றோ?* கோதா தஸ்யை நம இதமிதம் பூய ஏவாஸ்து பூய:* என்று சொல்லிக்கொண்டு ஒரு தடவை ஸேவிக்கிறீரே, நியாயமா?" என்றார். அதற்கு அடியேன் "வைஷ்ணவோ வைஷ்ணவம் த்ருஷ்ட்வா தண்டவத் ப்ரணமேத்புவி" என்கிற சாஸ்த்ரம் தேவரீருக்குத் தெரிந்திருந்தும் நாற்காலியை விட்டுப் பெயராமல் இடித்தபுளிபோலிருப்பது நியாயமா?" என்றேன்.........இவ்வாறு ஆரம்பம் முதலாகவே வாதப்ரதிவாதங்களே நடந்து சென்றன. அப்போது அவர் சதஸம்வாதமென்றொரு புத்தகம் அச்சிட்டு அதே ஸமயத்தில்தான் அச்சுக்கூடத்திலிருந்து கட்டுக்கட்டாக கூடத்திலும் முற்றத்திலும் கொண்டு வைக்கப்பட்டிருந்தது. மொத்தம் ஆயிரம் புத்தகமிருக்கும். ஒரு புத்தகத்தை யெடுத்து என்கையில் கொடுத்து 'என்னெதிரேயே இதை நீர் வாசித்துப் பார்க்க வேணும்' என்று கட்டளையிட்டார். அது நூறுபக்கங்களுக்கு மேலிருக்கும். இவ்வளவையும் இப்போதே வாசிக்க முடியுமா? என்றேன். நடுவில் ஒரு பாகத்தை யெடுத்துக் கொடுத்து இந்த கெட்டத்தையாவது வாசித்துப்பாரும் என்றார். தேவரீரே வாசித்துக்காட்டலாமே யென்றேன். அவரே சிறிதுபாகம் வாசித்துக் காட்டினர். அந்த புஸ்தகத்திற்கு சதஸம்வாதமென்றல்லவா பெயரிட்டிருக்கிறார். அதற்குத் தக்கபடி தென்கலையாருக்கும் வடகலையாருக்கும் நூறு பேதங்களிருப்பதாக அதில் நிரூபிக்கிறார். இந்த பேதங்கள் அர்த்தங்களைப் பற்றி யிருக்குமோ வென்னில்; அத்தனையும் வம்பு விஷயம்; சிலவற்றைமட்டும் இங்கு உதாஹரிக்கிறேன். (1) பூணூல் முறுக்கும்போது வேதமந்த்ரங்களைச் சொல்லிக்கொண்டே முறுக்கவேணுமென்பது வடகலையார்மதம்; ஊர்வம்புதும்புகளையெல்லாம் பேசிக்கொண்டே முறுக்க வேணுமென்று தென்கலையார் மதம். (2) இறந்துபோன மாதாபிதாக்களுக்குப் பார்வணச்ராத்தம் செய்ய வேணுமென்று வடகலையார் மதம்; அது கூடாது, ஸ்ரீவைஷ்ணவ ததீயாராதனந்தான் செய்யவேணுமென்று தென்கலையார் மதம். (3) பார்யை ரஜஸ்வலையாயிருக்கும்போது பர்த்தா நிமந்த்ரணம் புஜிக்கக் கூடாதென்று வடகலையார் மதம். அப்படிப்பட்ட காலத்தில் புஜிப்பதே உத்தமமென்று தென்கலையார் மதம். (4) ஜலமல விஸர்ஜந காலங்களில் பூணூலைக் காதில் சுற்ற வேணுமென்று வடகலையார் மதம். உபவீதியாகவே யிருக்க வேணுமென்று தென்கலையார் மதம். (5) ஏகாதசியன்று சுத்தோபவாஸமிருக்க வேணுமென்று வடகலையார் மதம். அன்று மூன்று தடவை புஜிக்க வேணுமென்று தென்கலையார் மதம்.........என்றிப்படி தாம் எழுதியிருப்பதாக வாசித்துக் காட்டிக் கொண்டு போகிறார்.

இவ்விதமாக வம்புதூஷணைகளை யெழுதி நிந்திப்பவர்களுக்குத் தகுந்த பதிலுரைகளை வெளியிட்டு வாய்மூடிபோடவேணுமென்று அன்றுதான் முதன்

முதலாக அடியேனுடைய உள்ளத்தில் தோன்றிற்று. அப்போதே அவ்விடத்திலேயே உட்கார்ந்து பதிலெழுதி அச்சிட்டு வெளியிட்டுவிட்டே இவ்வூரைவிட்டுக் கிளம்ப வேணுமென்று அவ்வளவு உத்வேகமுண்டாயிற்று. ஆனாலும் அப்போது அது செய்து தலைக்கட்ட ஸௌகரிய மேற்படவில்லை. அப்போது எட்டு பக்கங் கொண்ட ஒரு பாரமச்சிடுவதற்கு மூன்று ரூபாய்தான் அச்சுக்கூலி. காகிதத்தின் விலையும்மிகக்குறைவே. அவ்வூரிலேயேகண்டனமொன்றுவெளியிடவேணுமென்று ஆக்ரஹமுண்டாயிற்று. "விரைவில் இதற்குச் சரியான கண்டனம் வெளிவரக் காண்பீர்" என்று சொல்லிவிட்டு ஒரு புத்தகமெடுத்துக்கொண்டு வந்துவிட்டேன். அச்சுக்கூடம் தேடவேண்டிய அவசிய மேற்பட்டுவிட்டது. அங்கே திருமழிசையாழ்வார் ஸன்னிதி ஒன்றுமட்டும் தென்கலை. அவ்விடத்தில் பிரதிவாதி பயங்கர ஸ்வாமி யொருவர் வாழ்கிறார். ஏதாவதொரு அச்சுக்கூடத்தில் ஸௌகரியம் பண்ணித் தரவேணுமென்று அவரிடம் சென்று மன்றாடினேன். இது விஷயத்தில் எனக்குத் தெரிந்தவர்கள் யாருமில்லையே யென்று அவர் சொல்லிவிட்டார். (கீழே ப்ரஸ்தாவித்த) மஹாபாரத மொழிபெயப்புப் பதிப்பாசிரியரான மஹாமஹோபாத்யாய ராமாநுஜாசாரியர் தென்கலையாகையாலே அவரை யடுத்துப் பார்த்தேன். அவர் "இவ்விடத்துள்ள வடகலை வித்வான்களெல்லாரும் உம்மிடத்தில் பரம ப்ரீதர்களாயிருக்க, அவர்களின் மனம் கன்றும்படியாக இவ்விடத்திலேயே அச்சிடவேணுமோ?" என்றார். "அவர்களைப்பற்றியாவது அவர்களின் ஸம்பிரதாயத்தைப்பற்றியாவது அடியேன் குறை கூறப்போகிறதில்லை; சதஸம்வாதகாருடைய அஸம்பத்த ப்ரலாபங்களுக்கு மட்டும் கண்டன மெழுதப்போகிறேன்; இதனால் மற்ற ஸ்வாமிகளுக்கு மனக்கலக்கம் ஏற்படஹேதுவில்லையே" என்றேன். "நீர் அப்படி நினைக்கிறீர்; ஸமயத்தில் எல்லாரும் ஒன்று சேர்ந்து கொள்வர்கள்; குரிச்சி கோபாலாசாரியொருவரே அப்புத்தகத்தை யெழுதியச்சிட்டு விட்டதாக நினைக்கிறீர் போலும்; இவ்விடத்தில் பலரும் அதில் ஸஹயோகமுள்ளவர்களென்றே எனக்குக் கேள்வி" என்றார். ஸரிதானென்று சொல்லி உடனே ஊருக்குப் புறப்பட்டுவிட்டேன். வழியிலேயே அப்புத்தகத்தை வாசித்து முடித்தேன். காலே பிடித்துத் தலைவரையில் அபத்தமயமாயிருக்கிறவதற்குக் கண்டனமொன்று எழுதவேணுமோ! என்கிற வெறுப்பும் தோன்றிற்று. அப்புத்தகம் ஸாமான்ய பாமரஜனங்களை மயக்கக் கூடியதாயிருந்தபடியாலே ஒரு மறுப்பு எழுதி வெளியிட்டே யாகவேண்டுமென்று தீவிரமான முயற்சி யுண்டாயிற்று.

சதஸம்வாதகண்டனமென்றே பெயர்வைத்து பதிலெழுதி 4, 5 நாளிலேயே அச்சிட ஆரம்பித்து முதல்பாரத்தை மட்டும் (கீழே ப்ரஸ்தாவித்த) பரமாப்தரான தாதாசாரியர் ஸ்வாமிக்கு (ஒருபிரதி) அனுப்பினேன். உடனே அந்த ஸ்வாமியின் ஸ்ரீமுகம் கிடைத்தது. (அதில் அவர் எழுதியிருந்ததாவது)—"இவ்வூரில் அந்த நபர் அக்கிலி பிக்கிலியென்று யாவராலும் ஒதுக்கப்பட்டவர்; அவருடைய புத்தகத்தை இங்கே கண்ணெடுத்துப் பார்ப்பாருமில்லை. அந்த புத்தகம் பிரசாரமடையாதபடி நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம். இதைப் பொருள்படுத்தி தேவரீர் பரிச்ரமம் கொள்ள வேண்டாமென்று தோன்றுகிறது" இத்யாதி. அப்படி அந்த ஸ்வாமி யெழுதியிருந்ததை மிகவும் பத்யமாகக் கொண்டு அந்த ப்ரவ்ருத்தியில் நின்றும் நிவ்ருத்தனானேன். ஆனாலும் ஒரு பாரம் (8 பக்கம்) அச்சிட்டானதை வீண்படுத்தக் கூடாதென்று தோன்றி மேலேயும் சில பக்கங்கள் அச்சிட்டு, அவதாரிகை யென்றும், "ஸூர்யோதயத்திற்கு அருணோதயமிது" என்றும் வெளியிட்டுப் பரவச் செய்தேன். இதில் ஒரு பிரதிகூட இப்போது கிடைக்காது. அந்த சதஸம்வாதமும் அப்படியே. அதன் பிறகு பலதடவை அடியேன் திருக்குடந்தைக்குச் சென்றதுண்டே; யாரைக் கேட்டாலும் சதஸம்வாதமென்கிற பெயரையும்

நாங்கள் கேட்டதில்லையே யென்றார்கள். அந்த நபரைப்பற்றின ப்ரஸ்தாவமும் பிறகு காதில் விழுந்ததில்லை. ஸம்ப்ரதாயத்தில் வாதக்ரந்தங்களெழுதுவது என்கிற ஒரு பணிக்கு அந்த நபரே பீஜபூதர். அவருடைய அந்த அஸம்பத்த—அபத்த புத்தகத்தைப் பார்க்க நேர்ந்ததும் ஒரு நன்மைக்கு ஹேதுவாயிற்று. அதாவது, நம்முடைய ஸம்பிரதாயத்திலுள்ள மருமமான அம்சங்களையெல்லாம் ஆர அமர ஆராய்ந்து தெரிந்து கொள்ள வேணுமென்கிற அபிநிவேசமுண்டாவதற்கு அதுவே அடியாயிற்று. திருப்புட்குழி ஸமீபத்திலுள்ள முஸரபாக்கத்தில் ஸ்ரீமத் விரக்திபாஷ்யகாரர் ஸ்வாமியென்று ஒரு வித்வந்மணி யெழுந்தருளியிருந்தார். அவர் வியாகரண மீமாம்ஸைகளில் பரிபூர்ணபாண்டித்யம் பெற்றிருந்ததோடு உபயவேதாந்தங்களிலும் அகாதமான ஞானமுடையவர். அவரை 'நீறுபூத்த நெருப்பு' என்றே யாவரும் சொல்லுவர்கள். காஞ்சீபுரத்தில் ஸ்ரீயதோக்தகாரி ஸன்னிதி ப்ராந்தத்திலுள்ள பல பெரியார்கள் ஸம்ப்ரதாய க்ரந்தங்களையெல்லாம் காலக்ஷேபம் செய்ய வேணுமென்று ஆவல் கொண்டு அந்த பாஷ்யகார ஸ்வாமியைக் காஞ்சிக்கு எழுந்தருளப்பண்ணி அவ்விடத்திலேயே ஸ்திரவாஸியாக வைத்து யதோக்தகாரி ஸன்னிதியில் பொய்கையாழ்வார் திருமண்டபத்தில் நித்யமும் காலை மாலைகளில் ஸம்ப்ரதாய க்ரந்த ப்ரவசநம் நடந்து வரும்படி ஏற்பாடு செய்திருந்தார்கள். அப்படி 15, 20 வருஷகாலம் நடந்தது. அக்காலத்தில் பிரபல உத்யோகஸ்தர்கள் வக்கீல்கள் வைதிகர்கள் பலரும் அந்த ஸ்வாமி பக்கலிலே உபயவேதாந்த ரஹஸ்யங்களையெல்லாம் வரியடைவே ச்ரவணம் செய்து வந்தார்கள். அதுவொரு நல்லடிக் காலமென்ன வேணும். அந்த பாஷ்யகார ஸ்வாமிக்கு ஸ்ரீவசநபூஷணமீமாம்ஸா பாஷ்யம், ரஹஸ்யத்ரயமீமாம்ஸாபாஷ்யம், பாலஸரஸ்வதீப்ரணீத தாத்பர்ய தீபிகை, ஸம்ப்ரதாயசந்திரிகை.........இத்யாதிகளான அர்வாசீந உத்துங்க க்ரந்தங்களிலும் விசேஷமான உபஸ்திதியுண்டு. அந்த க்ரந்தங்கள் யாவும் அந்த ஸ்வாமிக்குத் தவிர வேறு எந்த வித்வானுக்கும் வசப்பட்டிருக்கவில்லையென்று திண்ணமாகச் சொல்லலாம். அந்த க்ரந்தங்களையெல்லாம் அந்த ஸ்வாமி ஸன்னிதியிலே வாசிக்க வேணுமென்று அடியேனுக்கு அபிலாஷையுண்டாயிற்று. கீழே (பக்கம் 8-ல்) ஸேவைஸாதிக்கின்ற ஸ்ரீமத் புரிசை ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமி ஸன்னிதியிலே ஸாமாந்ய விசேஷ சாஸ்த்ரங்களை யதிகரித்து வித்வானாயிருந்த தாமல் குட்டியென்கிற அக்காரம் அனந்தாசார்ய ஸ்வாமியும் அப்போது காஞ்சியில் வாஸமாக வந்திருந்தபடியால் இருவருமாகச் சேர்ந்து அதிகரிப்பதென்று முடிந்தது.



ஸ்ரீமதுபயவே வித்வத்வரேண்ய விரக்தி பாஷ்யகாரர் ஸ்வாமி (வைகுண்டவாஸி)

நெடுக வாசித்துக் கொண்டே போவது, ஸந்தேஹமுள்ள விடங்களில் கேட்டுத் தெளிவது—என்கிற ப்ரக்ரியையில் நடந்து சென்றது. அப்போது அந்த க்ரந்தங்கள் அச்சேறாமல் ஓலையேட்டிலும் காகிதத்திலுமே யிருந்தபடியால் அவற்றைப் பரிஷ்கரித்து அச்சிடவும் ஆரம்பித்தேன். அப்போது தெலுங்கு லிபியில் அச்சிடுவதற்கு விசேஷ ஸௌகரியமிருந்தபடியாலே அந்த லிபியிலேயே அச்சிடத் தொடங்கினேன்.

முதலில் ஸம்ப்ரதாயசந்திரிகா என்கிற ஏழு ப்ரகாசம் கொண்ட உயர்ந்த க்ரந்தத்தை யச்சிட்டேன். பிறகு, புருஷகாரமீமாம்ஸை, ரஹஸ்யத்ரயகாரிகாவளீ என்கிற க்ரந்தங்களை யச்சிட்டேன். அதன் பிறகு ரஹஸ்ய விவேகமென்கிற மணிப்ரவாளக்ரந்தம். அதன் பிறகு ரஹஸ்யத்ரயமீமாம்ஸாபாஷ்யத்தை யச்சிடத் தொடங்கினேன். இது மிகப்பெரிய க்ரந்தம். மூலமந்த்ரத்தில் ப்ரணவ நமஸ்ஸுக்கள் வரைக்குமே இதில் விசாரம் நிகழ்ந்திருக்கிறது. அவ்வளவுக்கே க்ரந்தம் மிகப் பரந்திருக்கிறது. அதை யச்சிடுவதற்கு விசேஷத்ரவ்ய உபபத்தி அபேக்ஷிதமாயிருந்தபடியால் சென்னையில் தென்னாசார்ய ஸம்பிரதாயஸ்தர்களான சில மஹான்களையடுத்து அவர்களின் உதவியைக்கொண்டு நடத்துவதென்று ஆலோசித்திருக்கையில், அப்போது மயிலாப்பூரில் பிரபல அட்வொகேட்டாயிருந்த ஸ்ரீமதுபயவே S. கோபாலஸாமி ஐயங்கார் என்பவர் யாத்ருச்சிகமாகக் காஞ்சிக்கு எழுந்தருளினார். இவர், ஜகத்ப்ரஸித்தரான ஸ்ரீஉவே. (ஸர்) எஸ். வரதாசாரிய ஸ்வாமியின் ஸாக்ஷாத் மாதுலர். ஆங்கிலத்திற்போலவே ஸம்ஸ்க்ருதத்திலும் வல்லவர். கீழே (பக்கம் 29-ல்) ஸேவை ஸாதிக்கின்ற மண்டயம் ஆழ்வார் ஸ்வாமியை வரவழைத்துத் தம்முடைய பங்களாவில் பல வருஷங்கள் எழுந்தருளியிருக்கச் செய்து அவரிடத்திலே உபயவேதாந்தங்களையும் வரியடைவே கற்றவர். அஸ்மதீய மாதாமஹ ஜீயர் ஸ்வாமி திருவடிகளிலும் ஸ்ரீவசநபூஷண தத்வத்ரயாதிகளை யதிகரித்தவர். உபய வேதாந்தங்களையும் சில வக்கீல்களுக்கு ப்ரவசனமும் செய்தவர். பஹுச்ருதர் என்கிற பிருதம் உண்மையில் இவரொருவர்க்கே ஏற்கும். அனேகவருஷகாலம்சென்னையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த வேதாந்ததீபிகையென்னும் பத்ரிகைக்கும் இரண்டு மூன்று வருஷகாலம் ஸம்பாதகராக இருந்தவர் இந்த கோபாலஸாமி



ஸ்ரீமதுபயவே S. கோபால ஸ்வாமி ஐயங்கார், B.A., B.L., அட்வகேட், மயிலை (வைகுண்டவாஸி)

ஐயங்கார் ஸ்வாமி. இவர், மேலேகுறித்த விரக்திபாஷ்யகார ஸ்வாமியின் பெருமை களைக் கேள்விப்பட்டு அவருடைய ப்ரவசந கோஷ்டியில் இரண்டொருநாள் அந்வயித்துப் போக வேணுமென்றே காஞ்சிக்கு வந்ததாகத் தெரிந்தது. அப்படியே அந்வயித்திருந்த காலத்தில், ஸம்ப்ரதாயசந்த்ரிகாதிகளான சில க்ரந்தங்கள் அச்சிட்டு முடிந்திருப்பதையும் இன்னும் சில பெரிய க்ரந்தங்கள் அச்சிட வேண்டியிருப்பதையும் அடியேன் விஜ்ஞாபித்து இதை தேவரீரே நிறைவேற்றி வைக்க வேணுமென்று பலருடன் சேர்ந்து பிரார்த்தித்தேன். ஸமயம் நல்ல ஸமயமாயிருந்தபடியால் அந்த ஸ்வாமி ஒருவிதமான தடையும் சாக்குபோக்கும் சொல்லாமல் 'எத்தனை பாரமாகும்? என்ன செலவாகும்?' என்றுகூட வினவாமல் " அச்சுக்கூடத்தில் கொடுக்கும்படியாக மாத்ருகை ஸித்தமாயிருக்கிறதோ? இருந்தால் இப்போதே அடியேன் கையில் கொடுத்து விடலாம்; நாளையிலிருந்தே அச்சிட ஆரம்பித்து ப்ரூப் காபிகளை இவ்விடத்திற்கே அனுப்பிவரத் தடையில்லை" என்று அவலீலையாக ஸாதித்து விட்டார்.

அக்காலத்தில், சென்னைமா நகரில் வாழ்ந்துவந்த கராலபாடி ஆழ்வாரய்யா என்கிற த்ரைவர்ணிகர் வித்வானுயும் விசேஷ தனிகராயு மிருந்தபடியால் ஸ்ரீ வைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபை யென்னும் பெயரால் ஒரு ஸபையை ஏற்படுத்தி அது சாச்வதமாக நடக்கும்படியான திட்டங்களும் செய்திருந்தார். அந்த ஸபையின் மூலமாக நம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் நூற்றுக் கணக்காக அச்சிடப்பட்டிருக்கின்றன வென்பது ஜகத் ப்ரஸித்தம். ட்ரஸ்டிகளின் அவதானக் குறைவினுல் அந்த ஸபை இப்போது அஸத் கல்பமாயிருந்தாலும் அது நன்ருக வேலை செய்து கொண்டிருந்த காலத்தில் அந்த ஸபைக்கு, மேலே சொன்ன கோபாலஸ்வாமி ஐயங்கார் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். அடியேன் முத்ரணம் செய்ய வேணுமென்று தெரிவித்த க்ரந்தங்களை யெல்லாம் அந்த ஸபையின் மூலமாகவே அச்சிடுவிக்க நிச்சயித்த அந்த மஹான் அதிஸ்வல்ப காலத்திலேயே அத்தனையும் தெலுங்கு லிபியிலேயே அச்சிடுவித்து முடித்தார். ரஹஸ்யத்ரயமீமாம்ஸாபாஷ்யம், பால ஸரஸ்வதியின் தாத்பர்ய தீபிகை, கடிநபத தீபிகையோடு கூடின சரமச்லோக டிப்பணி...... இத்யாதிகளான உத்க்ரந்தங்க ளெல்லாம் அந்த மஹானுடைய கருணையினுல் வெகுவிரைவாகவே அச்சேற்றப் பட்டு முடிந்தன. அவ்வதிசயம் எழுதி முடியாது. அந்த ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபையும் அதன் காரியங்களும் சென்னைமா நகரில் நடந்து கொண்டிருந்தன. அப்படியிருக்க, அச்சுக் கூடத்தையும் இதற்காகவே காஞ்சீ புரிக்கு அனுப்பி பெரியகாஞ்சியில் ஸ்தாபித்து, ஸபாபண்டிதர்களான இருவரை இவ்விடத்திலேயே வந்து வஸிக்கச் செய்து, இரவுபகலாக வேலை நடக்கும்படி திட்டம் செய்து, அதிமாநுஷக்ருத்ய மென்னும்படி அதித்வரையில் முடித்து வைத்த அதிசயம் நெஞ்சால் நினைப்பரிதே. ஸ்ரீவசநபூஷணமீமாம்ஸாபாஷ்யம் மட்டும் அதற்கு முன்னமே ஸ்ரீமத் யோகி பார்த்தஸாரதி ஐயங்கார் ஸ்வாமி (தெலுங்கு லிபியில் அதிஸூக்ஷ்மமான அக்ஷரத்தில்) ஒருவாறு அச்சிட்டிருந்தார். அதை அடியேன் ஏழெட்டு வருஷங்களுக்கு முன்பு தேவநாகர லிபியில் அச்சிட்டிருக் கிறேன். இந்த க்ரந்தம் அபூர்ணம்; கிடைத்திருக்கிறவரையில் அச்சிட்டிருக்கிறேன்.

அந்த மயிலை கோபாலஸ்வாமி ஐயங்கார் அப்போது அடியேனுக்கு ஒரு கட்டளையிட்டார். அதாவது, நம் பூருவாசாரியர்கள் ஸாதித்திருக்கிற ஸகல ஸ்தோத்ரங்களுக்கும் மணிப்ரவாள வியாக்கியானம் விரிவாகவும் விளக்கமாகவும் எழுதித் தரும்படி நியமித்தார். எழுதிக் கொடுப்பதை உடனுக்குடனே அச்சிட்டு முடிப்பதாகவும் ஸாதித்தார். அப்போதே அந்த நியமனத்தை சிரஸா வஹித்து பஞ்ச

ஸ்தவத்தில் ஸ்ரீஸ்தவத்திற்கு வியாக்கியான மெழுத ஆரம்பித்து அதைப் பூர்த்தி செய்து உடனே வரதராஜஸ்தவத்திற்கும் எழுத ஆரம்பித்தேன். நம் தேவப் பெருமாளுடைய ஸ்தோத்ரமாயிருப்பதால் விஸ்தாரமாகவே யெழுத வேணுமென்று ஆவல் கொண்டு விரிவுக்கு அஞ்சாமல் விபுலமாகவே யெழுதினேன். "எவ்வளவு விரிவாக எழுதினாலும் அச்சிட்டுவைக்க ஆக்ஷேபணை கிடையாது" என்று அந்த ஸ்வாமி உறுதி கூறியிருந்தபடியால் வெகு உத்ஸாஹத்தோடு விரிவாகவே யெழுதிக் கொடுத்தேன். அவ்விரண்டு ஸ்தவங்களின் வியாக்கியானங்களையும் அந்த மஹான் அந்த ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபையின் சார்பாகவே அச்சிடுவிக்க நிச்சயித்திருந்தார். அந்த ஸபைக்கு அதிகாரிகள் இன்னும் ஏழெட்டு நபர்கள் இருந்தபடியால் அவர்கள் அதை ஆக்ஷேபித்தார்கள்; பூருவர்கள் இயற்றின க்ரந் தங்களை ப்ரகாசநம் செய்வதற்காக இந்த ஸபை ஏற்பட்டதே யொழிய இக்காலத் தவர்கள் எழுதும் க்ரந்தங்களையும் இதில் எற்றுக்கொண்டு அச்சிடுவது உசிதமன்று என்று ஆக்ஷேபித்தார்கள். அது யுக்தமானதே யென்று அடியேனும் ஆமோ தித்தேன். ஆனாலும் அந்தஸ்வாமி அடியேனிடம் வைத்திருந்த பக்ஷபாத விசேஷத் தினால் தம்முடைய அத்யவஸாயம் பழுதுபடக் கூடாதென்று ஒரு தலைநின்று தீவிர மாக முயன்று மற்ற அதிகாரிகளையும் தம் சொல்வழி வரும்படி பண்ணி அவ் விரண்டு ஸ்தவவியாக்கியானங்களையும் அந்த ஸபையின் மூலமாகவே அச்சிடுவித்து முடித்தார். ஸ்ரீஸ்தவ வியாக்கியானம் 7 பாரம் (அதாவது 56 பக்கம்), வரதராஜ ஸ்தவ வியாக்கியானம் 58 பாரம் (அதாவது 464 பக்கம்) அச்சாகி யிருக்கிறது. ஆயிரம் பிரதிகள் அச்சிட்டபடியால் அவை ஸ்ரீவைஷ்ணவ வுலகமெங்கும் பரவின. முப்பது வருஷங்களுக்கு முன்னிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் பெரும்பாலும் அந்த ஸபையில் 20ரூ ஜீவிய சந்தா செலுத்தி அங்வயித்திருந்தபடியால் அந்த க்ரந்தங்கள் அப்போது யாவர்க்கும் கிடைத்திருக்கின்றன. தெலுங்கு லிபியில் ப்ரவேசமில்லா தவர்களுக்காகப் பிறகு மணிப்ரவாள லிபியில் இவற்றை, ஸ்ரீ உ.வே. (கோயம் புத்தூர்) வெங்கடரமணையங்கா ரென்கிற மஹான் அச்சிடுவித்தார். அப்போது பாதிபாகம் சுருக்க வேண்டியதாயிற்று. ஸமீப காலத்தில் மூன்றாவது பதிப்பும் நடந்திருக்கிறது. இது நிற்க.

அந்த கோபாலஸ்வாமி ஐயங்கார் ஆசார்ய ஹ்ருதயத்தில் மிகுந்த ஈடுபாடுடை யவர். அதனால் அதற்கு தாத்பர்ய ஸாரமொன்று எழுதித் தரும்படி நியமித்தார். அதையும் எழுதிக் கொடுத்தேன். ஆனால் முதலிரண்டு ப்ரகரணங்களுக்கு மட்டுமே அப்போது எழுதிக் கொடுத்தேன். அதையும் உடனே அந்த ஸபையின் மூல மாகவே தெலுங்கு லிபியிலேயே அச்சிடுவித்தார். அக்காலத்தில் அடியேன் வித்யார்த்தி தசையில்தான் இருந்து வருகிறேன். ஸகலக்ரந்தங்களுக்கும் எல்லாரும் தெளிவாகத் தெரிந்து கொள்ளும்படியான வியாக்கியானங்களை யெழுத வேணு மென்கிற குதூஹலம் அடியேனுக்கு இளம்பிராயத்திலேயே உண்டாயிற்று. ஸ்வய மாகவே குதூஹலித்திருந்தது தவிர அனேக மஹான்களின் நியமனமும் ப்ராப்த மாயிற்று. அப்படிப்பட்ட மஹான்களில் மேலே குறித்த கோபாலஸ்வாமிஐயங்கார் ஸர்வ ப்ரகாரங்களாலும் முதன்மை பெற்றவர். அடியேன் வியாக்கியானங்க ளெழுதுவதற்கு இந்த ஸ்வாமி செய்தருளின ப்ரரோசநமும் ப்ரோத்ஸாஹநமும் வாசாமகோசரம். அந்த ஸ்வாமியின் ஸ்ரீமுகங்கள் ஐந்நூறுக்கு மேல் அடி யேனுக்குக் கிடைத்திருக்கும். ஒவ்வொரு ஸ்ரீமுகத்திலும் நான்கு வரிகளே யிருக்கும்; எதையாவது எழுதும்படி நியமித்தபடியே யிருப்பர். பதினெட்டாவது வயதிலிருந்து நாற்பத்து மூன்றாவது வயதளவும் இருபத்தைந்து வருஷகாலம் இந்த மஹானோடு நெருங்கிப் பழகினது அடியேனுக்குப் பலவகையான ச்ரேயஸ்ஸுக் களுக்கு ஹேதுவாயிற்று. இவருடைய சரமகாலத்தில் இரண்டு மூன்று ஸம்வத்

ஸரங்களின் விருத்தாந்தங்கள் தெரிவிக்கவேண்டியவை யுண்டு ; அவற்றை மேலே தெரிவிப்பேன்.




ஸ்ரீமத்பரமஹம்ஸ அஹோபில மடாதிபதி ஸ்ரீ இஞ்சிமேடு அழகியசிங்கர் (வைகுண்டவாஸி)

நெடுநாள் அஹோபிலமடாஸ்தானத்தை யலங்கரித்திருந்து மூன்று வருஷங்களுக்கு முன்பு திருநாடலங்கரித்த ஸ்ரீமத் இஞ்சிமேடு ஸ்வாமி பூர்வாச்ரமத்தில் இஞ்சிமேடு ரங்கநாதாசார்ய ஸ்வாமியென்று வ்யபதிஷ்டர். திருப்பதியில் ஸ்ரீமத் புரிசை ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமி ஸன்னிதியில் நெடுநாள் வாழ்ந்து ஸாமாந்ய விசேஷசாஸ்த்ரங்களை யதிகரித்து உபயவேதாந்த ப்ரவர்த்தக ப்ரவீணராய் காஞ்சியில் பலவாண்டுகள் எழுந்தருளியிருந்தார். அடியேனுடைய க்ருஹத்திற்கு அதிஸமீபத்திலேயே ஒரு திருமாளிகையை ஸ்வகீயமாகக் கொண்டு குடி வாழ்ந்து வந்தார். அப்போது இருவோமுக்கும் மிகநெருங்கிய பழக்கம் ஏற்பட்டது. அனுஷ்டானத்திற்கு வெள்ளக்குளமெழுந்தருள்வர். அடியேனுடைய க்ருஹத்தின் பக்கத்திலுள்ள ஸந்து வீதிவழியாகவே அக்குளத்திற்குச் செல்ல வேண்டுமாதலால் இருவரும் ஒன்று சேர்ந்தே குளம் செல்வது தினப்படியான வழக்கம். திரும்புகிற ஸமயத்தில் சேர்த்தி ஏற்படுவது அரிதாகும். செல்லுகிற ஸமயத்தில் நியமேந சேர்ந்து தான் செல்வது. அப்போதைய ஸம்பாஷணைகள் நாற்பது வருஷங்களுக்கு மேலானாலும் மறக்க முடியாதவை. திருப்பதியில் தாம் வாழ்ந்தபோது ஸ்ரீமத் புரிசை ஸ்வாமி பக்கலிலே தாம் அநுபவித்த விசேஷங்களை ஒவ்வொருநாள் ஒவ்வொன்றாக ஸாதித்தருள்வர். மற்றும் அநேக க்ராந்திக விஷயங்களையும் ஸாதித்தருள்வர். இடையிடையே ஸம்ப்ரதாயார்த்த சர்ச்சைகளும் நடைபெறும். கோபதாபங்கள் சிறிதுமில்லாமல் புன்முறுவலோடே ஸாதிப்பர் ; தாமுறுவல் கொண்ட முகத்துடனே கேட்டருள்வர். மனச்சாக்ஷியை மீறியோ அப்ராமாணிக வழியையவலம்பித்தோ விதண்டாவாதமாகவோ ஓரக்ஷரமும் ஸாதிக்கமாட்டார். அந்த ஸ்வாமியிடத்தில் அடியேன் விசேஷித்து அநுபவித்த குணமிது. ஸ்ரீமத் பெருங்கட்டூர் கண்டாவதாராசார்ய ஸ்வாமி யென்றொருவர் ஸன்னிதி வீதியிலெழுந்தருளியிருந்தார். அவர் வையாகரணர். கோவில் பாடசாலையில் பல வருஷங்கள் வ்யாகரணப்ரவசநம் செய்து கொண்டிருந்தவர். அந்த ஸ்வாமியின் இயல்வு இஞ்சிமேடு ஸ்வாமியின் இயல்வுக்கு நேர்மாறானது. விஷயசர்ச்சை யென்றெடுத்தால், அது எந்த விஷயமானாலும் ஸரி, கோபதாபங்களில்தான் பர்யவஸித்து நிற்குமவர்க்கு. உச்சைருத்கோஷம் ப்ரபலமாயிருக்கும். இஞ்சிமேடு ஸ்வாமியின் கம்பீர ப்ரக்ருதிகளை நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சு கனிந்திருக்கும்.

இப்போது லௌகிகவைதிகங்களில் மஹாப்ரவீணராயும் ஸுப்ரஸித்தராயுமெழுந்தருளியிருக்கிற ஸ்ரீமதுபயவே (ஸர்) எஸ். வரதாசாரியர் ஸ்வாமி அப்போது

[வக்கீலாக எழுந்தருளியிருந்த காலத்தில்] அடிக்கடி காஞ்சீபுரிக்கு வந்து வாரக் கணக்காகவும் பக்ஷக்கணக்காகவுமிருந்து இஞ்சிமேடு ஸ்வாமி ஸன்னிதியில் வேதாந்த ச்ரவணம் செய்து கொண்டிருந்தார். அந்த ஸ்வாமி அப்போது ஜட்ஜ் பதவியை அடையாமலிருந்தாலும் அப்போதும் பரத்வத்தில் குறையநின்றவரல்லர்; எனினும் இப்போது போலவே அப்போதும் ஸௌலப்யமூர்த்தியாகவேயிருப்பர்.



ஸ்ரீமதுபயவே (ஸர்) எஸ். வரதாசார்ய ஸ்வாமி, (ரிடைர்ட் பெடரல் கோர்ட் ஜட்ஜ்) மயிலாப்பூர்.

நாற்பது வருஷங்களுக்கு முற்பட்ட பழைய காலத்துக் கதையை எழுதுகிறேனாகிலும் அடியேனுடையசிந்தனையில் இவையெல்லாம் இன்று நேற்றுக் கதைகளாகவே ஸ்புரிக்கின்றன. எஸ். வரதாசாரியர் ஸ்வாமி அடியேனுடைய தென்னண்டை மாடவீதியில் உலாவிக்கொண்டிருப்பதாகவே இப்போதும் பாவனை நிகழ்கின்றதடியேனுக்கு. இந்த ஸ்வாமியின் பரிசயத்தை அக்காலத்திலிருந்தே பெற்றவனடியேன். கீழே ப்ரஸ்தாவித்த மயிலாப்பூர் கோபாலஸ்வாமி ஐயங்காருக்கு இவர் மருமகனார் என்கிற காரணத்தினாலும் அன்பு வளர்ந்து வந்தது. இளமையிலே அங்குரித்த நேசமாகையாலே நிலைகுலையாமல் இற்றைக்கும் திநேதிநே அபிவிருத்தி தசையிலிருந்து வருகிறது.

ஸ்ரீமத் பரமஹம்ஸ தேரழுந்தூராண்டவன் அக்காலத்தில் காஞ்சீபுரியில் நித்யவாஸமாக எழுந்தருளினார். எப்படிப்பட்டவர்களையும் ஆவர்ஜநம் செய்யும்படியானவொரு மஹா குணம் அந்த ஸ்வாமியிடத்திலே குடிகொண்டிருந்தது. யார் அணுகி வந்தாலும் தாமும் விச்ராந்தி கொள்ளாமல் அவர்களுக்கும் விச்ராந்தி கொடாமல் வார்த்தையாடியருள்வர். மஹாரஸிகர். அந்த ஸ்வாமியின் பரமக்ருபைக்குப் பாத்திரமாக நேர்ந்தது. "அண்ணா! நித்யமும் ஒரு மணி காலமாவது நீர் இவ்விடம் வந்து வார்த்தையாடித்தான் போகவேண்டும்" என்று கடுமையாக நியமித்திருந்தார். அப்படியே சிலகாலம் தினப்படியாகவே சென்று கொண்டிருந்தேன். ஸ்வரூபாநுரூபமாக ப்ரணமம் செய்தே உட்காருவேன். ஸ்வகீயஸம்ப்ரதாயப்படி ஸக்ருத்ப்ரணமம் செய்கையில் ஒருநாள், "அண்ணா! நான் நேற்றிரவு ஒரு கனாக்கண்டேன்; நீர் இங்கு வந்து என்னைப் பலமுறை நமஸ்கரித்ததாகவும் அப்போது நான் 'இன்று என்ன விசேஷம்? பலமுறை நமஸ்காரம் செய்கிறீரே ஏன்?' என்று கேட்க, 'நான் வேதாந்த தேசிக ஸம்ப்ரதாய நிஷ்டன்தானே, அந்த நிஷ்டைக்குச்சேர இப்படித்தானே அநுஷ்டிக்க வேண்டும்' என்று நீர் பதில் சொன்னதாகவும் கனாக்கண்டேன், இன்று ப்ரணம விஷயமாக உம்மோடு சர்ச்சை செய்ய வேணுமென்று நினைக்கிறேன்; செய்யலாமா?" என்று மந்தஹாஸத்தோடு கேட்டருளினார். அதற்கு விஜ்ஞாபித்தேன்—"தினந்தோறும் எத்தனையோ சர்ச்சைகள் செய்து கொண்டுதானேயிருக்கிறது; இன்று மாத்திரம் பூர்வபீடிகை எதற்காக?" என்றேன். அதற்கு ஆண்டவன் ஸாதித்தார்—"அந்த சர்ச்சைகளெல்லாம் ஏடுகளோடு நிற்கிற விஷயம்; இது அப்படியல்லாமல் தினப்படி அநுஷ்டானத்திலிருக்கிற விஷயமாகையாலே உம்முடைய அநுஷ்டானத்தை மாற்றிவைக்க வேணுமென்கிற ஆசையோடு இதை சர்ச்சிக்க நினைக்கிறேன்.

நான் சொல்லுகிற விஷயங்கள் யுக்தமாகத் தோன்றினால் இனிமேல் ஸக்ருத்ப்ரணாமாநுஷ்டானத்தை மாற்றிக் கொண்டு அஸக்ருத்ப்ரணாமாநுஷ்டானத்தைக் கைக்கொள்வீரா?" என்று.

"ஆக்கூராண்டவன்" என்கிற வ்யபதேசத்தோடு பிறகு தேரழுந்தூராண்டவனுடைய ஆஸ்தானத்தை யலங்கரித்திருந்த ஸ்வாமி அப்போது க்ருஹஸ்தராய் காஞ்சீபுரியிலேயே வாஸம் செய்து கொண்டு ஸன்னிதி வீதியில் திருவடி ஸன்னிதியில் ஸ்ரீராமாயணப்ரவசனம் செய்துகொண்டிருந்தார். ஆக்கூர் ரங்கஸாமி ஐயங்காரென்று அவர்க்குத் திருநாமம். அவரும் அடிக்கடி ஆண்டவன் ஸன்னிதிக்கு வருவர். மேலே ப்ரஸ்தாவித்த ப்ரணாம சர்ச்சை ஆரம்பிக்கும்போது அவரும் கூடவிருந்தார். தேரழுந்தூராண்டவன் அடியேனை நோக்கிக் கேட்ட கேள்விக்கு அடியேன் விடை கூறுவதற்கு முன்னே அவர் சொன்னார்—"ஏதோ லோகாபிராமமாக விஷய சர்ச்சைகளைச் செய்யலாமேயொழிய ஸ்வாமி இப்படி கேட்டருள்வது யுக்தமாகாது. ஸக்ருத்ப்ரணாமமே ப்ராமாணிகமென்று அண்ணங்கராசாரியர் ஸ்தாபித்து விட்டால் அவ்வநுஷ்டானத்தை ஸ்வாமிதான் கைப்பற்ற முடியுமா? ஸ்வாமி கேட்டருளுகிறமாதிரி அவரும் கேட்கலாமன்றோ?" இத்யாதி. பிறகு அடியேன் விஜ்ஞாபித்தேன்;—முற்காலத்தில் வித்யாரண்ய ஸ்வாமிக்கும் அக்ஷோப்ய முனிக்கும் த்வைதாத்வைத விஷயமாய் வாதவிவாதம் பிரபலமாக நடந்ததாகவும், தேசிகன் *அஸினா தத்த்வமஸினா பரஜீவப்ரபேதினா, வித்யாரண்ய மஹாரண்யம் அக்ஷோப்ய முனிரச்சினத்* என்று ஒரு ச்லோகமெழுதி யனுப்பி வித்யாரண்யருடைய பராஜயத்தைத் தெரிவித்ததாகவும் புத்தகங்களில் கதையெழுதி வைத்திருக்கிறார்கள். அதனால் அத்வைத மதம் தலை மடிந்துவிட்டதா? நம்மாழ்வார் (திருவிருத்தத்தில்) *வணங்கும் துறைகள் பலபலவாக்கி, மதிவிகற்பால் பிணங்கும் சமயம் பல பலவாக்கி, அவையவைதோறு அணங்கும் பல பல வாக்கி நின்மூர்த்தி பரப்பிவைத்தாய்* என்றருளிச்செய்கிறார். இப்பாசுரத்தின் அர்த்தம் ஸ்வாமி யறியாததன்று. உபயகலா ஸம்ப்ரதாயத்திலும் மஹாஜ்ஞாதாக்களாகப் பலபல மஹான்கள் விளங்கிவருகிறார்கள். அவரவர்கள் தங்களுக்குப் பரம்பரயா ப்ராப்தமான அநுஷ்டானங்களிலே ஊன்றிநிற்கிறார்கள். விசாலமான நாடுநகரங்களிலே நெடுநாளாகப் பரவியுள்ள இவ்வநுஷ்டான பேதங்கள் இன்றாக ஒருவரால் அடியறுக்க முடியுமா?



ஸ்ரீமத் பரமஹம்ஸ தேரழுந்தூர் ஆண்டவன்
(வைகுண்டவாஸி)

அடியேன் ஸ்வாமியின் வாதங்களுக்கு விடைகூறமுடியாமல் பங்கமடைந்து ஸக்ருத் ப்ரணமானுஷ்டானத்தைவிட்டு அஸக்ருத் ப்ரணமாநுஷ்டானத்தைக் கைப்பற்று கிறேனென்றே வைத்துக்கொள்ளுவோம்: அடியேனொருவன் இப்படி செய்துவிட்டதனலே என்னவிடும்? அல்லது வாதத்தில் தேவரீர் பங்கமடைந்து அடியேனுடைய அனுஷ்டானத்தைக் கைப்பற்றிவிட்டாலும் என்னவிடும்? ஒன்றுமாகாது. எந்த அனுட்டானத்தில் ஔசித்யமிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விமர்சிக்கலாம், சர்ச்சை செய்யலாம்; அத்தனை யொழிய, ஸ்வாமி கேட்கிற கேள்வி நன்றாயில்லையே" என்றேன். ஆனாலும் அந்த சர்ச்சை விசேஷமாக நடந்தது. அதையெல்லாம் அடியேன் அச்சிட்டு வெளியிட்டுமிருக்கிறேன். "தேரழுந்தூராண்டவன் ஸன்னிதியில் நடந்த நமஸ்காரசர்ச்சை" என்று விளங்கக் காட்டியே அச்சிட்டிருக்கிறேன்.

கலாபேத விஷயங்களில் தலையிட்டு வாதக்ரந்தங்களை அடியேன் விசேஷமாக [நூற்றுக்கணக்காக] எழுதியிருக்கிறேனென்பதை உலகமுழுதுமுணரும். 'வேலையற்று வம்புவாதங்களைத் தானே கிளப்பிக்கொண்டு எதையேனும் எழுதிக் கொண்டிருக்கிறானிவன்' என்று நவீனர்கள் நினைப்பதும் சொல்லுவதுமுண்டு. உட்புகுந்து விஷயவுண்மைகளை விமர்சிக்கவல்லவர்கள் அங்ஙனம் நினைக்கவோ சொல்லவோ மாட்டார்கள். ப்ரஸக்தி யேற்படுகிறபோதும், பிறர் விவாதங்களைக் கிளப்புகிறபோதுமே அடியேன் வாதவிவாத நூல்களை எழுதப்புகுவது வழக்கம். இதை மேல் பிரகரணங்களில் விரிவாக மூதலிக்க ப்ராப்தமாகலாம்.

கோவில் பாடசாலையென்கிற சடகோபநிலய பாடசாலையில் ஸ்ரீ சாமா. திருமலைதாதாசாரியர் என்பவர் தலைமை யுபாத்யாயராக இருந்துவந்தார். இவர் மாதாமஹ ஜீயர்ஸ்வாமிக்கு (பூர்வாச்ரமத்தில்) ப்ரதான வித்யார்த்தியாக இருந்தபடியாலும், ஸ்ரீ காதிஸ்வாமி ஸன்னிதியிலும் அடிக்கடி வந்துகொண்டிருந்தபடியாலும், இளமையில் இவரிடத்திலும் அடியேன் வித்யார்த்தியாயிருந்து சில நாடகாலங்கார பாடங்கள் வாசித்தேன். ஸாஹித்யத்தில் இவர் நல்ல பண்டிதர். சிறந்த விமர்சகர். எழுதுவதிலும் நல்லகைகாரர். எனக்கு இவரோடு அதிகமான நெருக்கம் ஏற்பட்டிருந்தது. ஸ்ரீ காதிஸ்வாமி ஸுதர்சன அச்சுக்கூடம் ஸ்தாபித்து அதில் பத்ரிகாப்ரகாசனங்களும் நாநா க்ரந்த முத்ரணங்களும் ஏற்பாடு செய்தருளியிருந்தபடியால் யாமிருவரும் சேர்ந்து வாழ்ந்து அக்காரியங்களை நிர்வஹிக்க வேண்டியிருந்தது. அப்போது அந்த திருமலைதாதாசாரியர் கலா வைஷம்ய வார்த்தைகளையே அடிக்கடி யெடுத்துரைப்பர். அவ்வளவோடும் நில்லாமல், தென்னசார்ய ஸம்ப்ரதாய தூஷணைகளை நிரப்பிச் சில சிறு சுவடிகளையும் அச்சிட்டு வெளியிட்டுக் கொண்டிருந்தார். அப்போது அவரோடு எனக்கு அதிக ஸஹவாஸம் நேர்ந்திருந்ததனல் அவருடைய வெளியீடுகளை ஒன்றுவிடாமல் கண்டு கண்டிக்க வேண்டியதாயிற்று எனக்கு. அவருக்காகவே சில பல புத்தகங்கள் அப்போது நான் எழுத நேர்ந்தது.

பாம்பே நகரத்தில் நிர்ணயஸாகர முத்ராலயாதிகாரிகள் காவ்யமாலா என்றொரு மாஸிக ஸஞ்சிகையைப் பல வருஷங்கள் நடத்திவந்தார்கள். அதில் அபூர்வமான அனேக காவியங்களை வெளியிட்டுக்கொண்டு வந்தார்கள். அதில் பாதுகாஸஹஸ்ரத்தை வியாக்கியானத்தோடுகூட அச்சிட்டார்கள். அதற்கு, மேலே சொன்ன சாமா திருமலைதாதாசாரியர் தவறான ஒரு பூமிகை எழுதியனுப்பி அதில் அச்சேற்றிவைத்தார். பாதுகாஸஹஸ்ரம் அவதரித்ததற்குக் காரணம் இன்னதென்பதை அந்த பாதுகாஸஹஸ்ர வியாக்கியானகாரரே உள்ளபடி யெழுதிவைத்திருக்கிறார். வேதாந்தாசார்ய விஜயமென்கிற ஆசார்ய சம்புவிலும் எழுதப்பட்டிருக்கின்றது யாரோவொரு மதாந்தரஸ்தனை கவி வந்து செருக்கிக் கொக்கரிக்க, அவனுக்காகப் பாதுகாஸஹஸ்ரத்தை ஸ்வாமி இயற்றியருளினரென்று பூருவர்கள் சரித்திரமெழுதிவைத்திருக்க, பிற்காலத்தவர்கள் கோவில்களில் சண்டைகளைக்

கிளப்பினதோடு நில்லாமல் அதன் பரமகாஷ்டையாக ஆசார்ய தூஷணைகளிலும் தலையிட்டு அஸங்கதமான பொய்க்கதைகளைக் கல்பனை செய்ய ஆரம்பித்து மனம் போனபடியெல்லாம் எழுதிவைக்கத் துணிந்து முன்வந்தார்கள். இப்படிப்பட்டவர்களிலே மேலே குறித்த சாமா திருமலைதாதாசாரியர் அக்காலத்தில் அக்ரகண்யராயிருந்தார். இவர் அந்த பாதுகாஸஹஸ்ரபூமிகையில் என்ன எழுதியுள்ளாரென்றால், (ஸம்ஸ்க்ருதத்திற்கு நேரான மொழிபெயர்ப்பு.)

> "வாதிகேஸரி யென்பவர் தாம் பெற்றிருந்த வாதிகேஸரி யென்னும் பிருது காரணமான செருக்கினுலும் மருந்தில்லாத வியாதியான அஸூயையினுலும் கவித்வ விஷயத்தில் தேசிகனேடு போட்டியிட்டதனுல் பாதுகாஸஹஸ்ரம் தோன்றியது. அந்த வாதிகேஸரி யென்பவர் பிள்ளை லோகாசார்யரோடு கூடப்பிறந்தவர்".

என்று எழுதியுள்ளார். இக்கதையை இன்னமும் விரிவாகவே கல்பனை செய்திருக்கிறுர். அதே ஸமயத்தில், தேசிகனுடைய மற்றொரு க்ரந்தமாகிய ந்யாய பரிசுத்தி மூலம் மட்டும் தேவநாகரலிபியில் சென்னையில் அச்சிட்டு வெளியிடப்பட்டது; அதற்கொரு பூமிகையெழுதின திருவஹீந்திரபுரம் சதாவதானி ஸ்ரீநிவாஸாசாரியரும் அந்த பூமிகையில் பாதுகாஸஹஸ்ர ப்ரஸ்தாவத்தைக் கொண்டுவிட்டுக் கொண்டு மேலே சொன்ன திருமலை தாதாசாரியரையே பின்பற்றி அதே விதமாக ஐதிஹ்ய மெழுதி வைத்தார். இவருடைய பூமிகையைப் பார்த்து அவரெழுதினுரோ, அவருடைய பூமிகையைப்பார்த்து இவரெழுதினுரோ தெரியாது. இருவருடைய பூமிகைகளும் ஸமரூபமாகவே வெளிப்பட்டன. அப்போதே அடியேன் இவ்விருவரையும் கண்டித்து உண்மையை ஸப்ரமாணமாக வெளியிட்டு ஒரு மறுப்புப்புத்தகம் (பாதுகாஸஹஸ்ராவதாரதத்வமென்று) தேவநாகரியில் வெளியிட்டேன். பிறகு சில வருஷங்கள் பொறுத்து அது க்ரந்தலிபியிலும் வெளியிடப்பட்டு நாளைக்கும் கிடைக்கக்கூடிய நிலைமையிலிருக்கிறது. இவ்விருவரும் அநேக விஷயங்களில் இருளும் மருளும் மலிந்தவர்களென்று இதில் விரிவாக நிரூபிக்கப்பட்டிருப்பதைப் பண்டிதவுலகம் கண்டு களிக்கின்றது. இந்நூல் அவர்களுடைய ஜீவிததசையிலேயே [அவர்களுடைய பூமிகை வெளிவந்த அடுத்தவாரத்திலேயே] வெளியிடப்பட்டு அவர்கள் கையில் நேராகவே கொடுக்கப்பட்டது; அதன்பிறகு அவர்கள் பல நாள் ஜீவித்திருந்தும் அதற்கு யாதொரு பதிலும் அவர்கள் வெளியிட்டவர்களல்லர். ப்ராமாணிகர்களான விவேகிகள் தலைதுலுக்கிக் கொண்டாடும்படியாகவே ஆதியிலிருந்து அடியேன் எழுதப் பயின்றவன். இவ்வுண்மையைத் தெரிந்து கொண்டவர்கள் அடியேனுடைய வாத நூல்களுக்கு அஞ்சலிசெய்து நிற்பர்களே யொழிய பதிலெழுத நெஞ்சாலும் நினையார்கள். சிலரோவென்னில்; இவ்வுண்மையை நெஞ்சார அறிந்துவைத்தும், சிறிது ப்ரதிவாதம் செய்து பார்ப்போமே யென்று ஆசைகொண்டு கிளர்ந்து ஆந்தனையும் கைகாட்டி, பிறகு கைகட்டி "அண்ணு! வந்தடைந்தே னடியேனை யாட்கொண்டருளே" என்றும் "அண்ணுவடியேனிடரைக் களையாயே" என்றும் அடிபணிந்து நிற்பர்கள்.

விவேகிகள் ப்ரக்ருத விஷயத்தை கவனிக்கவேணும். வாதிகேஸரி யென்பவர் உத்தமாச்ரமி; அழகிய மணவாளச்சீயரென்று அவருடைய திருநாமம். இவரே திருவாய்மொழிக்குப் பன்னீராயிரப்படியும் திருவிருத்தத்திற்கு ஸ்வாபதேசவுரையும், தத்வதீப தீபப்ரகாசமும் மற்றும் அனேக க்ரந்தங்களும் ஸாதித்தவர். இவர்க்குப் பிள்ளை லோகாசார்யரோடு யாதொரு ஸம்பந்தமும் கிடையாது. இவர் பிள்ளைலோகாசார்யருடைய திருத்தம்பியாரல்லர். நைஷ்டிக ப்ரஹ்மசாரியாயிருந்த அவர்க்கு வாதிகேஸரியென்கிற பிருதும் கிடையாது. இப்படிப்பட்ட பிருதங்களை அபதார்த்தமாகக்கொண்டு தள்ளுகிற ஆசார்ய பரம்

பரையில் தலைநின்றவரான அழகிய மணவாளப் பெருமாள் நயினர்தாம் பிள்ளை லோகாசார்யருடைய திருத்தம்பியார். வாதிகேஸரியென்று விருதுபடைத்த உத்த மாச்ரமியும் வேதாந்த தேசிகனும் பரஸ்பரம் ஸௌஹார்தம்மிக்கவர்களென்பது உபயருடையவும் க்ரந்தங்களினல் நன்கு தெரியவருகிறது. தவிரவும், ஸ்ரீரங்கத் திற்கு வேதாந்த தேசிகன் எழுந்தருளின காலத்தில் அவ்விடத்தில் நம்பெருமா ளுடைய நிலைமை எப்படியிருந்தது? அப்போது அங்கு எந்தெந்த ஆசாரியர்கள் எழுந்தருளியிருந்தார்கள்? இத்யாதி விஷயங்களை ஸப்ரமாணமாக ஆராயப்புகுந் தால் தெளிவாகத் தெரியவருகின்ற உண்மைகள் வேருகும். அடியேன் இளமை யில் அந்த ஆராய்ச்சிகளைச் செய்ய ஸந்நத்தனுக இருந்திலேன். தேசிகனைப்பற்றி நவீனர்கள் சொல்லியும் எழுதியும் போருகின்ற இதிஹாஸங்கள் எந்த புராதன க்ரந்தங்களை ஆதாரமாகக் கொண்டவை? என்கிற ஆராய்ச்சி யொன்றில் மட்டும் அடியேன் இறங்கி அப்போது மேலே குறித்த திருமலைதாதாசாரியரிடமும் அவருக் குத் தோள் தீண்டிகளாயிருந்த மற்றும் ஸ்ரீ அய்யா ஸ்ரீக்ருஷ்ணதாதாசாரியார் முதலானவர்களிடமும் விசேஷமான சர்ச்சைகளைச் செய்திருக்கிறேன்.

ஆசார்ய சம்பூ என்கிற உத்தமமான—பரமப்ராமாணிகமான பழைய க்ரந் தத்தை அவர்கள் வாயால் சொல்லுவதுமில்லை. ஏனென்ருல், நவீனர்களான தாங்கள் சொல்லுவதும் எழுதுவதுமான பொய்க்கதைகளில் ஒன்று கூட அந்த க்ரந்தரத்னத்தில் இடம் பெருமையாலும், அதிலுள்ள கதைகளுக்கு நேர்மாருன கதைகளைத் தாங்கள் சொல்லிக்கொண்டிருப்பதனுலும் அந்த ஆசார்ய சம்பூக்ரந் தத்தை இவர்கள் பிரமாணமாக உதாஹரிக்க முடியாமற் போயிற்று. 500 ஆண்டு களுக்கு முன்னே தங்களுடைய ஸம்பிரதாயத்தில் ஆருயிரப்படி குருபரம்பராப்ர பாவமென்றும் மூவாயிரப்படி குருபரம்பராப்ரபாவமென்றும் இரண்டு க்ரந்தங்கள் ஆழ்வாராசாரியர்களின் சரித்திரங்களைத் தெரிவிப்பதற்குத் தோன்றியவையென்று சொல்லி, அவற்றுள் ஆருயிரப்படிகுருபரம்பரையென்பது முன்னமே லுப்தமாய் விட்டதென்றும், மூவாயிரப்படி குருபரம்பரை அச்சிடப்பெற்று இருப்பதாகவும் அதுவே தாங்கள் சொல்லும் கதைகளுக்கு ஆதார மென்பதாகவும் சில யதா ஜாதர்களிடம் சொல்லி அவர்களை வஞ்சித்துக்கொண்டிருந்தார்கள். அதைப் பற்றியும் அடியேன் ஆழ்ந்து ஆராய்ச்சிசெய்து "அந்த மூவாயிரப்படி நவீநகல் பிதமே" யென்று இவர்கள் தாங்களே 1893-ஆம் வருஷத்தில் (அதாவது) அடி யேனுடைய ஒன்றிரண்டு வயதில் வெளியிட்டிருந்த சில புத்தகங்களையும் பத்ரிகை களையும் ஸம்பாதித்து எடுத்துக்காட்டி மறுவாய் திறக்கவொண்ணுதபடி செய்ய நேர்ந்தது. இதைச் சிறிது விவரிக்க அவசியமாகின்றது. மிகமுக்கிய விஷயமிது.

ஸ்ரீபெரும்பூதூரில் ஸ்வாமியுத்ஸவத்தில் ஆருந்திருநாள் வெள்ளைசாத்துப்படி யுத்ஸவம் என்று கொண்டாடப்பட்டுவருகிறது. "சிவாத் பரதரம் நாஸ்தி" என்றெழுதி அதில் எழுத்திட நிர்ப்பந்தித்த சோழனுடைய கொடுங்கோன்மையினல் கூரத்தாழ் வான் த்ரிதண்ட காஷாயங்களை யணிந்து ராஜஸபைக்கு எழுந்தருளினதாகவும், ஸ்வாமியெம்பெருமானர் வெள்ளைசாத்திக்கொண்டு வெளியேறினதாகவும் சொல்லப் படுகிற ஐதிஹ்யத்தையநுஸரித்து மேலே சொன்ன மஹோத்ஸவம் நடந்து வருகிறது. காஞ்சீபுரம் தாதாசாரியர்கள் ஸ்ரீபெரும்பூதூர்ஸன்னிதியில் சிறந்த மரியாதைகளையநுபவித்துக்கொண்டிருந்த காலத்தில் அவர்களில் தலைவராயிருந்த ஸ்ரீமத் திருப்புட்குழி அப்பாஸ்வாமி, தண்ட்ரி பட்டப்பாதாதா சாரியர்ஸ்வாமி முத லான மஹான்கள் "இது சாஸ்த்ரவிருத்தமான நடத்தை; கூரத்தாழ்வான் த்ரிதண்டகாஷாயங்களை யணிந்ததும் கிடையாது, பாஷ்யகாரர் வெள்ளைசாத்திக் கொண்டதும் கிடையாது; இது மிகவும் தவருன—நவீநகல்பிதமான ஐதிஹ்யம்; தென்கலையார்கள் விதததிஹ்யஸஹஸ்ரவர்ணநத்திலே வல்லவர்களாகையாலே அவர்கள் கட்டினதே இந்த ஐதிஹ்யம்; இது புஸ்தகத்தோடு நில்லாமல் ஸன்னிதி

யிலும் அநுஷ்டானத்தில் வருகிறதென்றால் இது நமக்கு ஸஹ்யமேயன்று; இப்படி அசாஸ்த்ரீயமாக நடத்தப்படுகிற இந்த வெள்ளைசாத்துப்படியுத்ஸவத்தன்று வடகலையார் ஒருவரும் ஸ்வாமிதர்சநமே செய்யக்கூடாது; விசேஷித்து தாதாசார்ய வம்சஸ்தர்கள் அன்று முழுவதும் ஸ்ரீபாஷ்யகாரர் ஸன்னிதியில் ஒரு மர்யாதைக்கும் போகாமல் உபவாஸமுமிருக்கவேண்டியது" என்று திட்டம் செய்தார்களாம்: இப்படிக்கு பத்ரிகையும் அச்சிட்டிருந்தார்கள். அப்போது, அந்த வெள்ளைசாத்துப்படி ஐதிஹ்யம் மிகவும் தப்பானது என்று வாக்வாத யுத்தங்களும் க்ரந்தச்சண்டைகளும் விசேஷமாக நடந்தனவாம். "வடகலையார் மூவாயிரப்படி குருபரம்பரையென்று ஒன்று அச்சிட்டிருக்கிறார்களே, அதிலுங்கூட இந்த ஐதிஹ்யமிருப்பதால் இது கல்பிதமன்று' என்று தென்கலையார்கள் வாசிகமாகவும் க்ரந்த மூலமாகவும் வாதித்தார்களாம். அப்போது ஸ்ரீமத் திருப்புட்குழியப்பாஸ்வாமியின் நியமனத்தினால் மஹாவித்வத்வரேண்யரான தண்ட்ரி பட்டப்பாஸ்வாமி "ஐதிஹ்யதத்த்வம்" என்றொரு சுவடியையெழுதி வெளியிட்டதில் மேலேசொன்ன மூவாயிரப்படி குருபரம்பரை "இதாநீந்தந கல்பிதமாகையாலே அப்ராமாணிகம்" என்று முடிக்கப் பட்டிருக்கிறது.

அவ்வளவோடும் நில்லாமல், மேலே சொன்ன சாமாதிருமலைதாதாசாரியர் எழுதிய "ஸதாசார்யப்படிரக்ஷை" என்கிற தென்னாசார்ய தூஷணச் சுவடியிலும் மேலே சொன்ன விஷயமெல்லாம் மிகவிரிவாக எழுதப்பட்டு அந்த மூவாயிரப்படி குருபரம்பரை நவீநகல்பிதமென்று கல்வெட்டாக்கப்பட்டிருக்கிறது.

> "பாஷ்யகாரர் திருக்கோட்டியூர்நம்பியிடம் கேட்ட ரஹஸ்யார்த்தத்தை அங்கேயே கோபுரத்தின்மேலேறிப் பல பேர்களுக்கு வர்ஷித்தாரென்று தென்கலையார் எழுதிவைத்திருக்கிற ஐதிஹ்யமும் அசாஸ்த்ரீயம்; *பத்ரே க்ஷிநோ வா வ்யர்த்தஸ் ஸ்யாத் யத்ருச்சா ச்ருத ஏவ வா* என்கிற ப்ரமாணம் ஸர்வஜ்ஞரான பாஷ்யகாரருக்குத் தெரியாததன்றே. தெரிந்திருந்து ஒருகாலும் அப்படி அபாத்ரங்களிலே வர்ஷித்திருக்கமாட்டார். அப்படி வர்ஷித்ததாகச் சொல்லப்படுமைதிஹ்யம் விததைதிஹ்ய ஸஹஸ்ரத்தில் சேர்ந்ததே" என்று எழுதிவிட்டு,

> "இது வடகலையாருடைய மூவாயிரப்படி குருபரம்பரையிலுமிருக்கிறதே யென்று சிலர் எடுத்துக்காட்டுகிறார்கள்; அதனால் ஒரு லாபமுமில்லை. அந்த மூவாயிரப்படி தென்கலையாரெழுதி வைத்த குருபரம்பரையைப் பார்த்து ஆவாபோத்வாபங்கள் பண்ணிக் கல்பித்ததாகையாலே அதுவும் தள்ளத்தகுந்ததே. இதுமாத்திரமன்று; ஆழ்வார்களுடைய வைபவங்களிலும் அநேகம் அசாஸ்த்ரீயமான விஷயங்கள் தென்கலையாருடைய புத்தகங்களைப் பார்த்தே எழுதியிருப்பதால் அந்த மூவாயிரப்படி ப்ராமாணிக கோஷ்டியில் பரிக்ராஹ்யமன்று"

என்று எழுதி அச்சிட்டுப் பரவச்செய்திருந்தார்கள். அது தெய்வச்செயல்.

மேலே சொன்ன மூவாயிரப்படியில் மைஸூர் பரகால மடாதிபதி ஸ்வாமிகளின் பதிப்பிலும், மேலே விவரித்தபடி ஸ்ரீமத் திருப்புட்குழி அப்பாஸ்வாமி முதலான மஹான்களால் தப்பான ஐதிஹ்யமென்று தூஷிக்கப்பட்ட கதைகள் [பல பதிப்புகளிலும் ஏறி] விளங்கிக்கொண்டிருக்கின்றன. அதில் பக்கம் 88-ல் எம்பெருமானார் வைபவப்ரகரணத்தில்"

> "பின்பு கூரத்தாழ்வான் நடாதூராழ்வான் முதலான முதலிகளோடே உடையவர் காலக்ஷேபம் செய்து கொண்டிருக்கிற காலத்தில் சோளராஜாவும் வித்வான்களை யழைத்து *சிவாத் பரதரம் நாஸ்தியென்று எழுதச் சொல்லி தண்டிக்க, சிலர் அர்த்தகாமங்களடியாக எழுத்திட்டார்

கள்; சிலர் அவனுக்கஞ்சி எழுத்திட்டார்கள். இத்தை நாலூரான் கண்டு எம்பெருமானார் எழுத்திட்டாலன்றோ ப்ரயோஜநமுண்டாவது, இவர்க ளெழுத்திட்டால் என்ன ப்ரயோஜநம்? என்ன, சோளனும் எம்பெருமா னரை யழைத்துக் கொண்டு வரும்படி சில மநுஷ்யரை அனுப்பிவிக்க, அவர்களும் அங்கேற அழைக்கப்போக, அந்த வ்ருத்தாந்தத்தை மாத் யாஹ்நிகஸ்நாநார்த்தமாகப் போகும்போது கேட்டு முதலியாண்டான் நீராடிவர, நடாதூராழ்வான் முன்னமே அந்த வ்ருத்தாந்தத்தை வந்து சொல்லக்கேட்டு நீரன்றோ ப்ரியபாகிநேயரென்று போரவுகந்து கூரத் தாழ்வான் உடையவருடைய த்ரிதண்ட காஷாயாதிகளை தரித்துக் கொண்டு அந்த மநுஷ்யரோடே போக, பெரியநம்பியும் கூட வெழுந் தருளினர். பின்பு நடாதூராழ்வான் முதலியாண்டான் திருக்குருகைப் பிரான் பிள்ளான் முதலானவர்கள் 'தேவரீர் இங்கிருக்க வொண்ணாது' என்று உடையவருக்கு வெள்ளைசாத்தி மேல்நாட்டுக்கெழுந்தருளப் பண்ணிக் கொண்டு போக" என்றிருக்கின்றது.

இவ்வளவோடும் நிற்கவில்லை. உடையவர் வெகுநாள்வரையில் வெள்ளை சாத்திக் கொண்டே யிருந்ததாகவும் பிறகு த்ரிதண்ட காஷாயாதிகளை ஸம்பாதித்து முன்பு போலே தரித்தருளினதாகவும் அதிலே (பக்கம் 89-ல்) எழுதப்பட்டிருக்கிறது.

அதிலேயே (பக்கம் 74-ல்)—திருக்கோட்டியூர் வ்ருத்தாந்தம்—

"உடையவரும் கூரத்தாழ்வானையும் நடாதூராழ்வானையும் முதலியாண் டானையும் கூட்டிக் கொண்டு திருக்கோட்டியூரில் சென்று அவர்களை ஓரிடத்தில் வைத்துத் தாமொருவருமே சென்று நம்பிதிருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்து நிற்க, நம்பியும் 'இவ்வர்த்தத்தை ஒருவருக்கும் சொல்லவேண்டா' வென்று நியமித்தருளி திருமந்த்ரார்த்தத்தையும் சரம ச்லோகார்த்தத்தையும் பரக்க ப்ரஸாதித்தருள, உடையவரும் க்ருதார்த்த ராய் அன்று மற்றநாள் தெற்காழ்வான் திருவோலக்கத்தில் அந்த ரஹஸ்யார்த்தத்தை எல்லாருக்கும் ப்ரஸாதித்தருள" என்றிருக்கிறது.

ஆரியர்காள்! நவீநர்களது கோஷ்டியில் ஆசார்யகம் செய்கிற சிஷ்டவரிஷ் டர்கள் இப்படிப்பட்ட சரித்திரங்களை "சாஸ்த்ரவிருத்தவாதிகளான தென்கலையார் கல்பித்த தப்பான ஐதிஹ்யங்க" ளென்று இற்றைக்கும் தூஷித்து வருகிறார்கள். 'நம்முடைய ஸம்பிரதாயத்திற்கும் ஒரு குருபரம்பராப்ரபாவ மிருக்கவேணும்' என்று நினைத்த நவீநர்கள் தென்னசார்ய ஸம்பிரதாயத்திலுள்ள வைபவக்ரந்தங் களையே தஞ்சமாகப் பற்றவேண்டி வந்தபடியாலே அவற்றையே யெடுத்துக் கொண்டு சிலவற்றைத் தள்ளியும் சிலவற்றைச் சேர்த்தும் அதிக்ராம்யமான வார்த் தைகளை விசேஷமாகப் புகவிட்டும் மூவாயிரப்படி குருபரம்பராப்ரபாவமென்று ஒன்று வரைந்து இதை த்ருதீய ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமி தலையிலே வைத்து அச்சிட்டு விட்டார்கள். இப்படி கல்பநை செய்து அச்சிட்டவர் மைஸூர் ஸ்ரீபர கால ஸ்வாமியிடம் வந்து "இந்த வைபவக்ரந்தம் உங்கள் கூடஸ்தர் செய்ததாச்சே; இதை உங்கள் மடத்திலிருந்தும் வெளியிட வேண்டாமா?" என்று சொல்ல, இத னுள் என்ன விஷயமிருக்கிறது? என்பதைக்கூட விமர்சியாமலே 'இதற்காக ஆயிரம் ரூபாய்' என்று அநுக்ரஹித்து அபத்தகளிஞ்சமாக அச்சிடச்செய்து உலகமெங்கும் பரவவிட்டாயிற்று. இப்படி 70, 80 வருஷங்களுக்கு மேலாக நடந்து வருகிறது. அதுதானும் ஒரு பதிப்போடு நில்லாமல், இரண்டாம் பதிப்பு, மூன்றாம் பதிப்பு என்று அவ்வப்போதுகளில் மறுபதிப்பேறியும் வருகின்றது. அதுகிடக்க. இந்த மூவாயிரப்படி குருபரம்பரையொன்றுதான் இவர்கள் கூறிவரும் பொய்க் கதைகளுக்கு மூலகந்தம். அப்புத்தகம் இவர்களது கோஷ்டியில் தலைவர்களா

யிருந்த மஹான்களாலே நவீநகல்பிதமென்றும் அதஏவ அப்ராமாணிகமென்றும்
சிலாசாஸனம் செய்யப்பட்டான பின்பு இவர்கள் தாங்கள் சொல்லும் கதை
களுக்கு எந்த க்ரந்தத்தையும் பிரமாணமாக வெடுத்துக்காட்ட முடியாமற்
போயிற்று. ஆசார்யசம்புவோ இவர்களுக்கு விஷமாய் விட்டது. மூவாயிரப்படி
குருபரம்பரையென்று சொல்லிக் கொண்டு வந்தார்கள். அதன் சாயத்தை இவர்
களுடைய வெளியீடுகளைக் கொண்டே நாம் கக்கவைத்தபடியால் வாயைக் கையைத்
திறக்க முடியாமல் போயிற்று. அப்போது அந்த வகுப்பினர்க்கு அடியேன்மீது
பிரபலமான க்ஷாத்ரமுண்டாகத் தொடங்கியது. "மூலையிலே கிடந்தவற்றை
முற்றத்திலே கொண்டு விட்டு விஷயங்களை நோண்டியெடுத்து நம்மை வாய் மூடு
விக்க இவனொருவன் தோன்றினனே!" என்று கடுநெஞ்சு கொண்டார்கள்.
"இவன் வெள்ளக்குளம் போகும்போது ஆள்களையிட்டு கையைக் காலை முறித்து
விட வேண்டியது" என்று ஆலோசனை செய்திருக்கிறார்களென்றும் அப்போது
காதில் விழுந்தது. அதனால் பின்மாலையில் குளம் போவதை நிறுத்திப் பொழுது
விடிந்த பிறகு பலருடன் சேர்ந்து குளம்போய் வருவதென்றும் சிலகாலம் வைத்
துக் கொண்டிருந்தேன். இச்செய்திகள் அடியேனுடைய பதினெட்டாவது வயதில்
நிகழ்ந்தவை. அப்போது நான் சில காரியங்களுக்காக மேலேசொன்ன சாமா
திருமலைதாதாசாரியரிடம் நெருங்கிப் பழகிக் கொண்டிருந்தவன். அதனாலேயே
இந்த வாத விவாதங்களில் தலையிட்டு நிர்தாக்ஷிண்யமாகவே மறுப்பெழுதினேன்.

மேலே விவரித்தபடி நவீநர்களின் க்ருத்ரிமச் செயல்களையெல்லாம் கையி
லங்கு நெல்லிக்கனிபோல் எடுத்துக்காட்டி வடமொழியிலும் தென்மொழியிலும்
சில நூல்களை இயற்றி அப்போது அடியேன் வெளியிட்டவற்றில் ஒன்றுக்கா
வது ஒருவரும் பதில் சொன்னதுமில்லை, எழுதினதுமில்லை. அப்போது ஸ்ரீமத்
வில்லியம்பாக்கம் கோபாலதாதாசார்ய ஸ்வாமியென்கிற மஹான் ஸ்ரீரங்கராஜ
வீதியில் வாழ்ந்து கொண்டு ஆசார்யகம் செய்து கொண்டிருந்தார். இந்த ஸ்வாமி
சமதமாதிஸத்குணநிதி. வம்பு தும்பு விஷயங்களில் அடியோடு தலையிட்டவரல்லர்.
ஏகாந்த சீலர். ஸ்ரீமத் திருப்புட்குழி ஸ்வாமி ஸன்னிதியில் காலக்ஷேபம் செய்தரு
ளினவரென்று கேள்வி. சிறந்த வித்யாநிதி. அக்காலத்தில் பலர்க்குப் புகலா
யிருந்தவர் இந்த ஸ்வாமி. இவருடைய திவ்யமங்கள விக்ரஹஸ்மரணமும் பரம
பாவநமென்பது அடியேனுடைய கொள்கை. அடியேனுடைய இருபத்தைந்தாவது
வயதில்தான் அந்த ஸ்வாமி திருநாடலங்கரித்தருளினர். அந்த ஸ்வாமி தினப்படி
யாக ஸன்னிதிக்கெழுந்தருள்வது தவறமாட்டார், புறப்பாடுகளையும் ஒரு க்ஷண
காலமும் இழக்கமாட்டார். பலவாண்டுகள் அந்த ஸ்வாமியை அடியேன் தினப்படி
யாக ஸேவிக்கப் பெற்றவனாயினும், அவருடைய கடாக்ஷமும் அடியேன்மீது
விசேஷித்து விழுந்து கொண்டிருக்குமானாலும் நீசனானவடியேன் அந்த மஹா
ஸ்வாமியிடம் நெருங்குவதற்கு ப்ரஸக்தியில்லாமலிருந்தது. அய்யா. ரகுநாததாதா
சாரியர் ஸ்வாமியென்பவர் பலவாண்டு தேவப்பெருமாள் ஸன்னிதிக்கு தர்மகர்த்
தாவாக இருந்தவர். பகவத் விஷயாதிகாரி. சிறந்தவிவேகி. ஸ்ரீமத் காதிஸ்வாமி
ஸன்னிதிக்கு அடிக்கடி வருபவராதலால் என்னிடத்தில் அவர்க்கு ஸஹ்ருதயமான
ப்ரீதி உண்டாயிருந்தது. அப்போது அடியேனெழுதி வெளியிட்டிருந்த பாதுகா
ஸஹஸ்ராவதாராதி விஷயகங்களான வாதக்ரந்தங்களை அந்த ஸ்வாமி ஊன்றிக்
கடாக்ஷித்து, மற்றபேர்களைப்போலே மனக்கலக்கம் கொள்ளவேண்டியிருந்தும்
அது சிறிதுங்கொள்ளாமல் உண்மையான விஷயங்களை ஸப்ரமாணமாக நிரூபணம்
செய்து பிரதிவாதம் பண்ணுவதற்கு எள்ளளவும் அவகாசமில்லாதபடி நான் செய்து
வைத்திருந்த வைகரியில் மிகவுமீடுபட்டுப் பலருடைய முன்னிலையில் அதிமாத்ரம்
கொண்டாடினதுமல்லாமல், தேவப்பெருமாளுடைய ஒருபுறப்பாட்டில் (மேலே
சொன்ன) ஸ்ரீமத். வில்லியம்பாக்கம் ஸ்வாமியோடு தாம் வார்த்தையாடிக் கொண்

டிருக்கையில் சிறிது தூரத்திலிருந்த அடியேனை அருகே வரவழைத்து "உம்முடைய க்ரந்தத்தை ஸ்வாமி ஸன்னிதியிலே காண்பித்தீரா?" என்று கேட்டு விட்டு, அந்த ஸ்வாமியிடத்தில் இதைப்பற்றி வெகுகாலம் ஆனந்தம் பொங்கிவழியப் பேசினர். அப்போது திருமுற்றவெளியில் அவர் அந்த ஸ்வாமியிடம் சொன்ன வார்த்தைகளின் ஸங்க்ரஹம் வருமாறு:—"ஸமீபகாலத்தில் இவர் ஒரு க்ரந்தமெழுதியிருக்கிறார்; அது ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலுமிருக்கிறது. அதை ஸ்வாமி அவசியம் கடாக்ஷிக்க வேணும்; நமக்கெல்லாம் அது கண்டனமாகத் தானிருக்கும்; இருந்தாலும் தனக்கு விவக்ஷிதமான விஷயங்களை ராஜபாட்டையிலே சென்று விசதீகரித்திருக்குமழகு ஸ்வாமி நேரில் கடாக்ஷித்தால் மிகவும் ரஸிக்கக்கூடியதாகும். அதை எத்தனை தடவை வாசித்தாலும் எனக்கு த்ருப்தியே உண்டாகவில்லை. நம்ம திருமலை தாதத்தின்மேல் கண்டனமாக எழுதியிருக்கிறார்; திருமலை தாதத்தையே நான் கேட்டேன் "அண்ணா எழுதியிருப்பது உனக்குக் கிடைத்ததா? பார்த்தையா? அதற்கு பதில் வெளிவருமா?" என்று கேட்டேன்; அவனும் இதைக் கொண்டாடியே பதில் கூறினன்; ஸ்வாமி இதை அவசியம் கடாக்ஷிக்க வேணும்—என்று பலவும் கூறினர். இப்படிப்பட்ட விஷயங்களில் ருசியில்லாதவரான அந்த வில்லியம்பாக்கம் ஸ்வாமியும் இதைக் கடாக்ஷிக்க விரும்பி வரவழைத்துக் கடாக்ஷித்தருளி மிகவுமுகந்தார். அதிலிருந்து அந்த ஸ்வாமியோடும் அடியேனுக்கு நெருங்கின பழக்க மேற்பட்டது. அதற்காகச் சிலர் அந்த ஸ்வாமியை வெறுத்தவர்களுமுண்டு. மஹான்கள் அதையெல்லாம் கணிசிக்கமாட்டார்களன்றோ.



ஸ்ரீமதுபயவே. வில்லியம்பாக்கம்
கோபாலதாதாசார்ய ஸ்வாமி, ஸ்ரீகாஞ்சீ.
(வைகுண்டவாஸி)

அந்த ஸ்வாமிகள் யாவரும் பரமபதித்துப் பல காலமாய்விட்ட படியாலே இதெல்லாம் அடியேன் கல்பனையாக எழுதுவதென்று சிலர் பேசிக் கொள்ளவுங் கூடும். அன்னவர்கள் தெளியும்படியாக, இற்றைக்கும் ஜீவித்திருக்கின்ற பல மஹான்கள் ஒருவருடைய வேண்டுகோளுக்காகவன்றிக்கே தாமாக மனங்கனிந்து எழுதியுள்ளவை பல வுண்டென்று காட்ட வேண்டியது அவசியமாகிறது. சிலவற்றையே காட்டுகின்றேன் ;—ஸ்ரீ ரங்கம் பெரியாச்ரமமென்கிற ஆண்டவனச்ரமத்தில் ஸ்ரீமத் ஆக்கூராண்டவனுக்குப் பிறகு ஆஸ்தானத்தை அலங்கரித்தருளாநின்ற வர்த்தமாந ஆண்டவன் ஸ்வாமியோடு அடியேனுக்குப் பரிசயமின்றிக்கே நேரில் ஸேவிக்கப் பெற்றதுமின்றிக்கே பத்ரவ்யவஹாரப்ரஸக்தியுமின்றிக்கே யிருந்தது. இப்படியிருக்கையில் 1951 ௵ முடிவில் அந்த ஸ்வாமி ஸன்னிதியிலிருந்து அசிந்திதமாக வொரு ஸ்ரீமுகம் கிடைத்தது.



வர்த்தமாநபீடாதிபதி ஆண்டவன்
பெரியாச்ரமம், ஸ்ரீ ரங்கம்.

அதிலுள்ள விஷயம்—

"தேவரீருடைய க்ரந்தங்களையும் வாக்விலஸிதங்களையும் ஸ்ரீ ஸ்வாமி கடாக்ஷித்தும் கேட்டும் மிகவுமுகந்தருளும்படியாச்சுது. தேவரீருடைய க்ரந்தங்களையெல்லாம் கடாக்ஷிக்கமிகுந்த குதூஹலமுண்டாகி யிருக்கிறது. அப்போதைப்போது அனுப்பிக் கொண்டிருக்கும்படியாக நியமனம்." என்று

ஸ்ரீ கார்யதுரந்தரர் எழுதியிருந்தார். அந்த நியமனத்தை சிரஸாவஹித்து ஸ்ரீ ஸ்வாமியின் ருசியையுணர்ந்து பத்தெட்டு க்ரந்தங்களை மட்டும் அனுப்பியிருந்தேன். வாதக்ரந்தங்களைக் கடாக்ஷிக்கவே ஆண்டவனுக்குத் திருவுள்ளமென்று தெரிந்து கொண்டு அவையும் சில அனுப்பியிருந்தேன். அவற்றையெல்லாம் கடாக்ஷித்தருளி அடுத்த வாரத்திலேயே அநுக்ரஹித்தருளின ஸ்ரீமுகம் அப்போதே பத்ரிகைகளிலும் சில நூல்களிலும் பிரசுரமாகி யுள்ளது. அந்த ஸ்ரீமுகம்—

"श्रीजगदाचार्यसिंहासनाधिपतीत्यादिविरुदालंकृतानां प्रतिवादिमत्तगजभयङ्करकण्ठीरवाणां श्रीमताम् अण्णङ्गराचार्याणाम्.........वादप्रतिवादग्रन्थजालमधिगतम्। श्रीमदाचार्यवर्याणां कटाक्षपात्रं चाभवत्। सर्वम् आनुपूर्व्या कटाक्षितवन्तो महागुरुवरास्ते अमन्दानन्दतुन्दिलस्वान्तास्सन्त एवं प्रशशंसुः—बहुसुतर्कसच्छास्त्रानुसारिप्रमाणपुञ्जमञ्जून् सहृदयरसिकसुहृद्रञ्जकनिरतिशयाश्चर्यशैलीप्रगुम्भितवचनमणिमालालंकृतान् दर्शनावसरेषु नवंनवम् अत्युत्साहजनकान् विविधविचित्रविषयवर्गान् दर्शंदर्शं निरवधिकतुष्टिम् अलभन्त। किञ्च एवमेव युष्माकं शेषमायुरपि नित्यनिरवद्यकैङ्कर्योपयुक्तदेहारोग्यधनधान्यसमृद्धिशालि भूयादिति श्रीरङ्गनायिकासमेतं श्रीरङ्गनाथपरब्रह्म पुनः पुनः प्रार्थये-इति"।

என்பது அந்த ஸ்ரீமுகத்தின் பிரதிபிம்பம். இந்த ஸம்ஸ்க்ருத வாக்யங்களின் கருத்துச் சுருக்கம்—தேவரீரெழுதியுள்ள வாத க்ரந்தங்களெல்லாம் சாஸ்த்ர ப்ரமாண உபபத்திகள் மலிந்தவையென்றும், எத்தனை தடவை வாசித்தாலும் ஆராவமுதமாய் விளங்குகின்றனவென்றும், ஸகல ரஸிக பண்டிதர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றனவென்றும் ஆண்டவன் ஆனந்தம் பொங்கி ஸாதித்ததாகவும், இப்படியே இன்னமும் அநேக க்ரந்தங்கள் அவதரித்துக் கொண்டிருக்க ஸகலவித ஸௌகரியங்களும் விளைய திவ்யதம்பதிகளை ப்ரார்த்தித்துக் கொண்டிருப்பதாகவும் ஆண்டவன் ஸ்ரீமுகத்திலுள்ளது. நம்முடைய க்ரந்தங்களுக்கு ஒரு மதிப்புரை தந்தருள வேணுமென்று நாம் அபேக்ஷித்ததில்லை, எதிர்பார்த்ததுமில்லை. "துர்விஜ்ஞாநஸ்வஹ்ருதயமஹோ தைவமத்ர ப்ரமாணம்" என்று (பாதுகாஸஹஸ்ரே) தேசிகனருளிச் செய்தபடி எம்பெருமானுடைய திவ்யஸங்கல்பமேயடியாகத் தோன்றிய ஸ்ரீமுகமன்றோவிது. "யதார்ஹம் கேசவே வ்ருத்திம் அவசா: ப்ரதிபேதிரே" என்ற கணக்கில் இங்ஙனே பல பெரியார்கள் அபிநந்தனம் செய்ய ப்ராப்தமாகியிருக்கிறது ஆண்டவன் இப்படி ஸ்ரீமுகமருளினதற்காக மாத்ஸர்ய சாலிகள் சிலர் அந்த ஸ்வாமியைப் பர்யநுயோகம் செய்ததாகவும் "உங்களைப் போலே அந்தரங்கஸாக்ஷ்யத்தை வஞ்சிக்க வேண்டிய ஆவச்யகதை எனக்கில்லை" என்று ஆண்டவன் அருளிச் செய்ததாகவும் பிறகு கேள்விப்பட்டதுமுண்டு.

இந்த வாத விவாதங்களில் தலையிடாதவரான ஆண்டவன் ஸ்வாமி போல்வார் அபிநந்தநம் செய்வது வியப்பன்று; இந்த விவாதங்களில் தலையிட்டுக் கொண்டேயிருப்பவர்களுமன்றோ ஆத்மவஞ்சனம் செய்ய முடியாமல் உண்மையையெழுதி வைக்கிறார்கள். அதையும் சிறிது காட்டுவோம். நவீனர்கள் எங்தெந்த விஷயங்களை நூதனமாகக் கல்பனை செய்தெழுதி 1910ஆம்ஷு முதற்கொண்டே அடியேனுடைய பதிலுரைகளைச் சரமாரியாகப் பெற்று மறுவாய் திறக்க முடியாமல் மறைந்து போனார்களோ, அந்த விஷயங்களுக்கு இன்னமும் உயிரிருப்பதாக வைத்து அந்த அபத்த அஸம்பத்த விஷயங்களையே அடிக்கடி புதுப்பித்துக் கொண்டு இதுவே ஒரு போதுபோக்காக இருப்பவர்கள் இக்காலத்திலும் சிலருண்டே; நம்முடைய நூல்களையெல்லாம் வாசித்துக் கொண்டிருப்பார்க்கு அந்த நபர்கள் இன்னாரென்பது நன்றாகத் தெரியுமாதலாலும், மேலே ப்ரகரண விசேஷங்களில் விளக்க நேருமாதலாலும் இங்கு விவரிக்கின்றிலோம். அந்த நபர்கள் நம்முடைய பதிலுரைகளையும் பெற்று சீற்றத்தோடு நிற்கச் செய்தேயும், ப்ராப்தமாம் ஸமய விசேஷங்களில் ஆத்ம வஞ்சனையில்லாமல் எழுத வேண்டியவற்றை எழுதி ப்ரசுரம் செய்து போருவர்கள். அத்தகைய ப்ரசுரங்களில் இங்கு ஒன்றெடுத்துக் காட்டுகிறேன்.

## '' ஸ்ரீவைஷ்ணவமே வடிவெடுத்தவர்

ஓர் உண்மை ஸ்ரீவைஷ்ணவன் மூன்றுவித நோக்கங்களுடன் உயிர் வாழ்கிறன். ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தையும் கொள்கைகளையும் பிறருக்குப் போதிப்பதும் தேசமெங்கும் பிரசாரம் செய்வதும் முதலாவதாகும். பின்புள்ளார் கற்றறிந்து ஆசரிக்கைக்காக அச்சித்தாந்தத்தின் உயர்ந்த கொள்கைகளையும் உன்னத நோக்கங்களையும் கிரந்த ரூபமாக எழுதி வெளியிட்டு பிரசுரம் செய்வது இரண்டாவதாகும். கடைசியாக, ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பட்டு ஆங்காங்கு அர்ச்சாரூபியாய்த் திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களின் வடிவழகில் ஈடுபட்டுப் பணிசெய்தல். இம்மூன்றுவகை வைஷ்ணவ நோக்கங்களுக்காக முறையே பாடுபட்டுப் பெரிதாக வெற்றியடைந்தவர் உளரேல் அவர் ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி ஒருவரே யாவர். இவருடைய ஷஷ்டியப்தபூர்த்தி இம்மாதம் எல்லா வைஷ்ணவர்களாலும் தேசமெங்கும் கொண்டாடப்படுகிறது. ஸம்ஸ்கிருதம் தமிழ் ஆகிய உபயவேதாந்தத்திலும் இந்த ஸ்வாமிக்கிருக்கும் அபாரஞானம், ஆச்சரியமான உபன்யாஸ சக்தி இவைகளைப்பற்றிய கீர்த்தி தேசமெங்கும் பரவியிருப்பதால் நான் அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. பரதகண்டத்தில் முக்கியமாக சென்னை மாகாணத்தில், அதனிலும் முக்கியமாக மதராஸில் ஸ்ரீவைஷ்ணவத்திற்காக இவர் செய்திருக்கும் பணிகள் சமீப காலங்களில் இணையற்றதாகும். ஸ்ரீவைஷ்ணவக்கொடியை இவர் ஹிமாலயம் முதல் கன்னியாகுமரி வரையில் வெற்றிகரமாக நாட்டியிருக்கிறர். இவர் எங்குச் சென்றாலும் அங்கு மத சம்பந்தமான நடவடிக்கைகளில் சூழப்பட்டு ஓர் பிரகாசமான நக்ஷத்திரம் போல் விளங்குகிறர். இவருடைய சொந்த நகரமான காஞ்சீபுரியில் ஓர் பாடசாலையையும் க்ரந்த ப்ரசுராலயத்தையும் ஸ்தாபித்திருக்கிறர். இவருடைய பாடசாலையிலிருந்து வெளியேறும் வித்யார்த்திகளும் ப்ரசுராலயத்திலிருந்து வெளியாகும் க்ரந்தங்களுமே மத விஷயத்தில் இவர்க்கிருக்கும் ஆர்வத்துக்கும், நிர்மாண திறமைக்கும், விடாமுயற்சிக்கும் சிறந்த அத்தாட்சிகள். இன்றைக்கும் ஒரு நாளைக்குப் பதினறு மணிக்குமேல், சிறிதும் குன்றாத வீர்யத்துடன், ஸ்ரீவைஷ்ணவத்துக்கே பாடுபடும் நபர் ஸ்வாமியைத் தவிர வேறு கிடையாது. கம்பீரமான வங்கலகண்டத்வனியுடன் மணிக்கணக்காக கேட்போர் மனங்களை வசீகரித்து அப்படியே ஸ்தம்பிக்கச் செய்யும் சக்தியே எம்பெருமான் இவருக்களித்திருக்கும் குணாதிசயங்களில் முதன்மையாகும். சொல்லப்படும் விஷயங்களிலும் எடுத்துரைக்கும் ரீதிகளிலும் இவரையே மற்றவர் தற்காலத்தில் பின்பற்றுகின்றனர். தெலுங்கு பாஷையில் இவருக்கிருக்கும் புலமை தெலுங்கு நாடுகளிலும் உபயவேதாந்தத்தின் உண்மைகளை இவரால் பரவச்செய்து விட்டது. அந்தந்த காலத்தில் க்ரந்தங்களை எழுதி ப்ரசுரிப்பதிலேயோ—இவை இப்போது நூற்றுக்கணக்காகவே யிருக்க வேண்டும்—எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் அந்த விஷயத்தில் இவர் காட்டும் ஞானத்திலேயோ இவரை வெல்பவர் கிடையாது. இவர் கையாண்ட விஷயங்களோ அனேகம்; இவை பல துறைகளிலுள்ளவை என்பதையும் இங்கு ஞாபகப்படுத்துகிறேன். வாதப் போர் நடத்துவதில் ஸ்வாமிக்கு வெகு உற்சாகம். இதனால் ஸ்வாமியாலும் ஸ்வாமி விஷயமாகவும் அனேக ரஸமில்லாத கிரந்தங்கள் உற்பத்தியாகியிருக்கின்றன வென்றாலும் இவற்றுக்கெல்லாம் காரணம் ஸ்வாமியின் அதிசக்தி வாய்ந்த குணாதிசயமென்றே சொல்ல வேண்டும். இவ்வளவு சக்தி வாய்ந்த ஒரு மஹாபுருஷர் விஷயத்தில் அஸூயையையும் பொறாமையையும் எத்திக்கிலிருந்தும் எதிர்பார்க்கலாம். ஆனால், எவ்வித வாதப்போரிலும் ஸ்வாமி பின்வாங்கவே மாட்டார், இவருடைய வாதமே கடைசியாக ஓங்கி நிற்கும். இந்த ரீதியில்

அனேகம் உள்ளன. விஷயங்களைத் தேங்காய் உடைப்பதுபோல், வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று உடைத்துக் காட்டுவர்! இவை ஒரு பக்கம் கிடக்கட்டும். ஸ்ரீவைஷ்ணவத்திற்காக இவர் செய்திருக்கும் செய்துகொண்டிருக்கும் பணி கணக்கிட முடியாதது. நம் தேசமெங்கும் ஆயிரக்கணக்கிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் இவருக்கு மேன்மேலும் வணங்கிக்கொண்டும் நன்றி செலுத்திக்கொண்டுமிருக்கின்றனர். இவர்கள் எல்லாருடைய பிரார்த்தனைகளும், ஸ்வாமியின் ஷஷ்டியப்த பூர்த்தி நடக்கும் இத்தருவாயில், இவர் பல்லாண்டு பல்லாண்டாக குன்றாத ஆரோக்யத்துடன் ஸ்ரீவைஷ்ணவத்திற்கு தொண்டாற்ற வேண்டுமென்று எம்பெருமானிடம் பிரார்த்தனைகள் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன."

அன்பர்களே! மேலே குறித்த வியாஸம் இன்னாருடையதென்பது நாடு நகரமும் நன்கறிந்ததேயாதலால் அவர்பெயரை நாம் குறிப்பிட விரும்பவில்லை. பெரியாழ்வார் திருமொழியில் (1—8—5.) *கழல்மன்னர்சூழக் கதிர்போல்விளங்கி, எழலுற்று மீண்டேயிருந்து உன்னை நோக்குஞ் சுழலை பெரிதுடைத் துச்சோதனனை......* என்னும் பாசுரத்தில் விநோதமான வரலாறொன்று கூறப்பட்டுளது. கண்ணபிரான் துர்யோதந ஸபைக்கு எழுந்தருளும்போது அதை முன்னமேயறிந்திருந்த துரியோதனன் 'க்ருஷ்ணன் வரும்போது ஒருவருமெழுந்து மரியாதை செய்யக்கூடாது' என்று உறுதியாய்க் கட்டளையிட்டுத் தானும் உறுதியுடன் ஸபையிலேயிருக்க, ஸ்ரீக்ருஷ்ணன் அங்கு எழுந்தருளியவளவில் அத்துரியோதனனுட்பட அரசர்களனைவரும் ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மாவின் ஜ்யோதிஸ்ஸைக் கண்டு பரவசராயெழுந்திருக்க நேர்ந்துவிட்டதென்றும், பிறகு 'அநியாயமாய் எழுந்துவிட்டோமே!' என்று துரியோதனன் அநுதபித்தனனென்றும் சொல்லப்படுகிறது. அவ்வண்ணமாக, பரவசமாய் எழுதி விட்டு 'ஐயோ! நெஞ்சிலுள்ளதை நெஞ்சோடு வைத்துக் கொள்ளாமல் எதற்காக எழுதித் தொலைத்தோம்!' என்று அநுதபித்துக் கொண்டிருப்பவருடையபெயரை வெளியிடுவது விரஸமுமாகும். எழுதியிருப்பது அழகியதே.

காலத்ரயத்திலும் கரணத்ரயமும் ஸமரூபமாக இருக்கப்பெற்றவர்கள் எத்தனை பேர்கள் எத்தனையெழுதியிருக்கவில்லை. அத்தகைய மஹான்கள் எழுதியுள்ள வியாஸங்கள் பலவற்றுள் சிகரமான வொருவியாஸத்தை மட்டும் இங்கே தருகின்றேன்; ரிடைர்ட் பெடரல் கோர்ட் ஜட்ஜ், ஸ்ரீமதுபயவே (ஸர்) எஸ். வரதாசார்ய ஸ்வாமியின் வியாஸம்;—(இவருடைய திருவுருவப்படம் பக்கம் 57ல் காண்க.)

"ஸ்ரீ உ. வே. மஹாவித்வான். பிரதிவாதி பயங்கரம். அண்ணங்கராசாரிய ஸ்வாமியின் வாழ்க்கையைப்பற்றியும் இவர் செய்திருக்கும் பணியைப்பற்றியும் ஓர் சுருக்கமான வெளியீடு ப்ரசுரிக்கப்படுகிறது. இது இந்த ஸ்வாமியின் குணங்களைப்பற்றியும் இவர் செய்துவரும் பணி விஷயத்திலேயும் எனக்கிருக்கும் உயர்ந்த மதிப்பை விளக்கிக்காட்ட ஓர் சந்தர்ப்பம் அளிப்பதால் அதை நான் சந்தோஷமாகப் பயன்படுத்திக்கொள்ளுகிறேன். இந்த ஸ்வாமியை 25 வருஷங்களுக்கு மேலாகவே நான் தெரிந்துகொண்டிருக்கும் பாக்யத்தையுடையேன். ஹிந்து மதத்தை, முக்கியமாக ஸ்ரீராமானுநுஜரின் வைதிக சித்தாந்தத்தைப் பரவச்செய்தற் பொருட்டு இவர் ஆற்றிவரும் பணியின் இயல்பையும் இதன் அளவையும் நான் சிறிது நெருங்கிய பழக்கத்துடன் அறிந்து கொண்டிருக்கிறேன் என்றே சொல்லலாம். நாகரீகமுறையில் படித்திருப்பவர்களின் மனத்திலேயும் ஸ்ரீராமாநுஜ சித்தாந்தத்தை நன்றாக வேரூன்றும்படி நிலைநாட்டிய இரண்டு வித்வான்கள் விஷயத்தில், அதாவது (காலஞ் சென்ற) ஸ்ரீ ம. ம. சேட்லூர் நரஸிம்மாசாரிய ஸ்வாமி, ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் P. B. அண்ணங்கராசாரிய ஸ்வாமி இவ்விருவர்களிடத்தில், நம் தேசத்தவர், முக்கியமாக சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலு முள்ளவர்கள் நன்றி பாராட்டக் கடமைப்பட்

டுள்ளனர் என்கிற உணர்ச்சி வெகு நாட்களாக எனக்குண்டு. இவ்விரண்டு பெரிய வித்வான்களும் ஸ்ரீவைஷ்ணவ மதத்தில் ஏற்பட்டிருக்கும் இரண்டு உப ஸம்பிரதாயங்களைச் சேர்ந்தவர்கள்; தங்கள் தங்கள் சம்பிரதாயத்தைச் சேர்ந்த உலகறிந்த பெரிய ஆசார்யர்களின் கொள்கைகளையே இவர்கள் வற்புறுத்தி விளக்கிக்கொண்டு போனாலும், நான் இங்கு முக்கியமாகக் கருதுவது இவர்கள் ஸ்ரீராமாநுஜ சித்தாந்தத்தை நன்கு பரவச் செய்த ஒரு பெரிய பணியையே யாகும். ஸ்ரீ உ.வே. வித்வான் அண்ணங்கராசாரியஸ்வாமியிடம் பெரிய சபைகளை ஸ்தம்பிக்கச் செய்யும் அதிசய சக்தியுண்டு. இவரது உபன்யாசங்களைக் கேட்கப் பெரிய கூட்டங்கள் சேருவது வழக்கம். பெரிய சபைகள் முன் இவர் ஸம்ஸ்க்ருதத்திலும், தமிழிலும், தெலுங்கிலும் உபந்யசிக்கவல்லவர்: சிலகாலமாக ஹிந்தீ பாஷையையும் இவர் பழகுவதாகத் தெரிகிறது. இவர் மிகவும் வெற்றிகரமாகச் செய்து முடித்த ஓர் மிகப் பெரிய பணி என்னவென்றால், ஸ்ரீ ராமாநுஜர், ஸ்ரீ நம்பிள்ளை, ஸ்ரீவேதாந்த தேசிகர், ஸ்ரீ மணவாளமாமுனிகள் இந்நான்கு பெரிய ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களின் கிரந்தங்களை யெல்லாம் தொகுத்து ஒரு கோர்வையாக வெளியிட்டதே. இது இவர் சாதித்த ஓர் அரிய பெரிய காரியமாகும். ஆனால் இது இவருடைய வெளியீடுகளின் ஓர் பகுதியேயாகும். ஏனென்றால் ஹிந்தியிலேயும், ஸம்ஸ்க்ருதத்திலேயும், தமிழிலேயும் அறிவு பொருந்திய வியாஸங்கள், சர்ச்சைகள், மத விஷயங்கள், தமது சொந்த கற்பனைகள் அல்லது வியாக்கியானங்கள் இவைகளைக்கொண்ட அநேக பத்திரிகைகளை வெளியிடுவதிலேயே இவருடைய காலம் சென்றுகொண்டிருக்கிறது.

இவருடைய காலம் இத்தகைய பணிகள் செய்வதிலேயே மேன்மேலும் வளர்ந்து நம்முடைய சமுதாயம் ஆத்மீய விஷயங்களில் விருத்தியடையும்படி இவருக்குத் தகுந்த தேஹாரோக்யத்தையும் சக்தியையும் அளிக்கும்படி ஸர்வ சக்தியுள்ள எம்பெருமானைப் பிரார்த்தித்து இச் சுருக்கமான மதிப்புரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

ஸர். S. வரதாசாரியர்,
பெடரல் கோர்ட் ஜட்ஜ், (ரிடைர்ட்)

வாசகர்களே! இத்தகைய அபிநந்தன பத்ரிகைகளை இங்கு அடியேன் வெளியிட்டது அபூர்வமான வொரு பெருமையை ஸம்பாதித்துக் கொள்வதற்காகவன்று. வீணான மாச்சரியத்திற்கு வசப்பட்டு உண்மைகளை மறைத்துப் பொய்யான (அல்லது) தவறான விஷயங்களை ப்ரசாரம் செய்து போருகின்ற சிலருடைய மாயப் பேச்சு வலைகளிலே சிலர் மயங்காமைக்காக மஹான்களின் மதிப்புரைகளை யெடுத்துக்காட்ட நேர்ந்ததத்தனை.

ஆக, இடையில் இவை ப்ராஸங்கிகம். பாதுகாஸஹஸ்ரம் அவதரித்ததற்குக் காரணம் நவீநர்கள் கல்பித்தது ஸர்வாத்மநா அஸங்கதமென்று நெடுநாள் முன்னமேயே நிலைநாட்டப்பட்டிருக்கின்றது. அதன் சுருக்கம் வருமாறு; அந்த பாதுகா ஸஹஸ்ர மருளிச்செய்த தேசிகனும், அதற்கு வியாக்கியான மியற்றினவரும், சரித்திரம் தெரிவிக்கவந்த ஆசார்ய சம்பூகாரரும் எவ்விதமாக எழுதிவைத்திருக்கிறார்களென்பதை முக்கியமாக கவனிக்கவேணும். பாதுகாஸஹஸ்ரத்தினுள்ளேயே நாதபத்ததியில் (41) "ப்ரக்க்யாதாநாம் பரிஷதி ஸதாம் காரயித்வா ப்ரதிஜ்ஞாம்" என்றொரு ச்லோக முள்ளது. இதனால், தேசிகன் தாமே ப்ரஸித்தர்களான ஸத்துக்களின் முன்னிலையில் ஆயிரம் ச்லோகம் செய்வதாக ப்ரதிஜ்ஞை செய்து இந்த ஸஹஸ்ரத்தை ஸாதித்தருளினதாக ஸ்பஷ்டமாகிறது. நவீநர்கள் சொல்லிவருகிறபடி ஏதாவது ஐதிஹ்யமிருந்தால் இவ்விடத்து வியாக்கியானத்தில் அது எழுதப்பட்

டிருக்கவேணுமே. எழுதாது விடுவர்களோ? பாரத்வாஜ ஸ்ரீநிவாஸாசார்ய ரென்பவர் பாதுகாஸஹஸ்ரத்திற்கு வியாக்கியாநகர்த்தா. இவர் எவ்விதமாக எழுதி வைத்திருக்கிறாரென்னில்; அந்த வியாக்கியான ஆரம்பத்தில் "ரங்காஸ்தாநீரஸிக பரிஷத்ப்ரேரணும் ப்ராப்ய சௌரே: பாதாவந்யா: ஸ்துதிமக்ருத யோ யைஸ் ஸஹஸ்ரேண பத்யை:" என்கிற ச்லோகத்தை முன்னமெழுதிவிட்டு உடனே

> "ஸ்ரீமாந் வேங்கடநாதோ குரு: பகவதோ ரங்கநாதஸ்ய திவ்யாஸ்தாந ரஸிகைர் பாகவதை: அப்யநுஜ்ஞாத பாதுகாஸ்துதி: பாதுகாஸஹஸ்ரம் நாம காவ்யம் ப்ரணிநாய." என்றெழுதியுள்ளார்.

ஸ்ரீரங்கத்திலிருந்த ரஸிகர்கள் ப்ரேரணைபண்ண அதற்கிணங்கிப் பாதுகாஸஹரம் ஸாதித்ததாக ச்லோகத்திலுள்ளது. அந்த ரஸிகர்களின் அநுஜ்ஞையைக் கொண்டு அது அருளிச்செய்ததாக வசனத்திலுள்ளது. இவ்வளவேயொழிய ஸ்ரீவைஷ்ணவாசார்யர்கள் ஸ்பர்த்தை பண்ணினதாகப் பேச்சே கிடையாது. இந்த கல்பனையான பேச்சுக்கள் இவர்கள் தங்களாலேயே கல்பிதமென்று சிலாசாஸனம் செய்யப்பெற்ற மூவாயிரப்படி குருபரம்பரையிலிருந்து முளைத்தவையேயொழிய, ப்ராமாணிகமான வேறு எந்த நூலிலும் அணுவளவும் ஆதாரம் காட்ட முடியாது.

"திருப்புட்குழி ஸ்வாமியும் அவரை யநுஸரித்த சில வித்வான்களும் மூவாயிரப்படி குருபரம்பரையை நவீந கல்பிதமென்று ஸ்தாபித்து விட்டதனாலேயே உலகமெல்லாம் அதற்குக் கட்டுப்படவேணுமா என்ன?" என்கிற வாதம் இதுவரை எழுந்ததில்லை. இனியொருவர் இந்த வாதத்தைக் கிளப்புகிறாரென்று வைத்துக் கொள்வோம். அத்தகைய வாதம் கிளரும்போது வேண்டுவன சொல்லுவோம்— என்பதும் பண்டே எழுதி முடிக்கப்பட்ட விஷயம். வாதிகேஸரியென்பவர் வேறு வ்யக்தி என்பதையும், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வேறு வ்யக்தி என்பதையும் தெரிந்துகொள்ள மாட்டாமல் இருளும் மருளுமா யெழுதிவைத்திருப்பவர்கள் ஸதஸ்ஸில் வந்து நிற்க அர்ஹதையற்றவர்களென்பது நிர்விவாதம். இதை இப்போது இவ்வளவில் நிறுத்துவோம்.

ஸ்ரீமத் தோணுங்குளம் ராமாநுஜாசாரிய ரென்பவர் அக்காலத்தில் கிரஸனையில் வியாபாரத்தில் அளவற்ற செல்வம்படைத்து மஹாதனிகராய் தேவப்பெருமாள் திருவடிகளில் பரமபக்தராய் அபரிமித கைங்கரியங்களைச் செய்பவராயிருந்து வந்தார். அவர் சில பல வருஷங்கள் தேவப்பெருமாள் ஸந்நிதிக்கு ரிஸீவராகவும் நீதி மன்றத்தில் நியமிக்கப்பட்டு வேலைபார்த்து வந்தார். அவர்க்கு ஸம்ஸ்க்ருதத்திலோ ஸம்ப்ரதாயத்திலோ அவ்வளவாக ப்ரவேசமிருந்ததில்லை. ஆனாலும் காஞ்சிக்கு வந்த பின்பு பெரியார்களை யடுத்துப் பழகி நல்ல விவேகம் பெற்றார். அவர் வைதிகர்களுக்கும் வித்வான்களுக்கும் ஏதாவது வியாஜத்தையிட்டு ஸன்மானங்கள் செய்து கொண்டே யிருந்தார். ஒருநாள் நூற்றுக்கால் மண்டபத்தில் பண்டிதர்களையெல்லாம் வரவழைத்து ஒரு ஸதஸ்ஸு நடத்தினார். ஸாமான்ய பண்டிதர்களும் விசேஷ வித்வான்களுமாகப் பலர் குழுமியிருந்தார்கள். ஒவ்வொருவரும் தேவப்பெருமாளைப் பற்றி 10 நிமிஷம் எதாவது சொல்ல வேணுமென்று அவர் கோரியிருந்தார். இடையிடையே அவரும் சில கேள்விகள் ஜிஜ்ஞாஸு முறையில் கேட்பர்.

அப்படி கேட்டுக்கொண்டு வருகையில், வரதராஜ பஞ்சாசத்தில் "த்வத் தேஜஸி த்விரத சைலபதே! விம்ருஷ்டே ச்லாக்யேத ஸந்தமஸபர்வ ஸஹஸ்ரபாநோ:" என்பதையெடுத்து இதன் தாற்பரியத்தை யாராயினுமொரு வித்வான் விளக்கியுரைக்க வேணுமென்று கோரினார். 'தேவப்பெருமாளே! தேவரீருடைய தேஜஸ்ஸை ஆராய்ந்து பார்த்தால் ஸூர்யனைக் காட்டிலும் அமாவாஸ்யை சிலாகிக்கப்படும்'

என்பது அந்த ச்லோகப் பகுதிக்குப் பொருள். இது அநாயாஸமாக யாவரும் சொல்லக்கூடியதே. அமாவாஸ்யைக்கு வந்த ஏற்றமென்ன? ஸூர்யனுக்கு வந்த தாழ்வு என்ன? என்பதை உபபாதிக்கவேணுமே; அதையே அந்த ஸ்வாமி கோரினார். இதில் (ஸஹஸ்ரபாநோ:) என்றதில் பஞ்சமீவிபக்தியா? ஷஷ்டீ விபக்தியா? என்று பலர்க்கு மயக்கம். பஞ்சமியே யொழிய ஷஷ்டியன்று. ஆனால் வியாக்கியானம் செய்தவர்கள் அறுதியிடாதே ஏதோ எழுதியிருக்கிறார்களாம். அதனால் தான் இந்தக் கேள்வி விளைந்தது. வித்வான்கள் சிறிது ஆலோசித்துவிட்டு "இது தேசிக திவ்யஸூக்தி யல்லவா? லேசாகச் சொல்லிவிட முடியுமா?" என்பார் சிலர்; "வியாக்கியானம் பார்த்தால் தெரியும்" என்பார் சிலர்; "வியாக்கியானத்திலும் தலை சுற்றலாயிருக்கிறது" என்பார் சிலர்; இப்படியாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அடியேன் இளமையில் இது பாடங்கேட்டிருந்தபடியால் உத்ஸாஹமாக வெழுந்து தாத்பரியத்தை விளக்கமாக விஜ்ஞாபித்தேன். இதை ஒரு கதைபோல் எடுத்துச் சொன்னேன்; (அதாவது) அக்காலத்தில் ஸ்ரீமத் திருப்புட்குழி ஸ்வாமியை எல்லாரும் ஒப்புயர்வற்ற வித்வானாகச் சொல்லிக்கொண்டிருப்பர்களாதலால் அந்த ஸ்வாமியைத் தேவப் பெருமாளுடைய தேஜஸ்ஸின் ஸ்தானத்திலே வைத்தேன். ஸ்வல்பசாஸ்த்ரஜ்ஞானம் படைத்தவொரு ஸாதாரண வித்வானை ஸூர்யனுடைய ஸ்தானத்திலே வைத்தேன். உண்மையில் ஒரு படிப்புமில்லாத வொரு யதாஜாதனை அமாவாஸ்யையின் ஸ்தானத்திலே வைத்தேன். திருப்புட்குழி ஸ்வாமி சாஸ்த்ரார்த்தம் நடத்தும்போது ஏறக்குறைய அவருக்கு ஸமாநஸ்கந்தரானவொரு ப்ரபலவித்வான் பேசினால் ஏற்றிருக்கும்; அரைகுறை படிப்பாளியானவொரு ஸாதாரண வித்வான் தன்னை ப்ரபல பண்டிதராக நினைத்துச் செருக்குற்றிருந்தபடியாலே தாம் ஏதோ ப்ரதிவாதம் செய்வதாக எழுந்தார்; அதனாலென்னாகும்? நாலு வார்த்தையிலேயே பங்கமடைந்து நின்றார். ஒரு படிப்புமில்லாத யதாஜாதர் ஒருவருளரே; அவரும் அந்த ஸதஸ்ஸிலே யிருந்தார்; அவர் உள்ளபடி தம்மை அஜ்ஞராகவே நினைத்திருப்பவராதலால் தாம் ஒன்றும் வாய்திறக்கவில்லை; அதனால் பங்கமடைய ப்ரஸக்தியே யில்லையாயிற்று. இடையில் ஒருவர் பங்கமடைந்தாரே, அவர் ஸ்வல்பம் கல்வி கற்றிருந்தபடியாலல்லவோ வாயைத் திறக்க நேர்ந்து அதனால் பங்கமடைய ப்ராப்தமாயிற்று. அவர் நினைத்தார் 'ஐயோ, நாம் சிறிது கல்விகற்றபடியாலன்றோ இப்படி பங்கமடைய நேர்ந்தது; இந்த யதாஜாதனைப் போலே நாமும் நிரக்ஷரகுக்ஷியாயிருந்து விட்டால் இந்த பங்கம் நமக்கு நேர்ந்திராதே' என்று நினைத்தார். இதுபோல, தேவப்பெருமாளுடைய தேஜஸ்ஸின் முன்னிலையிலே பங்கமடைந்த ஸூர்யன், அவ்விதமாக பங்கமடைய ப்ரஸக்தியற்ற அமாவாஸ்யையைக் கொண்டாடி 'நாம் அமாவாஸ்யையாகப் பிறவாமற் போனோமே!' என்று அநுதபிக்க நேர்ந்தது. இதுவே இங்கு தேசிகனுடைய திருவுள்ளம். இந்த வர்ணனையினால், ஸூர்ய தேஜஸ்ஸை ஸர்வாத்மநா பங்கப்படுத்தவல்லது தேவப்பெருமாளுடைய தேஜஸ்ஸு என்பது தேறி நிற்கும். இதனை சமத்காரமாக ஸாதித்திருக்கிறபடி—என்று விரிவாக வுபந்யஸித்தேன். இதைக்கேட்டஸதஸ்யர்கள் யாவர்க்கும், விசேஷித்துக் கேள்விகேட்ட அந்த தோணுங்குளம் ராமாநுஜாசார்ய ஸ்வாமிக்கும் பரமானந்த முண்டாயிற்று. அப்போது ஒருவர்க்கும் அஸூயை தலைகாட்டினதாகத் தெரியவில்லை.

கீழே (பக்கம் 30ல்) ஸ்ரீமத் காதி ஸ்வாமியின் ப்ரஸ்தாவம் ஒருவாறு நிறுத்தப்பட்டிருக்கின்றது. ஹைதராபாத் நகரத்திலிருந்து கல்கத்தாப்ராந்தம் ஸஞ்சாரமாக எழுந்தருளினவர் அடுத்த வருஷத்தில் காஞ்சிக்கு எழுந்தருளும்படியாயிற்று. அப்போது இரண்டு ஸம்வத்ஸரம் வடநாட்டுப் பயணத்தை அறவே மறந்து ஸ்வஸ்தானத்திலேயே எழுந்தருளியிருக்க ப்ராப்தமாயிற்று. அப்போது அடியேனுக்குக் காலை வேளைகளில் ஸ்ரீபாஷ்ய ச்ருதப்ரகாசிகா ப்ரவசனத்தையும் பகல் வேளைகளில்

ந்யாய பாடப்ரவசனத்தையும் வெகு உத்ஸாஹத்துடன் நடத்தியருளினர். சோள ஸிம்ஹபுரத்தில் ஸம்ஸ்க்ருத கலாசாலையை ஸ்தாபித்துப் புகழ்பெற்ற ஸ்ரீ உவே. ப்ர. க்ருஷ்ணமாசாரியஸ்வாமி ஏற்கெனவே ஸ்ரீ பெரும்பூதூரில் ஸ்ரீமத் குண்டலம் ஸ்வாமி ஸன்னிதியில் ஸ்ரீபாஷ்யம் அதிகரித்திருந்தும் மறுபடியும் அதிகரிக்க ஆசை கொண்டு ஸப்ரஹ்மசாரியாக அமைந்தார். இன்னும் சிலரும் அந்வயித்தார்கள். ஸ்ரீபாஷ்ய ப்ரவசநம் இரண்டு வருஷகாலம் பெரிய கோஷ்டியாகவே நடைபெற்று வந்தது. இடை யிடையில், கோயில் திருமலை முதலான திவ்ய தேசங்களில் உத்ஸவங்கள் ஸேவிக்கக் குதூஹலங்கொண்டு அடியேன் நாலுநாள், ஒருவாரம் இப்படியாகப் பிரிந்து செல்ல நேரும். செல்லுமிடங்களில் உபந்யாஸங்கள் செய்ய மஹான்கள் நியமித்தருள்வர்கள். திரும்பி வந்தபின் ஆங்காங்கு நடந்த செய்திகளை விஜ்ஞாபனம் செய்வேன். ஸ்ரீஸ்வாமியின் உபந்யாஸங்கள் வட இந்தியாவில் விசேஷமாக நடைபெறுவதுண்டே யல்லது இந்த ப்ராந்தங்களில் நடைபெற்றதில்லை. இங்கும் நடத்தவேணுமென்கிற ருசியுண்டாகி அண்ணு ஸன்னிதியில் தினப்படியாக மாலை வேளைகளில்கீதையுபந்யாஸம் செய்வதென்று ஆரம்பித்தருளினர். ஸ்ரீயதோக்தகாரி ஸன்னிதியில் சில கிழமைகளில் பகலில் உபந்யாஸம் நடத்தவேணுமென்று அந்த ஸன்னிதி தர்மகர்த்தாக்கள் ஸ்ரீ ஸ்வாமியை வேண்டிக்கொண்டார்கள். அப்போது ஸ்ரீமத் உவே. வித்வான் வாதூல அப்பன் ப்ரணதார்த்தி ஹராசார்ய ஸ்வாமி முதலான மற்றும் சில பெரியார்களும் உபந்யாஸங்கள் செய்தருள இசைந்து, இன்ன கிழமைகளில் இன்னர் உபந்யஸிப்பதென்று நிபந்தனை ஏற்பட்டு அங்ஙனே வெகு காலம் நடந்து வந்தது.

ஸ்ரீ காதி ஸ்வாமி, சார்வரி வருஷத்தில் (அதாவது அடியேனுடைய பத்தாவது வயதில்) மஞ்ஜுபாஷிணீ யென்றொரு ஸம்ஸ்க்ருதபத்ரிகை பிரசுரம்செய்ய ஆரம்பித்தருளினர். அது சில வருஷங்கள் மாதத்திற்கொருமுறையும், சில வருஷங்கள் பக்ஷத்திற்கொரு முறையும், நடந்து வந்து பிறகு வாரப்பத்திரிகையாகப் பல வருஷங்கள் நடந்து வந்தது. அப்பத்ரிகையை நிர்வஹிக்கும் பாரத்தைப் பதினெட்டாவது வயதில் ஸ்ரீ ஸ்வாமி அடியேனிடம் ஒப்படைக்க, ஏறக்குறைய இருபது ஸம்வத்ஸரகாலம் அதை நிர்வஹித்து வந்தேன். அப்போது பெரும்பாலும் ஸ்ரீஸ்வாமி வடதேச ஸஞ்சாரத்தில் ஊன்றியிருந்தார். பன்னிரண்டாண்டு இந்த பக்கம் திரும்புவதில்லை யென்கிற திடமான ஸங்கல்பத்துடனே மடாதிபதிகளுக்கும் மேலாக திக்விஜய யாத்திரை புறப்பட்டருளினர். அந்த யாத்திரையில் க்வசித் க்வசித் அடியேன் சென்று சேர்ந்து ஸஹாநுபவம் பண்ணிக் களிக்க நேர்ந்தது.

ஸ்ரீமத்பரமஹம் ஸேத்யாதி. சின்ன கலியன் ஸ்வாமியென்று தேசமெல்லாம் பரந்த பெரும் புகழுடைய ஸ்ரீமத். வானமாமலைஸ்வாமி முதல்தடவையான பெரிய யாத்திரை புறப்பட்டருளிக் காஞ்சீப்ராந்தம் எழுந்தருளியாகிறது. அப்போது அடியேன் [கீழே பக்கம்53ல் ப்ரஸ்தாவித்த] ஸம்ப்ரதாய சந்த்ரிகாதி க்ரந்த முத்ரணத்தில் தத்பரனுயிருந்தபடியால் அப்போது அச்சிட்டிருந்த புஸ்தகங்களில் ஒவ்வொரு பிரதியை ஸ்ரீஸ்வாமிஸன்னிதிக்கு அனுப்பியிருந்தேன். ஸம்ப்ரதாய சந்த்ரிகைக்கு விஸ்தாரமான பூமிகையும் விசேஷடிப்பணியும் எழுதிச் சேர்த்திருந்தேன். அவற்றை ஸ்ரீஸ்வாமி கடாக்ஷித்தருளித் திருவுள்ளம் போரவுகந்து "குகனேடுங் கங்கை தன்னில் சீரணிந்த தோழமை கொண்டது மோரடையாளம்" என்பதற்கீடான முறையிலேயே நிரவக்ரஹாநுக்ரஹம் செய்தருளினர். அதை ப்ரீதியென்பதா? ப்ரேம மென்பதா? கருணையென்பதா? நேச மென்பதா? இன்னதென்று சொல்லத் தெரியவில்லை. அந்தஸ்வாமி திருநாட்டுக்கெழுந்தருளி இருபதாண்டுகளானலும் "ராமஸுக்ரீவயோரைக்யம்" என்னும்படியான அந்த நிலையை அறியுமுலகெல்லாம். ஸ்ரீஸ்வாமியின் பரமக்ருபைக்கு இலக்காகப்பெற்ற ஸந்தர்ப்பங்கள் பலபலவுண்டு; அவை மேற்பகுதிகளில் விசதமாகும்.

திருவல்லிக்கேணியில் ஸ்ரீமத். வைத்தமாநிதி முடும்பை அப்பங்கார் ஸ்வாமி யென்பவர் ஸம்ப்ரதாய க்ரந்த ப்ரவசநப்ரவீணராய் எழுந்தருளியிருந்தார். அவர் திருநாட்டுக்கெழுந்தருளி 35, 40 வருஷமிருக்கும். அவருடைய மூத்த திருக்குமாரர் சடகோபராமாநுஜாசாரியர் ஸ்வாமி தமிழுலகில் மஹாப்ரஸித்தர். இவர் 'இளம்பிராயத்திலேயே கலைகள் பலவுங் கற்றுப் போதனாசிரியராக விளங்கியவர். அப்போதே கம்பராமாயணம், அஷ்டப்பிரபந்தம், நன்னூல் முதலிய இலக்கண விலக்கியங்களுக்கு உலகங் கொண்டாட நின்ற உரைகளை யெழுதத் தொடங்கியவர். திருவிருத்தத்திற்கு இவரெழுதிய வுரை இன்னமும் உலகில் கொண்டாடப்பட்டு விளங்கா நின்றது. நச்சினார்க்கினியரென்றும் பரிமேலழகரென்றும் ப்ரஸித்தர்களான உரையாசிரியர்களிற் காட்டிலும் மிக மேம்பட்டு விளங்கியவர் இவர். இவருடைய உரைகளில் ஒருவர் ஒருவிதமான குற்றங் குறை கூற முடியாது. இலக்கணங்களிலும் இலக்கியங்களிலும் ஸமமான மிகத் தெளிந்த ஞானம் பெற்றிருந்தவரிவர். இவரெழுதிய 'டெக்ஸ்ட் நோட்ஸ்' என்னும் உரைகளை மட்டும் படித்தே பலர் தமிழ்ப்பண்டிதர்களாயினர் என்பது உண்மையுரை. கீர்த்தி மூர்த்தியான மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி சாமிநாதையரவர்கள் இவரிடத்தும் இவர் எழுதி வெளியிட்ட உரைகளினிடத்தும் மஹத்தான கௌரவ புத்தி வைத்திருந்தார். அடியேன் முதன்முதலாகத் திருக்குடந்தைக்கு விடை



உலகம் நிறைந்த புகழாளரான ஸ்ரீ மதுபயவே.
வை. மு. சடகோபராமாநுஜாசாரியர் ஸ்வாமி
(வைகுண்டவாஸி)

கொண்டபோது இந்த ஸ்வாமி அவ்விடத்துக் காலேஜில் போதனுசிரியராக எழுந்தருளியிருந்தார். ஆனுல் அப்போது அங்கு இவரை ஸேவிக்க ப்ராப்தமாகவில்லை. இவருடைய கீர்த்திகளை முதன்முதலாக அவ்விடத்தில்தான் கேள்விப்பட்டேன்.



ஸ்ரீமதுபயவே. வித்வான் வை. மு.-கோபாலக்ருஷ்ணமாசாரியர் ஸ்வாமி, திருவல்லிக்கேணி.

இவரிடத்தில் பாடங்கேட்டுப் பண்டிதரானவர்கள் பலர். திருவல்லிக்கேணியில் தமிழ்ப் பண்டிதராக விளங்கினவரும், பல புத்தகங்களுக்குப் பதிப்பாசிரியருமான ஸ்ரீ உவே. சே. க்ருஷ்ணமாசாரியர்ஸ்வாமி இவருடைய திருவருளினுலேயே பேர்பெற்றவர். உலகின் பாக்யவசத்தினுல் இற்றைக்கும் திருவல்லிக்கேணியில் ஸேவை ஸாதித்தருள்பவரும், கம்பராமாயணம் முதலிய பல நூல்களுக்கு அரிய பெரிய உரைகளை வகுத்தவரும், வடமொழி தென்மொழிகளை நன்கு பயின்றவருமான ஸ்ரீ உவே. வை. மு. கோபாலக்ருஷ்ணமாசாரியர்ஸ்வாமியும். இவருடைய பரம க்ருபைக்குப் பாத்ரபூதராகியே மேன்மை பெற்றவர். இவ்விருவரும் தம்பி

தமையன் முறையிற் சேர்ந்தவர்களுமாவர். இவ்விருவராலும் தமிழுலகுக்கு நேர்ந்துள்ள மஹோபகாரங்கள் எழுத்திலடங்கா. விசேஷித்து ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்திற்கும் இவர்கள் பரமோபகாரகர்கள். இவ்விருவரையும் நாம் நிச்சலும் நினைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இவர்களில், சடகோபராமாநுஜாசாரியர் ஸ்வாமி அதிபால்யத்தில் பரமபதமெய்தினர். நாற்பது வருஷங்களுக்குமேல் ஆய்விட்டாலும் இவருடைய மறைவைப்பற்றி இன்னமும் நாடோறும் சோகிப்பவர்கள் பலருளர். இவருடைய ஸ்தானத்தைப் பூர்த்தி செய்ய இன்னமும் ஒருவர் தோன்றிற்றிலர் என்றால் இது மிகையாகாது. இவர்க்கு ஸம்பந்தங்களெல்லாம் காஞ்சீபுரத்திலே யாதலால் அடிக்கடி இவ்விடமெழுந்தருள்வர். மணவாளமாமுனிகளின் திருவவதாரம் ஸாதாரண வருஷத்திலாதலால் சென்ற ஸாதாரண வருஷத்து ஐப்பசி மாதத்தில் மணவாளமாமுனிகளின் மஹோத்ஸவம் தேவப்பெருமாள் ஸன்னிதியில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அப்போது சடகோபராமாநுஜாசாரியர் ஸ்வாமி அவ்வுத்ஸவம் ஸேவிக்கும் வியாஜமாகக் காஞ்சிக்கெழுந்தருளி உத்ஸவம் முடிந்த பிறகும் சில மாதங்கள் அங்கே தங்கியிருக்க நேர்ந்தது. அப்போது அவரோடு மிக நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது. மாணுக்கனுகவுமிருந்து அவருடைய எல்லைகடந்த வித்வத்தை அநுபவித்து ஆனந்திக்க நேர்ந்தது. இக்காலத்து ஸ்ரீவைஷ்ணவர்களும் பிறரும் சிறிது தமிழ்ப்பயிற்சி பெற்றவாறே தங்களை மஹாமேதாவிகளாகவும் விமர்சகுசலர்களாகவும் "சதிரமென்று தம்மைத் தாமே சம்மதித்து" என்ற ஆழ்வாரருளிச்செயற் கணக்கிலே அபிமானித்துப் பூருவாசாரியர்களின்மேல் அம்பு தொடுக்கப் புகுவர்கள். சடகோபராமாநுஜாசாரியர் ஸ்வாமி உபயபாஷையிலும் நிரம்பிய ஞானம்பெற்ற கல்விக்கடலாகையாலே பூர்வாசார்ய திவ்யஸூக்திகளில் அவர் கொண்டிருந்த ப்ரதிபத்தி அப்ரதிமமானது. அடியேனெழுதிய செந்தமிழாராய்ச்சி யென்னுமோர் நூல் 2—11—43-ல் (சுபாநுவூ ஐப்பசியில் திருமூலத்தன்று) வெளியிடப் பெற்றது தமிழுலகமெங்கும் பரவியுள்ளது. அதில் (பக்கம் 44-ல்) அடியேனெழுதியுள்ள சில பங்க்திகளை இங்கு எடுத்துக் காட்ட வேண்டியது அவச்யமாகிறது. அவை வருமாறு ;—

"கீர்த்தி மூர்த்தியான, வை. மு. சடகோபராமாநுஜாசாரியர் ஸ்வாமியைத் தமிழுலகமும் ஸ்ரீ வைஷ்ணவ வுலகமும் இற்றைக்கும் எற்றைக்கும் போற்றுமென்பது நிர்விவாதம். அந்த மஹான் இலக்கண விலக்கியங்களை நன்கு பயின்றவர். வடமொழியும் விசேஷமாகக் கற்றவர் என்கிற இவ்வளவேயன்று அவர்க்கு ஏற்றம். அருளிச் செயல்களை சுத்த பரம்பரையில் ஓதி நம் ஆசாரியர்களின் வியாக்கியானங்களை நல்லாசிரியர் திருவடிகளிற் பலகாலம் பணிந்து குனிந்து கேட்டவரென்பதே அவர்க்கு விசேஷித்த பெருமை. அத்தகைய சிறப்புக்களில் ஏகதேசமும் பெறாததுதான் மற்றையோர்கள் ஆசார்ய ஸ்ரீ ஸூக்தி விச்வாஸமின்றிக்கே தாந்தோன்றிகளாக மனம்போன போக்கெல்லாம் எழுதி வருவதற்கு மூலம். அடியேனுக்கு ஸாக்ஷாத் மாதாமஹரும் ஜகத் ப்ரஸித்தரா யெழுந்தருளி யிருந்தவருமான ஸ்ரீமத் பரம ஹம்ஸேத் யாதி, ஸ்ரீகாஞ்சீ அழகிய மணவாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி திருவடிகளில் அடியேன் இலக்கண விலக்கியங்கள் வாசித்துக்கொண்டிருந்தபோது ஜீயர் ஸ்வாமி சிஷ்ய யாத்திரை எழுந்தருளநேர்ந்தது. அப்போது வை. மு. சடகோப ராமாநுஜாசாரியர் ஸ்வாமி காஞ்சீபுரத்திற் கெழுந்தருளி ஸ்வஸம்பந்தி க்ருஹத்திலும் மாமனு ரகத்திலும் சில மாதங்கள் தங்கியிருக்க நேர்ந்தது. அப்பொழுது அவரிடத்திலும் சில தமிழ் நூல்களை வாசிக்க அடியேனுக்குப் பாக்கியம் வாய்த்தது. மாதாமஹ ஜீயர் ஸன்னிதியில் தமிழ் வாசித்து ப்ரஸித்தரான புன்னை-ஸ்ரீநிவாஸாசாரியர் பக்கலிலே வை. மு. சடகோபராமாநுஜாசாரியர் ஸ்வாமி வாசித்து விளக்கில் கொளுத்தின தீவட்டியாக விளங்கினவர். இங்ஙனம் ஜீயர் ஸ்வாமி ஸம்பந்தமும் அவரிடத்தில் இருந்ததனால் அடியேன்

மிக்க ப்ரதிபத்தியோடு அவரிடம் வாகிக்க நேர்ந்தது. அந்த மஹானுக்கு நம் ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகளில் இருந்த ஒப்புயர்வற்ற பிரதிபத்தியை அடியேன் அப்போது கண்டு வியந்தேன். அவரது திருவருளாலேயே அந்த ப்ரதிபத்தி அடியேனுக்குச் சிறிதளவு வாய்த்த தென்றும் உள்ளபடி கூறுவேன். சில மாதங்கள் அடியேன் அவரிடத்தில் வாழ்ந்து கேட்டிருந்திலேனாகில் நானும் ஒரு தாங்தோன்றியா யிருந்திருப்பேனென்பது திண்ணம். அடிக்கடி அவரது திருவருளை ஸ்மரிப்பவனடியேன். உள்ளபடி அந்த ஸ்வாமியிடத்தில் சில மாதங்கள் பழக நேர்ந்தபடியாலும், அவருடைய உரைகளில் பரிசயம் செய்யப்பெற்ற படியாலுமே அடியேன் பல நன்மைகளை யடைய ப்ராப்தமாயிற்றென்பதை அந்தரங்க ஸாக்ஷிகமாக விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்." இத்யாதிகள்.

பலர் மறந்திருப்பதும், சிலர் நாடோறும் அநவரதமும் அநுஸந்தித்துக் கொண்டிருப்பதுமான எனது ஓர் விசேஷத்தைப்பற்றி இப்போதெழுத விரும்புகிறேன். திருவாய்மொழி ஆறும்பத்தில் ஐந்தாவது பதிகம் *துவளில் மாமணிமாட மென்பது. அதற்கு அவதாரிகை யருளிச்செய்கின்ற நம்பிள்ளை ஈடு முப்பத்தாறாயிரப்படியிலே பணித்த ஸ்ரீ ஸூக்திகளிவை :—

"ஸ்ரீ ஜநகராஜன் திருமகள் பிறந்த ஸமயத்திலே ஜ்யோதிர் வித்துக்களை யழைத்து 'இவள் ஜீவிக்கும்படிகளென்?' என்று கேட்க; 'இவள் ஜீவிக்கும் படிகளில் ஒரு குறையில்லை; ஸார்வபௌமனா யிருப்பானொருவனைக் கைப்பிடிக்கவுங் கடவள். இங்ஙனே யிருக்கச் செய்தேயும் வநவாஸரஸ மநுபவிக்கக் கடவள் என்றார்கள். அப்படியே இப்பெண்பிள்ளை [பராங்குச நாயகி] பிறந்தபோது இவள் திருத்தாயாருள்ளிட்டார் நிதாநஜ்ஞரா யிருப்பாரை யழைத்து இவள் ஜீவிக்கும்படிகளெங்ஙனேயென்று கேட்க; எல்லாம் நன்றாய்த் தலைக்கட்டக் கடவது, ஆனாலும் இவளுக்கு ஓர் அபம்ருத்யுவுண்டு; அது தப்பினாளாகில் ஸுகமே ஜீவிக்கும்; அதாவது திருத்துலைவில்லி மங்கலத்தில் கொடுபோகாதே யொழியப் பெறில் இவளைக் கிடைக்கும் என்றார்கள். இவள் ஜீவியாதொழியிலும் திருத்துலைவில்லி மங்கலத்தில் கொடுபோகாதொழியவல்ல குடியன்றே. இவள் அங்கே புக்கு முடிய வமையும் என்றிருப்பார் சிலரிறே. பிராட்டி வநவாஸரஸ மநுபவியாதவன்றிறே இவள் திருத்துலைவில்லி மங்கலத்தில் புகாதொழிய வல்லளாவது." என்று.

இப்படிப்பட்ட பரம கம்பீரமான ஸ்ரீ ஸூக்திகளின் கருத்தை அடியேனுடைய திவ்யார்த்த தீபிகையிலே விளக்கமாக உரைத்திருப்பதையும் இங்கெடுத்துக் காட்டுகிறேன். ஸ்ரீ ஜநகராஜன் திருமகள் [ஸீதை] பிறந்தபோது சோதிடர்களை வரவழைத்து 'இவளுடைய அத்ருஷ்ட பாகங்கள் எப்படியிருக்கிறது? சொல்லுங்கோள்' என்று தாய்மார் கேட்க; சோதிடர்கள் பார்த்து 'இவளுடைய பாக்கியம் மிக நன்றாயிருக்கிறது; ஒரு குறையுமில்லை. ஸார்வபௌமனா யிருப்பானொருவனுக்கு மனைவியாக வாழ்க்கைப்படுவள்; ஆனால் ஒரு கண்டமுண்டு—(அதாவது) வநவாஸம் அநுபவிக்க நேரும்' என்றார்களாம். அப்படியே, நம்மாழ்வாராகிற பராங்குசநாயகி பிறந்தபோதும் இவளது திருத்தாயார் முதலானோர் சோதிடர்களை யழைத்து பாக்ய விசேஷங்களைப்பற்றி விசாரிக்கையில் அவர்கள் சொன்னதாவது 'எல்லாம் நன்றாகவே யிருக்கிறது; இவள் * உயர்வற வுயர்நல முடையவனை அயர்வறு மமரர்களதிபதியால் மயர்வற மதிநல மருளப்பெறுவள்; உலகம் நிறைந்த புகழ்பெறுவள்; தொண்டர்க்கு அமுதுண்ணச் சொல்மாலைகள் சொல்லுவள்' என்று; இங்ஙனே பலவும் சொல்லிவிட்டு, ஆனால் இவளுக்கு ஓர் கண்டமுண்டு;

அது என்னென்னில்; இவள் துலைவில்லி மங்கலத்திலே ஈடுபடும்படி நேரும்; அது இவளுக்குப் பெரிய கண்டமாகவே முடியும்; அது தப்பினால் சுகமே வாழலாம்—என்றார்களாம். சோதிடர்கள் ஸீதாபிராட்டிக்குச் சொன்ன கண்டமும் தப்பிற்றில்லை; ஆழ்வார்க்குச் சொன்ன கண்டமும் தப்பிற்றில்லை. ஸாமாந்ய த்ருஷ்டியாலே இவை கண்டமென்னத் தகுமேயல்லது, விசேஷ த்ருஷ்டியாலே இவையிரண்டும் பெரும்பேறு என்னப்படுமன்றோ. பிராட்டி வநவாஸம்புக்கு * தனிச் சிறையில் விளப்புற்ற கிளிமொழியாளென்று திருவாய்மொழியாலும், "இதிஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீ ராமாயணத்தால் சிறையிருந்தவ ளேற்றம் சொல்லுகிறது" என்று ஸ்ரீ வசநபூஷணத்தாலும் லோகோத்தரமாகக் கொண்டாடப்பட்டாள். ஆழ்வாரும் துலைவில்லி மங்கலத்திலே புகுந்து மிக்க பெரும்புகழ் பெற்றார்.

இனி விவக்ஷிதமான விஷயத்திற்கு வருகிறேன். அடியேனுக்கு பவிஷ்யத் பலன்களை இளமையிலேயே தெரிவித்த சோதிடர்களும் பல பலவும் தெரிவித்து "இவை ஸாமாந்ய ஸம்ருத்திகள்; விசேஷ ஸம்ருத்தியொன்று உண்டாம்; (அதாவது) தேசமெல்லாம் பரந்த பெரும்புகழைப் பெறுவிக்க வல்லதொரு க்ரந்தரசனை ஏற்படும்; அது ஸாமாந்யர்களின் த்ருஷ்டியாலே குறையாகத் தோன்றினாலும், விசேஷஜ்ஞர்களின் த்ருஷ்டியாலே * ஜநகாநாம் குலே கீர்த்திம் ஆஹர்ஷ்யதி மே ஸுதா* என்னப் பெற்ற பிராட்டி பெற்றதும் பெறுவித்ததுமான கீர்த்தியாகவே விளங்கும்" என்றார்கள். அந்த க்ரந்தமே குலப்ரஷ்ட முகத்வம்ஸ மென்பது. தர்சநத்திற்காகக் கண்ணை யிழந்த கூரத்தாழ்வானையும், உயிரையே யிழந்த பெரிய நம்பியையும் போலே இழக்கப் பெற்றதொன்றில்லையே யென்று குறைபட வேண்டியதாயிற்று. உண்மையில் இந்த ஸம்பவத்தை எம்பெருமான் எதற்காக விளைவித்தானென்பதுபற்றி ஸ்ரீமத் பரமஹம்ஸ.திருமலைதிருப்பதிசின்னஜீயர் ஸ்வாமி யாஸ்தானத்தை யலங்கரித்தருளாநின்றவர் பூர்வாச்ரமத்திலே [ஸ்ரீ உவே. ஸாது ராமாநுஜாசார்ய ஸ்வாமியென்று ஸுப்ரஸித்தராய் விளங்கின காலத்திலே] ஸ்ரீ பெரும்பூதூரிலே ஸாதித்தருளின வார்த்தை;—"விளக்கிலே விட்டில்கள் தாமாக வந்து விழுந்து மடிகிறாப்போலே உன்னுடைய பலவகை நூல்களிலே தாமாக வந்து விழுந்து சிலர் ஏதையாவது ப்ரலபித்து, உடனே உன்னுடைய சாச்வத விஜயத்வஜமான ப்ரத்யாக்யானங்களைப் பெற்று அதன்பிறகு சிறிதும் கைகாலாட்ட முடியாமல் தணறு



ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி.
திருமலை திருப்பதி சின்னகேள்வி ஜீயர்ஸ்வாமி

கிற காலத்திலே எதையாவது பதில் சொல்லிப் பிழைக்கவேணுமே; அப்போது இந்த ஸம்பவத்தை ஒரு ப்ரஹ்மாஸ்த்ரமாக வெடுத்துக் காட்டி இதனால் தாங்கள் வெற்றிபெற்று விட்டதாகக் கருதுவதற்கு இடமாக எம்பெருமான் செய்து வைத்தது இது'' என்று. இதை ஸ்வாமி விநோதமாக ஸாதிக்கிறாரென்றிருந்தேன். அது இன்றுவரை அவிச்சின்னமாக அநுபவத்தில் காண்கிறது. வாத ப்ரதிவாத நூல்கள் அவதரிக்கும்போது, ப்ரதிபடர்கள் முதலில் ப்ரதிவாதம் செய்யப்புக்கு வாய்மடிந்தவாறே "இன்ன வருஷத்தில் இன்ன தேதியில் ஜாக்ஸன் துரை யெழுதிய இன்ன நம்பருள்ள ஜட்ஜ்மெண்டைக் காண்க.'' என்று எழுதுவதும், அந்த ஜட்ஜ்மெண்டைப் பிரசுரம் செய்வதுமாய் இதையே தங்களுடைய வெற்றிக்கொடியாக நாட்டிவருகிறார்கள். இந்த ஸம்பவமில்லையானால், க்ராந்திக விஷயங்களில் பிரதிவாதம் செய்து பங்கப்பட்டவர்க ளனைவர்க்கும் மனஸ்ஸமாதான மில்லாமே போகுமே. ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் "வரதநுஹதிம் வாலித்ரோஹம் மநாகபஸர்ப்பணம்'' என்று ஸாதித்த கணக்கிலே தூஷணருசி யுடையார்க்கு ஆலம்பனமாக இது அமைந்தபடி.

20, 25 ஆண்டுகட்கு முன்பு ஸ்ரீ தேசிகஸூக்தி ஸம்ரக்ஷிணி யென்றொரு பத்ரிகையை ஒருவர் மாதந்தோறும் வெளியிடத் தொடங்கி, திருச்சியில் ஸுப்ரஸித்த மஹநீயராக எழுந்தருளி யிருக்கின்றவரும், அடியேனுக்கு ஸுஹ்ருந்மணியுமான ஸ்ரீமத். ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமியை அப்பத்திரிகைக்கு ஸம்பாதகராக நிறுத்தி அவரைக்கொண்டு அடியேனுடைய ஸம்ப்ரதாயார்த்த வாத நூல்களுக்கு பதில் எழுதுவித்துப் பிரசுரம் செய்துவந்தார். அவருடைய பெயர் கீழச்சேரி பரவஸ்து ஸ்ரீநிவாஸா சாரியரென்பது. அடியேனுடைய நூல்களுக்கெல்லாம் பதில் வெளியிட வேணுமென்றே அப்பத்திரிகையை ஆரம்பித்ததாக அதில் ஸ்பஷ்டமாக வெளியிட்டு வந்தார்கள். அப்போது அடியேன் 'தேசிகஸூக்தி ஜயத்வஜமாலா' என்கிற மாதாந்தப் பத்ரிகையை வெளியிடத் தொடங்கிப் பல வருஷங்கள் பிரசுரித்து வந்தேன். எதிர்த்தலையில் வரும் வாதங்கள் அத்தனையும் அஸாரங்கள்—அஸம்பத்தங்கள் என்பது அதில் உடனுக்குடனே நிரூபிக்கப்பட்டு வந்தது. அவற்றையெல்லாம் ஆழ்ந்து கடாக்ஷித்தருளின அந்த ஏ. வி. கோபாலாசார்யஸ்வாமி முடிவாக அநுதாப பத்ரிகையை வெளியிட்டு விச்ராந்தரானார். இதைப் பற்றி மேற்பகுதிகளில் விவரிக்கப்படும். ஒன்றுமட்டும் முக்கியமாக அனைவருடையவும் அந்தரங்கத்தில் பதிந்திருக்கத் தக்கதுண்டு; (அதாவது) அடியேனை வடகலை வகுப்பினரிடத்தில் க்ஷாத்ரங்கொண்டவனாகச் சிலரோ பலரோ கருதியிருப்பது மிகத்தவறு. அவர்களின் நூல்களுக்கு மறுப்புக ளெழுதியிருப்பது போலவே தென்கலை வகுப்பிலும் பலருடைய நூல்களுக்கு மறுப்புகள் எழுதி வெளியிட்டே யிருக்கிறேனென்பதை உலகம் உள்ளபடி யுணர்ந்திருக்கின்றது. ஸங்க்கையில் இரண்டும் ஸமமாகவே யிருக்கும். "அஸங்கதமாக எழுதுகிறவர்கள்'' என்று அடியேன் மனத்தில் பட்டால் அவர்களுடைய அஸங்கதோக்திகளுக்கு பதில் வெளியிட்டே தீருவது அடியேனுடைய இயல்வு. இவ்வளவேயொழிய, வ்யக்தி விசேஷங்களிலாவது மதங்களிலாவது கறுக்கொண்டவனல்லேன். வடகலை வகுப்பினருடைய அன்பையும் ஆதரவையுமே அடியேன் விசேஷித்துப் பெற்றவன். தேசிக திவ்யஸூக்தி ஸாகரத்தில் ஆழவிழிந்து அமுதத்தை அருந்தி அரியபெரிய மணி மாணிக்கங்களை அணிந்து அகமகிழ்பவனும் அடியேனே. இத்தகைய பாக்யமில்லாதவர்கள் எதிரம்பு கோத்து இடர்ப்பட்டு நிற்கிறார்கள்.

நான்கு பகுதிகளாக எழுத மனங்கொண்ட இந்தச் சரிதையில் இவ்வளவோடு முதற்பகுதியை முடிக்கின்றேன். ... ... ... *

**தானேயெழுதிய தன்சரிதையில் முதற்பகுதி முற்றிற்று.**

ஸ்ரீ:

# தானேயெழுதிய தன்சரிதையில்

## இரண்டாவது பகுதி

திருவல்லிக்கேணியில் வேத வேதாந்தவர்த்திநீஸபை ஏற்பட்டு ஏறக்குறைய எழுபது வருஷமாகிறது. 40வருஷங்களுக்கு முன்வரையில் இந்த ஸபையின் காரியங்கள் வெகு உன்னதமான நிலையில் நடந்துவந்தன. வருஷந்தோறும் ஆவணி மாதத்தில் ஸாமாந்யசாஸ்த்ரங்களிலும் உபயவேதங்களிலும் உபயவேதாந்தங்களிலும் பரீக்ஷைகள்நடத்தி ஸன்மானமளிப்பதென்றுநடந்துவந்தது. வருஷந்தோறும் 50, 60 வித்யார்த்திகளுக்குமேல் பரீக்ஷைக்கு வருவார்கள். ப்ரஸித்தர்களான வித்வான்கள் பரீக்ஷகர்களாக எழுந்தருள்வர்கள். நியாயத்தில் வாக்யார்த்த சர்ச்சைகளும் நடைபெறும். அக்காலத்தில், வானமாமலைபர்யந்தமான தென்னுடுகளிலிருந்தும், மைஸூர் பர்யந்தமான மேல்நாடுகளிலிருந்தும் வித்யார்த்திகள் பரீக்ஷைக்கு வந்து கொண்டேயிருப்பார்கள். அக்காலத்தில் அடியேன் திவ்வியப் பிரபந்தங்களை வியாக்கியானங்களோடும் அதிகரித்து "மூலத்திலும் வியாக்கியானங்களிலும் ஸூர்க்கத்திப் பரீக்ஷை கொடுக்க ஸித்தமாயிருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டிருந்தவன். ஸூர்க்கத்திப் பரீக்ஷையாவது, 'கத்தியைத் தீட்டி எதிரே வைத்திட்டுப் பரீக்ஷை செய்யுங்கள்; பரீக்ஷையில் தப்பினுல் அந்தக் கத்தியினுலே நாக்கை யறுத்திடுங்கள்' என்று சொல்லிப் பரீக்ஷை கொடுப்பது. இத்தகைய பரீக்ஷையை 19-ஆம் பிராயத்தில் அந்த ஸபையில் கொடுக்கச் சென்றேன். மூலத்தில் மட்டுமன்று, வியாக்கியானங்களிலும். அப்போது அந்த ஸபாவித்வான்கள் செய்த பரீக்ஷையில் சிலவற்றை இங்குத் தெரிவிக்கிறேன். [ஸ்ரீமதுபயவே மஹாவித்வான்—திருமழிசை வரதாசார்யர் ஸ்வாமியும் மற்றொரு தமிழ் வித்வானும் எனக்குப் பரீக்ஷகர்கள்.]

(1) நாச்சியார் திருமொழியில் முதற்பதிகத்தில் ஒன்பதாம் பாட்டை [*தொழுது முப்போது முன்னடிவணங்கி யென்கிற செய்யுளை] எழுதிக் காட்டு என்றூர்கள். உடனே அவர்களது கருத்தையறிந்த அடியேன் அப்பாட்டின் இரண்டாமடியில் முற்கூற்றைமட்டும் எழுதிக்காட்டினேன்—"பழுதின்றிப் பார்க்கடல் வண்ணனுக்கே" என்று எழுதிக்காட்டினேன். இங்கு புத்தகங்களில் 'பாற்கடல்' என்றே பலரும் பதிப்பித்திருக்கின்றூர்கள்; 'பால் - கடல்' என்று கருதி அங்ஙனம் பதிப்பித்தார்கள். அது பூருவாசாரியர்களின் வியாக்கியானத்திற்குச் சேராது: பார் - கடல் [பார் சூழ்ந்த கடல்] என்று ஸ்பஷ்டமாகக் காட்டிப் பெரியவாச்சான் பிள்ளை உரைவகுத்துள்ளார். அதை நான் கவனித்திருக்கிறேனு என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவே அவர்கள் இப்பாட்டை யெழுதிக் காட்டும்படி கட்டளையிட்டார்கள். அதைத் தெரிந்துகொண்ட வடியேன் 'பாட்டை முழுவதும் எழுதுவது எதற்கு? அப்பகுதியைமட்டும் எழுதினுல் அவ்வித்துவான்கள் உகப்பர்கள்' என்றறுதியிட்டு அவ்வளவே யெழுதிக் காட்டினேன்.

(2) பெரியாழ்வார் திருமொழியில் (4-9-1) *மரவடியைத் தம்பிக்கு* என்னுஞ் செய்யுளை யெழுதக் கட்டளையிட்டார்கள். அச் செய்யுளில் மூன்றுமடியின் பிற்கூற்றை மட்டும் எழுதிக் காட்டினேன்—'திருமங்கை மலர் கண்ணும்' என்றெழுதிக் காட்டினேன். இங்கும் புத்தகங்களில் "மலர்க்கண்ணும்" என்றே பலரும் பதிப்பித்துள்ளார்கள். மலர்போன்ற கண் என்னும் பொருளில்தான் அங்ஙனே சந்தியாகும்; பூருவர்களின் வியாக்கியானம் அங்ஙனமில்லை; மலர்கின்ற கண் என்